KALKI 24.10.93 ரூ. 3.00

கல்கி



தீபாவளி புடைவை: என்ன புதுமை?

உங்கள் குழந்தை நன்றாக எடை போடுவதற்கு சமவிகித ஊட்டச் சத்து அத்தியாவசியமானது.

குழந்தைகள் சும்மா எடை போட்டால் மட்டும் போதாது. அவர்கள் 'சரியான' முறையிலே எடை போட வேண்டும். குறைவாகவும் கூடாது, மிகவும் அதிகமாகவும் கூடாது. குழந்தைகள் 'சரியான' அளவில் எடை போட வேண்டுமானால் தசைகளையும், திசுக்களையும் வளர்ப்பதற்கும் ரத்த விருத்திக்கும் உதவக் கூடிய **புரோட்டீன்கள்** தேவை.

இந்த புரோட்டீன்களைப் பெறுவதற்குச் சிறந்த வழி **ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைத் தர** வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு **4 மாதங்கள் ஆன பிறகு** பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு உங்கள் குழந்தைக்குத் தேவைப்படுகிறது.

எனவேதான் தாய்மார்கள் **செரிலாக்கைத்** தேர்ந்தெடுக்கின்றனர். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவான செரிலாக்கில் புரோட்டீன்கள் செறிந்துள்ள இரண்டு முக்கிய பொருட்களான பாலும் கோதுமையும் உள்ளன. கொழுப்புச் சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்களும் சம அளவில் கலந்துள்ளன. மேலும் இதற்கு வைட்டமின்கள் A, D, E, B-காம்ப்ளெக்ஸ் மற்றும் C பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்போது நெஸ்லேயின் **புரட்சிகரமான புதிய Z-லைன் என்ஸைமேட்டிக் முறைப்படி** தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகிறது. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகிவிடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு புரோட்டீன்கள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை 'சரியான' முறையிலே எடை போடுவதற்குத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு இது.





MudraNES0142 TML

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

இலவசம். செரிலாக் பேபி கேர் புத்தகம்
உங்கள் குழந்தையின் வயது/பிறக்கக் கூடிய தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை எமக்கு எழுதுக: செரிலாக், தபால் பை எண் 31, புது தில்லி - 110 035.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.

தி.மு.க வில் பிளவு :

'சென்ட்டிமென்ட்' நாடகங்களில் அலுப்பு!



ஆகஸ்டு பதினைந்தாம் தேதி கல்கி இதழுக்குப் பேட்டியளித்த கருணாநிதி, ''மத்தியப் புலனாய்வுத் துறை, தி.மு.க வில் பிளவை ஏற்படுத்த முயற்சி செய்கிறது'' என்று குற்றம் சாட்டினார். ''தி.மு.க. போன்ற வலுவான மாநிலக் கட்சியை உடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசுக்குக் கூர்மையான கண் உண்டு'' என்றார்.

இப்படிச் சொன்னவரே, இன்று மத்தியப் புலனாய்வுத் துறையின் அறிக்கையை அப்படியே வேத வாக்காக ஏற்றுச் செயல்படுவது விந்தையான விஷயமாக இருக்கிறது. 'விடுதலைப்புலிகளால் கலைஞரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்' என்ற அளவில் புலனாய்வுத் துறை அறிக்கையை ஏற்று சிறப்புப் பாதுகாப்பு பெறட்டும், வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் அதில் வை.கோவைத் தொடர்பு படுத்தி, புலனாய்வுத் துறை கூறியதை அப்படியே கலைஞர் ஏற்க வேண்டிய அவசியமென்ன? ஒருவேளை, புலனாய்வுத் துறையின் ஏஜெண்ட்டாகக் கோபால்சாமி செயல்படுவதாக மு.க. கருதுகிறாரா? அவ்வாறானால் ஏன் அதை வெளிப்படையாகக் கூறவில்லை? கோபால்சாமியை நேரில் அழைத்துப் பேசுவதை விடுத்து, ஸி.பி.ஐ. அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிடப் போக கோபால்சாமி, ''அது உளவு நிறுவனத்தின் சதி'' என்று கூறி மறுக்க, ''தன்னைத் தலைவராக சித்திரித்துக் கொள்கிறார் கோபால்சாமி'' என்று கலைஞர் சீற, ''உங்களுடைய சம்மதத்தின் பெயரிலேயே ஒருவரைத் (ஸ்டாலின்) தலைவராகக் காட்ட முயற்சி நடந்து கொண்டிருக்கிறது'' என்று வை.கோ. பதிலடி கொடுக்க, அதிரடி வைத்தியமாக 'அரசியல் ஓய்வு' என்று சென்டிமென்ட் கார்டைப் போட்டார் கலைஞர்.

தாம் ஓய்வு பெறுவதை வை.கோ. தாங்க மாட்டார், ஓடி





"அதோ போறாரே, அவர் நிறை குடங்க!"

"இந்தத் தண்ணி கஷ்டத் திலுமா?"

- எஸ். ராகவேந்திரா.

வந்து காலில் விழுவார் என்று கலைஞர் எதிர்பார்த்திருக்கலாம். அது நடக்கவில்லை. தொண்டர்களிடையேயும் பெரிய அளவில் எழுச்சி ஒன்றையும் காணோம். பார்த்தார் கலைஞர். ''தொண்டர்களின் வேண்டுகோளின் பேரில் வாபஸ்'' என்று அந்தர் பல்டி அடித்து விட்டார்.

யாரையும் சந்திப்பதைத் தவிர்த்து வந்த கோபால்சாமியை டைரக்டர் பாரதிராஜா, வைரமுத்து, தயாரிப்பாளர் தாணு ஆகியோர் மட்டுமே சந்தித்தனர். அவர்களைப் பேசவிடாமல், பெரும்பகுதி நேரம், கட்சித் தலைமையால் தனக்கிழைக்கப்பட்ட அநீதிகளைப் பட்டியலிட்டுக் காட்டினாராம் வை.கோ! குறிப்பாக, தலைவர் உயிருக்கு ஆபத்து என்று ஸி.பி.ஐ. அறிக்கையை உள்ளடக்கி வந்த தமிழக அரசின் கடிதத்தைப் பற்றித் தம்மிடம் கலந்து பேசாமல் நேரடியாகப் பத்திரிகைகளுக்குக் கொடுத்ததுதான் தம்மை வதைக்கிறது என்று கூறி, தம் ஒரே தலைவர் கலைஞர் தானென்றும், மாறன் போன்றவர்களின் தவறான ஆலோசனைகளைக் கலைஞர் கேட்பதால்தான் பிரச்னைகள் எழுகின்றன என்றும் வை.கோ. அவர்களிடம் விளக்கினாராம். முப்பெரும் விழாவுக்கு முன்னதாகக் கலைஞரையும், வை.கோ.வையும் சந்திக்க வைத்து விட வேண்டும் என்ற சிலரின் முயற்சி தோல்வியடைந்தது.

இந்த நிலையில் வை.கோவுக்கு ஆதரவு கொடுத்து தண்டபாணி என்ற தொண்டர் தீக்குளித்து மரணமடையவே, வை.கோ. அந்தத் தொண்டரின் உடலுடன், அவரது ஊருக்குப் புறப்பட்டுவிட்டார். கலைஞருக்காகவும் ஒருவர் தீக்குளித்து கணக்கை நேராக்கி விட்டார்! பகுத்தறிவு எப்படியெல்லாம் செயல்படுகிறது!

முப்பெரும் விழாவில் பேசியவர்கள், நடந்து வரும் சர்ச்சையைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் மிகவும் ஜாக்கிரதையாகப் பேசினார்கள். வழக்கமாகத் தி.மு.க. கூட்டங்கள் என்றால், வை.கோ. பாட்ஜ், காஸெட், காலண்டர், ஆகியவை நன்றாக விற்கும். ஆனால் முப்பெரும் விழாவின் போது, இவைகளை யாரும் விற்கவில்லை.


கலைஞர் கடைசியாகப் பேசி முடிக்கும் போது, ''எனக்கு ஒரு முடிவு ஏற்பட்டால், என் உடலை அடக்கம் செய்வதற்கு முன், அறிவாலயத்தை நான்கு சுற்று சுற்றி விட்டுச் செல்லுங்கள்'' என்று மறுபடி செண்டிமெண்ட் பேச, தொண்டர்கள் முகம் இறுகிப் போனது. அறிவாலயத்தின் முன்புறம் நடந்த இந்தக் கூட்டத்துக்கு சென்னை மற்றும் சுற்றுப்புறங்களிலிருந்து தொண்டர்கள் வந்திருந்தார்கள். சுமார் 10,000 பேர் இருக்கும்!

கூட்டம் முடிந்து வரும் போது ஆரம்பக்காலத் தொண்டர் ஒருவரிடம் பேச வாய்ப்பு கிடைத்தது. ''நடந்து வரும் சர்ச்சை கூடிய சீக்கிரம் முடிந்து விடும். இலங்கைக்குச் சென்று வந்ததைத் தவிர தமக்கும் விடுதலைப் புலிகளுக்கும்

"தேர்தலில் உங்களுக்கு ஒரே ஒரு வோட்டு விழுந்ததாமே, யார் போட்டிருப்பார்கள்?"

"நான்தான் ஜெயிப்பேன் என்று அடித்து சொன்ன மரத்தடி ஜோசியராயிருக்கும்!"

- அ. ஷண்முகசுந்தரம்.




தொடர்பு இல்லை என்று வை.கோ கூறுகிறார். ஆனால் அதன் பின்தான் பத்மனாபா கொலையாளிகளுக்கு ஜாமீன் ஏற்பாடு செய்தார்; தன் தம்பி மூலம், காயமடைந்த புலிகளைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார். ''புலிகளுடன் இனி எனக்கு எந்தவிதத் தொடர்பும் கிடையாது; அனுதாபமும் இல்லை'' என்று வை.கோ வன்மையாக அறிக்கை விட வேண்டும். அதே போல ஸ்டாலினைத் தலைவரின் வாரிசாகக் காட்டுவதும் தவிர்க்கப்பட வேண்டும். வை.கோ கூட்டங்களுக்குத் தடைகள் உண்டாக்கிவிட்டு, ஸ்டாலினை மட்டும் இஷ்டப்படி பேச அனுமதிப்பது எந்த விதத்தில் நியாயம்? இரண்டு தரப்பிலும், தனிப்பட்ட நபர்கள் தங்கள் ஆதாயங்களுக்காக கலைஞரையும், வை.கோவையும் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை இருவரும் புரிந்து கொண்டு செயல்பட்டால் பிரச்னை இருக்காது'' என்றார் அவர்.

வை.கோவை நீக்குவதா, வேண்டாமா என்ற கேள்வி இன்னமும் கழகப் பிரமுகர்களுக்குக் கவலையளித்துக் கொண்டிருக்கிறது. முப்பது மாவட்டச் செயலர்களில், 13 பேர்தான் வை.கோவை நீக்க வேண்டும் என்று உறுதியுடன் கூறியுள்ளார்கள்; எட்டு பேர் வை.கோ ஆதரவாளர்கள்; ஒன்பது பேர் நடுநிலை. இதனால் தலைமை தயங்குகிறது.

'இந்த விவகாரத்தில் தனக்கு ஆதரவாகத் தீர்மானம் போட்ட மாவட்ட, ஒன்றியக் கழகங்கள் மீது ஒரு நடவடிக்கையும் எடுக்கக் கூடாது; கடந்த ஒரு வருடத்தில், கழகத்திலிருந்து நீக்கப்பட்ட தனது ஆதரவாளர்களை மீண்டும் சேர்க்க வேண்டும்.' - இவை, வை.கோ. போடும் நிபந்தனைகள்.


''நடந்து முடிந்த இடைத் தேர்தல்களில் கழகம் வெற்றி பெறாவிடினும், வாங்கிய வோட்டுக்கள் முன்னை விட அதிகம் என்பது எங்களுக்கு உற்சாகத்தைத் தந்திருக்கிறது. இந்த நிலையில், இந்தச் சர்ச்சைகள் எங்கள் நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றன!'' என்றார், உண்மையான உடன் பிறப்பு ஒருவர். இதைத் தலைவர்கள் உணராவிட்டால், தி.மு.க. மேலும் பலவீனமடையப் போவது உறுதி.

- ப்ரியன்



''கொலு வைக்காமலும் இருக்க முடியலை; கொலு வைக்கவும் இடமில்லை. அதான் வால் பேப்பர் வாங்கி ஒட்டியாச்சு!''

- ஜூலி



''மகாராஜா சோகமே உருவா உட்கார்ந்திருக்காரே, ஏன்?''

''மகாராஜா மாறு வேஷத்துல நகர் வலம் போனதும், ஒரு திருடன் மகாராஜா வேஷத்தில் அரண்மனைக்குள் புகுந்து எல்லாத்தையும் சுருட்டிக்கிட்டு போய்ட்டானாம்!''

- ஆர். ரமேஷ்பாபு.

''ஆபீசுக்கு லேட்டாயிடுச்சின்றதால செய்த வரைக்கும் டிபன் கேரியரில் வைக்கச் சொன்னேன்.''

''ஏதாவது அயிட்டம் குறையுதா?''

''அரிசி, பருப்பு, வெங்காயம், தக்காளி, புளின்னு ஒண்ணுவிடாம கேரியரில் வச்சிருக்கா!''

- க. இராமலிங்கம்.



தீபாவளி புடைவை:

என்ன புதுமை?


• ஷோரூமில் அமளி....



தனக்கு வரப்போகும் கணவனைத் தேர்ந்தெடுக்கும் அதிமுக்கியமான வாழ்க்கைப் பொறுப்பையே முழுக்க முழுக்கப் பெற்றோரிடம் ஒப்படைத்துவிடும் பெண்கள் கூட, இந்தப் புடைவை விஷயத்தில் ஒரு போதும் விட்டுக் கொடுக்கத் தயாராயிருப்பதில்லை! அலுக்காமல் சளைக்காமல் அத்தனை கடைகளிலும் ஏறி இறங்கி, அடுக்குகளில் உள்ள அத்தனை புடைவைகளையும் பிரித்துப் போடச் சொன்னதோடு திருப்தியடையாமல், இடுக்குகளிலும் தேடிப் பார்த்து, ''ஆ... அந்தக் கிளிப்பச்சையை எடுங்கள்... அதோ... அந்த ராணி பிங்க் கலரை எடுங்கள்...'' என்று சேல்ஸ் மேன்களைத் திணறடிக்காமல் விடுவதில்லை.

இதுமாதிரியானத் திணறல்களைச் சமாளிப்பதே விற்பனையாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் ஒரு பெரும் சவால்தான். அதனால்தான் ஒவ்வோர் ஆண்டும் யோசித்து யோசித்துப் புடைவைகளில் புதுப்புது டிசைன்களை அறிமுகப்படுத்துகிறார்கள்.

இப்படி இந்த ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியிருப்பது தான் 'காசி டு காஞ்சி' என்னும் கலெக்‌ஷன். பாரம்பரியப் பச்சையில் கெட்டி ஜரிகை, வைர ஊசி போலவே பட்டு நூல் சேலை, உடல் முழுவதும் புட்டாக்கள் வாரியிறைத்த மயில் கழுத்து, கிளிப்பச்சையும் சஃபையர் நீலமும் கலந்த ஷார்ட் கலர், தலைப்பை அடுத்த ஒன்றரை மீட்டருக்கு ஜரிகைக் கட்டமும் அதற்குப்பின் பிளெயின் உடலும் கொண்ட கறுப்பு வண்ணம் என்று ஏகப்பட்ட டிசைன்கள் 'காசி டு காஞ்சி'யில் கண்ணைக் கவருகின்றன.



* புடைவைகளின் அணிவகுப்பு...

''கறுப்பு, வெள்ளை போன்ற கலர்களைத் தென்னாட்டுப் பெண்கள்தான் பண்டிகைகளுக்கும் மற்ற விசேஷங்களுக்கும் உகந்ததல்ல என்று ஒதுக்குகிறார்களே தவிர டில்லி, பம்பாய் போன்ற வடமாநிலங்களில் ஏகப்பட்ட டிமாண்ட்!'' என்கிறார் கோ-ஆப்டெக்ஸின் பொது மேலாளர் ஆர். பால்ராஜ்.

இந்த ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் அறிமுகம் செய்பவற்றில் இன்னொரு ஸ்பெஷாலிட்டி, நுணுக்கமான ஜரிகை வேலைப்பாடு கொண்ட முந்தானைகள். தலைப்பில் பனாரஸ் புடைவைகளின் டிரேட் மார்க்கான நீளவாட்டு மாங்காய் டிசைனைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கூடவே காஞ்சியின் கெட்டிக்கரை டிசைனும் சேர்த்து நெய்யப்பட்ட தலைப்பு என்பதால், இன்றைய இளம்பெண்கள் விரும்பிக் கட்டிக் கொள்ளும் குஜராத்தி பாணிக்கு மிகவும் ஏற்றது. விலை? மூவாயிரத்திலிருந்து துவங்குகிறது!


*

''தீபாவளி சமயத்தில், மூவாயிரம் நாலாயிரம் ரூபாய் ரேஞ்சுகளில் நிறையப் புடைவைகள் விற்பனையாகும்!'' என்கிறார்கள் 'நல்லி'யின் விற்பனையாளர்கள்.

புடைவைகளுக்கு அழகு சேர்க்கும் வகையில், பார்டர் மேல் பட்டு பீட் புட்டாக்கள், பாக்கு நிறமும் ஃபான் கலரும் கலந்த 'ஷார்ட்' தலைப்பில் கெட்டி ஜரிகை, தேவி புஜூ உடல்-சிவப்பு பார்டரில் ஜரிகைக் கட்டமும் புட்டாக்களும், வெள்ளை பார்டரில் ஜரிகைக் கிளிகள் என்று ஏகப்பட்ட கற்பனைகளில், 'நல்லி'யின் இந்த ஆண்டு ஸ்பெஷல்கள்!

ஒருபக்க பார்டருக்கு அத்தனை வரவேற்பு இல்லாத காரணத்தால், இந்த ஆண்டின் எல்லா பட்டுப்புடைவை டிசைன்களுமே இரு பக்க பார்டர்களோடுதான் வரவிருக்கின்றனவாம், ராசியில். ஜரிகை இல்லாமல் நூல் வேலைப்பாடு மற்றும் கட்டங்களைக் கொண்ட டிசைன்கள், ஜரிகை புட்டாக்கள், பார்டர் வேலைப்பாடுகளுடன் கூடிய புடைவைகளை அறிமுகப்படுத்துகிறது ராதா சில்க் எம்போரியம்.

''சென்ற ஆண்டு பர்பிள் கலர் நல்ல விற்பனை. இந்த ஆண்டு எந்தக் கலர் என்று விற்பனை ஆரம்பிக்கும்



* 'நல்லி'யில்...

போதுதான் தெரியும். என்ன காரணமோ, ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு கலர் அதிகமாக விற்பனை யாகிறது!'' என்கிறார்கள் அதன் விற்பனை யாளர்கள்.



''எங்களுடையது ஒரிஜினல் ஜரிகை. பட்டும் கைநெசவு ஆதலால் எங்களுடைய புடைவைகளுக்குக் கூடுதல் மதிப்பு!'' என்கிறார் காதி கிராமோத்யோக் பவன் மேலாளர் டி. வி. ராகவலு. தமிழகத்தில் நெய்யப்படும் இந்நிறுவனத்தின் பட்டுப் புடை வைகள், பெங்களூரிலும் பாண்டிச் சேரியிலும் போய் பிரிண்ட் செய்யப்பட்டு வருகின்றன. கிளி, மயில் மற்றும் புராணக் காட்சிகள் என்று பல்வேறு டிசைன்களில் நெய்யப்பட்ட பாலுசா புடை வைகள், டஸ்லர், டங்காய் என்று அழைக்கப்படும் வேற்று மாநிலப் பட்டுகள் என்று இங்கும் ஏகப்பட்ட டிசைன்கள் கண்ணைப் பறிக்கின்றன.


தமிழக நெசவாளர்கள் பட்டில் காட்டும் வேலைப் பாடுகள் அனைத்தையும் பருத்தியில் காட்டியிருக்கிறார்கள் ஆந்திர நெசவாளர்கள். ''ஆப்கோ''வில் இவற்றைக் காணலாம். (ஆந்திர மாநில கோ-ஆப்டெக்ஸ்).

மயில், கிளி, யானை டிசைன்கள் கொண்ட போச்சம்பள்ளியைத் தவிர, பட்டு பார்டரும் முந்தானையும் கொண்ட கத்வால், முந்நூறு ரூபாயில் தொடங்கி ஐயாயிரம் வரை தாவும் வேங்கடகிரி, நடுத்தர வயதுப் பெண்கள் விரும்பி அணியும் பாணியில் பிளெய்ன் உடலும் ஜரிகைக் கரைகளும் கொண்ட குண்டூர்ப் புடைவை... என்று ஆப்கோ முழுக்கப் பருத்தியின் ஆட்சிதான்!

'காட்டன் புடைவையா? கஞ்சி போட்டு, இஸ்திரி போட்டு... அப்பப்பா, எத்தனை வேலை!' என்று அலுத்துக் கொள்கிற ஆபீஸ் போகும் பெண்களின் வரப்பிரசாதமாக இருப்பவை, 'காட்டன்' சில்க்குகள்.

மைசூர் சில்க் போலவே காட்டன் கிரேப், பாலியஸ்டர் இழை கலந்த புடைவைகள், சில்க் ஃபினிஷிங் ஷிபான், சிந்தடிக் பட்டு, கருங்காத பருத்தி என்று காட்டன் பூராவும் செயற்கை இழைகளின் சீராட்டல்! எல்லாப் புடைவைகளும் நடுத்தர வர்க்கத்தினரின் பட்ஜெட்டுக்குள் அடங்க வேண்டு மென்பதால், முன்பு வரவழைத்துக் கொண்டிருந்த விலை அதிகமான சுத்த ஷிஃபானை இந்த ஆண்டு ஓரங்கட்டி விட்டார்கள். தமிழகப் பெண்களின் ரசனைக்குத் தக்கபடி டிசைன்களை உருவாக்குவதில் இப்போது காட்டனும் முன்னணியில் இருக்கிறது.

இதே பாணியில், இன்றைய நாகரிகத்துக்கு ஈடுகொடுப்பவைகளில் லக்ஷ்மி மில்ஸின் 'ராகா' சேலைகளும் முன்னணியில் இருக்கின்றன. பட்டுடன் சேர்ந்த பருத்தி, ஜரிகை யுடன் சேர்ந்த பருத்தி என்று இங்கும் பல டிசைன்கள். 'நான் உடுத்தும் புடைவை



...ப்கோவில்...

இன்னொருவரிடம் இருக்கக் கூடாது; என் புடைவை டிசைன் எனக்கு மட்டும்தான்' என்று நினைப்பவர்களைத் திருப்திப்படுத்துவதற்கென்று ஒரு டிசைனில் ஒரு புடைவை மட்டுமே நெய்யப்படும் கைத்தறிப் புடைவைகளும் 'ராகா'வின் இன்னொரு ஸ்பெஷாலிடி.

நவீனமாகவும் இருக்க வேண்டும்; அதே சமயம் பாரம்பரியப் பழைமையும் இருக்க வேண்டும் என்று விரும்புபவர்களைத் திருப்தி செய்கிறது 'ஊர்வசி'. ''பழைய டிசைன்களுக்கு இன்னமும் மவுசு இருக்கிறது. வேல்தாரி, ஜலந்தர்பேட் எல்லாம் இன்றும் பெண்களால் விரும்பி வரவேற்கப்படுகிறது!'' என்கிறார் 'ஊர்வசி'யை நடத்தும் திருமதி உஷா ரகுநாதன்.

''ருத்ராட்ச பார்டர்தான் இன்று விரும்பப்படும் டிசைன்...'' என்று சொல்லும் உஷா ரகுநாதன், மயில்கண் வேஷ்டியில் ராமர் பட்டாபிஷேகம் போன்ற இதிகாசக் காட்சிகளை ஒரு தலைப்பில் (முந்தானையில்) எம்பிராய்டரி செய்து அதையே இன்றைய ஃபாஷனாகவும் அறிமுகப் படுத்தியிருக்கிறார். ''இதற்கு (அட்டைப் படம் பார்க்க) பம்பாய் போன்ற வடமாநிலங்களில் ஏகப்பட்ட வரவேற்பு!'' என்கிறார் இவர்.


இப்படி ஆண்டுதோறும் அறிமுகமாகும் ஏகப்பட்ட 'அரண்மனைக்கிளிகள்' பறந்தாலும் அன்றாடக் கங்கடியின் மதிப்பும் குறைந்து போய்விடாது என்பதற்கு 'ரங்காச்சாரி'யில் காணப்படும் கூட்டமே அத்தாட்சி.

''எங்களுடைய கங்கடி மார்க்கெட் எப்போதுமே சரியாத மார்க்கெட்!'' என்று கூறும் ரங்காச்சாரியில், 145 ரூபாயிலிருந்து 1,500 ரூபாய் வரைக்குமான கங்கடிப் புடைவைகள் பல்வேறு ரகங்களில் பளிச்சிடுகின்றன!

– நிர்மலா சக்கரவர்த்தி

அட்டையில் : ஆர்த்தி, தீபா

அட்டை வண்ணப்படமும் படங்களும்: கோபிநாத்



உங்கள் மழலைச் செல்வம் அவனது மென்மையான மிருதுவான உலகம்.




அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.

உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.

ஆம். நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.

பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.

உங்கள் செல்வ மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.



லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.


இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25,
புதுடில்லி-110016

நெஸ்டம்

எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

TS McCann/NESTUM/1492 TM

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தை துணை உணவும் கொடுங்கள்



அவன் கிடக்கிறான், வாரிசைத் தேத்தா... ஒரு கோடி சர்டிபிகேட் வேணும்னாலும் நான் குடுக்கிறேன்!
ISI
GUARANTEED 100% PURE
சி.பி.ஐ.
அரசியலுக்கு நீ முழுக்குப் போடணுமய்யா, இல்லையேயா, சாணியில் குளி, இந்தா...
கட்சியிலிருந்து நீ விலக்கப் படணுமய்யா, இல்லையேயா, சாணி அடிக்காம விட மாட்டேன்!
வை.கோ.
மாமா, காது, காது... வலிக்குது, விட்டுடுங்க...
காணலையா திருக்கறே? இரு, இரு, நரசிம்மராவ் மாமாகிட்டே சொல்லி உன்னை என்ன பண்றேன் பாரு!
சேஷன்
எம்.எஸ். கில்
ஜி.வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி



கல்கி

1993
அக்டோபர் 24
மலர் : 52
இதழ் : 13
ஸ்ரீமுக
ஐப்பசி 8



தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

தேர்தல் வருகிறது; காங்கிரஸ் தூங்குகிறது!

வடமாநிலத் தேர்தல்கள் நெருங்க நெருங்க, நடக்கின்ற காரியங்கள் வருத்தத்தை மட்டுமின்றி, அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன. லக்னோவில் ஒரு பேரணியில் பங்குகொண்டு திரும்பினார் பிரதமர். இதற்கு மக்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவில் இல்லை என்றும், கூலிப் பட்டாளம்தான் திரட்டப்பட்டது என்றும் எதிர்த்தரப்பில் கூறப்படுவது ஒருபுறமிருக்க, இந்தப் பேரணியை மாபெரும் வெற்றி என்று கருதும் உ.பி. காங்கிரஸ்காரர்களிடையே கூட, "என்னால்தான் வெற்றி; உன்னால் அல்ல!" என்று குடுமிப்பிடி சண்டை நடந்து கொண்டிருக்கிறது! இத்தகைய பயங்கரமான உட்கட்சிப் பூசல்கள் தலைமைப் பீடம் முதல் வட்டச் செயலாளர் வரை அனைத்து இடங்களிலும் காங்கிரஸுக்குள் பரவியுள்ளது. இதன் நிகர விளைவு, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு அமைத்து வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் கைவிடப்பட்டு, இப்போது காங்கிரஸ் காரியக் கமிட்டியே பட்டியலை உறுதி செய்கிறது.

இவையெல்லாம் காங்கிரஸின் பலவீனத்தையே உணர்த்துகின்றன. அதனிடம் இருக்கும் ஒரே பலம் பணபலம்தான். விளம்பரங்களுக்காக மட்டும் 50 கோடி ரூபாய் செலவிடத் தீர்மானித்துள்ளது! விளம்பர ஆர்டர்களைப் பிடிக்க, விளம்பர ஏஜென்ஸிகளுக்கிடையில் போட்டா போட்டி இருக்குமென்றால் புரிந்து கொள்ளலாம். ஆனால் இந்தப் பணத்தைக் காங்கிரஸ் கட்சிக்குள் யார் கையாள்வது, யார் மூலமாக இந்தத் தொகை, விளம்பர ஏஜென்ஸிகளுக்குப் போவது என்பதில் நடக்கிறது போட்டா போட்டி! காங்கிரஸுக்குள் "கமிஷன் கலாசாரம்" இந்த அளவுக்கு வேரோடிப் போயிருக்கிறது.

வேட்பாளருக்கான டிக்கெட் பெறுவதில் காங்கிரஸுக்குள் இருப்பதை விடவும் அதிகமான போட்டா போட்டி, பி.ஜே.பி.யில் இருக்கிறது! மாநிலங்களில் பி.ஜே.பி. அரசைக் கலைத்தது, தேர்தல் அறிவிப்புக்குக் காத்திருந்து பாபர் மசூதி தொடர்பான வழக்குப் போட்டது போன்ற காரியங்கள் காங்கிரஸிடம் வெறுப்பை வளர்த்து, பி.ஜே.பியிடம் அனுதாபத்தை உண்டாக்கியிருப்பதால், "வெற்றி உறுதி" என்று கருதப்படுவதே, வேட்பாளர் டிக்கெட்டுக்கான வரலாறு காணாத போட்டா போட்டிக்குக் காரணம். வேட்பாளர்களை நிர்ணயிக்கத் தலைவர்கள் கூடி ஆலோசிக்கும் இடத்தில், வாழ்த்தொலிகள் மட்டுமல்ல, இன்றைய தினம் தலைவர்களின் பெயர் சொல்லி 'ஒழிக' கோஷமும் எழுகிறது! பி.ஜே.பி. இத்தகைய ஒழுங்கீனத்தை இன்று வரை கண்டதேயில்லை!

பணபலத்தைக் கொண்டு விளம்பரம் செய்தே வோட்டுக்களை அறுவடை செய்து விடலாம் என்று காங்கிரஸ் எண்ணினால், அது பழைய நிகழ்ச்சிகளிலிருந்து இன்னும் பாடம் கற்கவில்லை என்றே அர்த்தம். காங்கிரஸின் வெற்றிக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது, நமது மதச்சார்பற்ற ஜனநாயகத்தின் அருமை பெருமைகளையும் முக்கியத்துவத்தையும் மக்களிடையே சென்று வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு பிரசாரம் செய்வதுதான். மதச்சார்பற்ற அரசு என்பது மதங்களைப் புறக்கணிப்பதாக ஆகாது; எல்லா மதங்களும் சமம் என்ற அடிப்படையில், அனைவரும் ஒன்றுபட்டு, இந்தியராக, ஒப்புரவுடன் வாழ்வதுதான் காங்கிரஸ் விரும்புகின்ற மதச்சார்பின்மை என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இதை முன்விட்டுத்தான், தேர்தல் பிரசாரத்தில் மதத்தை நுழைக்கும் தவறைத் திருத்தத்தான், மசோதா கொண்டு வர நன்கு யோசித்து வருவதாகக் கூற வேண்டும். இதைச் செய்யாமல் தாமதப்படுத்தும் ஒவ்வொரு வினாடியும் ஒரு வோட்டை காங்கிரஸ் இழக்கும்.

'கிருஷ்ணா, ராமா, கோவிந்தா' என்று ஆண்டவன் பெயரால் வோட்டுக் கேட்பதே மக்களை அதிகமாகக் கவரும். "தேங்காய் உடைத்துப் பிரசாரத்தைத் தொடங்குவதைக் கூடத் தவறென்கிறார் நரசிம்மராவ்" என்றுதான் மேடை ஏறிப் பேசுவார்கள்.

வெற்றி காங்கிரஸுக்கா, பி.ஜே.பிக்கா என்பதல்ல பிரச்னை; இந்த நாடு எம்மதமும் சம்மதம் என்று கூறப் போகிறதா, அல்லது ஹிந்துத்துவ முத்திரை குத்திக் கொள்ளப் போகிறதா என்பதுதான்!



* நேசக் கரம்

● ரா. கோபாலகிருஷ்ணன், புதுக்கிராமம்.

? வள்ளி திரைப்பட வெற்றி கதையினாலா? ரஜினியினாலா?

! வெற்றிதானா? வசூலிலா? படச் சிறப்பிலா?

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? "அடுத்து வரும் தேர்தலில் போட்டியிட்டு ஜனதா கட்சி தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும்" என்று சு. சுவாமி கூறியுள்ளது பற்றி...?

! இதற்காக சுதர்சன், உ. ராஜாஜி, சீர்காழி வி. ரேவதி, வரிசையில் சு. சுவாமியைச் சேர்க்கலாம்.

● கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

? அண்மையில் படித்த, ரசித்த புத்தகம்?

! "May you be the Mother of a Hundred sons!" இந்தியப் பெண்கள் பற்றிய ஓர் அயல்நாட்டுப் பெண் எழுத்தாளரின் பார்வை. அசத்தலான நூல்.

● ஆர். பாலாஜி, திருச்சி – 20.

? கலைஞர் "நேசக்கரம்" என்ற படத்துக்குத் திரைக்கதை, வசனம் எழுதுகிறாராமே?

! அரசியலில்தான் நயவஞ்சகக் கரங்கள் அதிகமாகி விட்டன; சினிமாவிலாவது நேசக் கரங்கள் நீளட்டுமே என்ற நோக்கில் இருக்கும்.

* "ஆட்சியைப் பிடிப்பேன்"



● த. சங்கர், திண்டுக்கல்.

? புதிதாக நியமிக்கப்பட்ட தேர்தல் கமிஷனர்களை வரவேற்காமலும், அவர்களுக்கு உரிய அறைகளை ஒதுக்காமலும், தொலைபேசி இணைப்பைக் 'கட்' பண்ணியும் விட்டது நியாயமா?

! சிறுபிள்ளைத்தனம். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிற காரியம். யார் மீதோ கோபம், எங்கேயோ பாய்கிறது.

● அப்துன் நஸீர், வலங்கைமான்.

? 'ஹிந்து சகோதரர்களுக்கு முதல்வர் வேண்டுகோள் தான் விடுக்க முடியும்; கட்டாயப்படுத்த முடியாது' என்ற தங்கள் பதில் (10.10.93) தவறல்லவா. முதல்வருக்குச் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கிறது. சட்டமே போட முடியுமே?

! சட்டமன்றத்தில் உள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு என்ன சட்டம் வேணுமானாலும் இயற்றி விட முடியாது. அரசியல் சாசனத்துக்கு உட்பட்டுத்தான் முதல்வர் சட்டங்கள் இயற்ற முடியும். அல்லாது போனால் நீதிமன்றம் அதை ரத்து செய்துவிடும். இதனால்தான் முதல்வர் இருதாரப்



* சட்டம் போடலாமா?

பேனசிர் காட்சி



* கல்லறை வாசகம்!

பினருக்கும் வேண்டுகோள் விடுத்தார் - மத ஊர்வலங்கள் வேண்டாம் என்று.

● கோ. வீரராகவன், அறந்தாங்கி.

? "கும்பகர்ணனாகவே இருப்பேன்" என்றால் அர்த்தம் புரியவில்லையே?

! 'விபீஷணன் ஆக மாட்டேன்' என்று அர்த்தம்! அவர்கள் அகராதியில் ராவணன் ஹீரோ; ராமர் வில்லன்; விபீஷணன் துரோகி!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? "தன்னால் கழகத்துக்கு என்ன லாபம் என்று கருதுகிற ரத்த தானமாகத்தான் கோபால்சாமி வாழ்ந்தான்" என்று என் கல்லறையில் எழுதப்பட வேண்டும் என வை.கோ. கூறியது பற்றி...?

! "நான் இறந்து விட்டால் என் உடலை நாலு முறை அறிவாலயத்தை வலம் வரச் செய்யுங்கள்" என்ற கருணாநிதியின் கூற்றும் இதுவும் ஒன்றுக்கொன்று சேன லல்!

● ஆர். விஜி, அரகண்டநல்லூர்.

? முதல்வர் முன்னிலையில் "பாரதமாதா கி, ஜே!"

"மகாத்மா காந்தி கி ஜே!" என்று முழக்கமிட்ட தியாகி களை அ.தி.மு.க.வினர் சட்டையைப் பிடித்து இழுத்து அவமானப்படுத்தியது குறித்து...?

! வயது முதிர்ந்த அந்தத் தியாகிகளுக்கு இதனால் ஒரு அவமானமும் இல்லை. இதைவிட கோரமான முறை யில் பிரிட்டிஷ் ஆட்சி அவர்களை நடத்தியிருக்கிறது. அதற்கே அவர்கள் அஞ்சியதில்லை. தங்கள் நடத்தை யால் அ.தி.மு.க.வினர் தங்களைத் தாங்களே இழிவு படுத்திக் கொண்டார்கள்; தங்கள் தலைவிக்கும் அவமா னத்தைத் தேடித் தந்தார்கள்.

● கே. மணிகண்டன், ராஜாக்கமங்கலம்.

? பேனசிர் ஆட்சி நிலைக்குமா?

! அது அவர் எந்த அளவுக்கு நரசிம்மராவிஸத்தைப் பின்பற்றி "குதிரை வியாபாரம்" செய்கிறார் என்ப தைப் பொருத்திருக்கிறது.



✱ ஆட்சி நிலைக்குமா?

● கே. கலைச்செல்வன், சென்னை. ❑

? பூகம்ப நிவாரண நிதியின் தொகை, கூடக் கூட மன சில் துளிக்கூட மகிழ்ச்சியே ஏற்படவில்லையே, கவ னித்தீர்களா?


! ரொம்ப சரி. ஐரோப்பிய நாடுகள் மட்டுமே இதுவரை



✱ "ஓய்வு பெறுகிறேன்"

நிலைக்குமா?

ஆறு பில்லியன் டாலர் அளித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. உலக வங்கி, மற்றும் இதர உலக நாடுகளின் நன்கொடை, பிரதமரின் நிவாரண நிதி, பல்வேறு முதலமைச்சர் கள் சேகரித்து அளித்தது. இன்னும் பத்திரிகைகள், அரசியல் கட்சிகள் மூலம் வரு லான தொகை எல்லாம் சேர்த்தால் பிரமிக்க வைக்கும் அளவினதாகத்தான் இருக்கும். இந்தப் பணமெல்லாம் உருப்படியாக உரியவர்களுக்குப் போய்ச் சேருமா? அல் லது இடைவழியில் கணிசமாக உறிஞ்சப்படுமா? யாரறி வார் பராபரமே!



✱ வள்ளி - வெற்றிதானா?

● எஸ். என். ராகவன், பெல்லாரி.

? கிரிக்கெட் ஆடுவதிலிருந்து தாம் விலகி ஓய்வு பெறுவதாக ஸ்ரீகாந்த் அறிவித்துள்ளது பற்றி...?

! டெஸ்ட் பந்தயங்கள் மற்றும் அதிகாரபூர்வமான ஆட் டங்களிலிருந்து ஓய்வு பெறுகிறாரேயன்றி, கிரிக்கெட் உலகிலிருந்தே அல்ல. இன்றில்லாவிட்டால் நாளை நடக்க வேண்டிய விஷயம்தான். கவலைக்குரியது அது வல்ல. ஸ்ரீகாந்த் போலத் தமிழகம் வேறு எத்தனை பேரை உருவாக்கியுள்ளது என்பதுதான் கவனத்துக்குரி யது. இதற்கு ஸ்ரீகாந்த்தே நன்றாக உதவ முடியும்.

● அ. அப்துல்காதர், சிங்க பெருமாள்கோயில்.

? புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் கமிஷனர்களில் ஒருவ ரான ஜி.வி.ஜி. கிருஷ்ணமூர்த் தியை 'பதவிக்குப் பொருத்தமற் றவர்' என்று தினமணி விமர்ச னம் செய்கிறதே?

! பதவிக்குப் பொருத்தமானவ ராக இல்லாவிட்டால் என்ன சுவாமி? ஆட்சியில் இருப்பவ ருக்கு நெருக்கமானவராயிற்றே!

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? சேஷன் இனி வாலாட்ட முடி யுமா?

! அனுமார் வாலில் துணி சுற்றி, நெய் விட்டு, நெருப்பு வைத்தான் இலங்கேசுவரன். அனுமன் வால் ஆடாமலா இருந்தது? தர்மத்தை எடுத்துச் சொல்வதென்று தீர்மா னித்து விட்டவர்களுக்கு வாய்ப் பூட்டுப் போட முடியாது. அவர்க ளாகவே சலிப்படைந்து 'சே, போ' என்று விட்டால்தான் உண்டு.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கே. கலைச்செல்வன்,
8, அருள்நெறி நகர்,
ராஜகீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 073



✱ வாலாட்ட முடியுமா?

நீங்கள் கேட்டவை - தராசு



கொச்சி நகர பஸ் கிளிகள்!

கொச்சி டவுனில் பஸ் சர்வீஸ் நடத்துவது தனியார் நிறுவனங்கள். பஸ்கள் சிவப்பு நிறத்தில் மிகவும் சுத்தமாக இருக்கும்.

பஸ்கள் லார்ட் கிருஷ்ணா, செம்பருத்தி, குருவாயூர் கிருஷ்ணா, கிறிஸ்தோபர், ஜீஸஸ் கிறிஸ்து, அம்பிகா போன்ற பெயர்களில் உள்ளன.

ஒவ்வொரு பஸ்ஸிலும் டிரைவரைத் தவிர ஒரு கண்டக்டரும் இரண்டு கிளிகளும் (கிளீனரின் சுருக்கம்) இருப்பார்கள். பஸ்ஸை நடத்துவதில் இந்தக் கிளிகளின் பங்கு மிகவும் சுவாரசியமானது. முன்னும் பின்னும் புட்போர்டில் ஒவ்வொரு கிளி நின்று கொண்டிருப்பதால் பின் கிளியிடமிருந்து 'ரைட்' வாங்கி முன் கிளி மணியடித்தால்தான் வண்டி நகரும்! கிளிகளின் உதவி கூட்டத்தைக் கடக்கும் போது டிரைவருக்கு மிகவும் தேவையானது.

ஷண்முகம் ரோட் மேனகா தியேட்டர் வாசலில் நாள் முழுவதும் இரண்டு நிமிடங்களுக்கு ஒரு பஸ் வந்து கொண்டே இருக்கும். 'ஆலுவா, 'ஆலுவா' 'போர்ட் கொச்சி', 'போர்ட் கொச்சி' என்று கிளிகள் பிரயாணிகளை அறைகூவி அழைப்பார்கள். பஸ் ஸ்டாண்டில் நாம் ஜாக்கிரதையாக நிற்கவில்லையானால் ஏதாவது ஒரு கிளி நம்மை அணைத்து வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் விடுவார்!


பெண்கள் முன் வழியிலும் ஆண்கள் பின் வழியிலும்தான் ஏறி இறங்க வேண்டும். ரோமியோக்களின் ஜம்பம் இங்கு சாயாது. பிரயாணிகளிடம் முகம் சுளிப்பதோ திட்டுவதோ இவர்கள் அகராதியிலேயே கிடையாது.

கண்டக்டர்களும் கிளிகளும் நல்லவர்கள். வயதானவர்களுக்கும் கைக் குழந்தைகளுக்கும் வண்டியில் ஏறவும் இறங்கவும் வலிய வந்து உதவுவார்கள். கண்டக்டரிடம் தைரியமாக ஐம்பது ரூபாய் நோட்டை நீட்டலாம். முகம் சுளிக்காமல் பாக்கி சில்லறை கொடுப்பார். டிக்கெட் கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு வண்டியை வழியில் நிறுத்தி போரடிக்க மாட்டார்கள்.

திருப்திகரமானதும் சௌகரியமானதுமான இந்த பஸ் சர்வீஸை, சர்க்கார் பொதுவுடைமையாக்கிக் குட்டிச்சுவராக்காமல் இருக்க வேண்டுமே என்பதுதான் கொச்சிவாசிகளின் கவலை!


– பிரேமா நரசிம்மன்

கார் இல்லாத அமைச்சர்!



கார் இல்லாமல் ஓர் அமைச்சர் இருக்க முடியுமா? இருக்கிறார், கேரள நிதி அமைச்சர் உம்மன் சாண்டி! இவர் அமைச்சரானதும் அரசு இவருக்கு ஒரு அம்பாசிடர் காரை வழங்கியது. அது அடிக்கடி மக்கர் செய்து, அமைச்சரை நடுரோட்டில் விட்டு விடும். கடந்த இரண்டு ஆண்டுகளில் அதற்கான ரிப்பேர் செலவு மட்டும் 94,000 ரூபாய். பார்த்தார் நிதி அமைச்சர்! இந்தக் காரை இனியும் பயன்படுத்துவது மக்கள் பணத்தை விரயம் செய்வதாகும் என்று கருதி, அரசிடம் திரும்ப ஒப்படைத்து விட்டார். இப்போது, வங்கி ஊழியரான தமது மனைவியின் காரில்தான் காரியாலயம் செல்கிறார். வேறெங்கும் தமது அலுவல் நிமித்தம் செல்ல வேண்டியிருந்தால் தமது துறை அதிகாரிகள் காரில் போகிறார். சொந்த வீட்டில் வசித்து வரும் இவருக்கு, அரசு இன்னமும் அதிகாரபூர்வமான டெலிபோன் வசதிகூட செய்து தரவில்லை!

– எஸ்.எஸ். மணி



பாலம்

●● நான் DCE முடித்துள்ளேன். +2 தேர்ச்சி பெற்றுள்ளேன். DOEE (மத்திய அரசு) தேர்வு எழுத விருப்பம். எந்தப் பிரிவு எழுத முடியும் என்பதையும் மேலும் அது தொடர்பான விவரங்களையும் அறிய ஆவல்.

- எஸ்.ஏ. ரேவதி,
2-F, தெற்கு தெரு,
திருவெண்ணெய்
நல்லூர் - 607 203

●● பாமரோசா புல் சாகுபடி மற்றும் வாசனை எண்ணெய் பிரித்தல் பற்றிய தொழில் நுணுக்க விவரங்களை விவசாயிகளுக்கும் தொழில் முனைவோருக்கும் இலவசமாகத் தெரிவிக்கத் தயாராக உள்ளேன்.

- வி.ஆர். லக்ஷ்மிநரசிம்மன்,
பேராசிரியர் (மண்ணியல்),
வேளாண்மைக் கல்லூரி,
மதுரை - 625 104.

●● A Book of Abstract Algebra by Charles P. Pinter தேவைப்படுகிறது. விற்பனைக்கோ இரவலாகவோ யாரேனும் கொடுத்து உதவுவார்களா?

- ஆர்.கே. சுப்பிரமணியன்,
24, சேட் காலனி, 2 ம் தெரு,
சென்னை - 600 008.

●● சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு வெளிநாட்டு நண்பரின் சேகரிப்பில், கண்ணதாசனின் சொற்பொழிவு ஒலி நாடாவில் கேட்டேன். கல்லூரி மாணவரிடையே பேசியது. ''மது முதல் மயானம் வரை'' என்ற தலைப்பில் தமிழ் இலக்கிய உலகையே அதில் வலம் வந்தார். இந்த உரையை நூல் வடிவாக்க கவியரசரின் ரசிகர்கள் வழிகாட்டுவார்களா?

- முழுமுதலோன்,
23, அயக்கிரீவ நகர் ஒன்று,
சென்னை - 600 088.

●● மதுரை காமராஜர் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறையில் இளங்கலை-சரித்திரம்-முதலாண்டு (போதனா மொழி தமிழ்) படிக்கிறேன். இதற்கான பாடப்புத்தகங்கள், மற்றும் நோட்ஸ் இருக்குமாயின், பழைய மாணவர்கள் இலவசமாக அனுப்பி வைத்து உதவவும். தபால் செலவை ஏற்கிறேன்.

- ஜி. பழனிகுமார்,
4, முத்தாலம்மன்
கோயில் தெரு,
சித்தையன்
கோட்டை,
திண்டுக்கல்
அண்ணா (மா.வ).

●● நாங்கள் சிறிய அளவில் வீட்டிலேயே உணவுப் பொடி வகைகள் தயாரித்து வருகிறோம். பகுதி நேர விற்பனை மூலம் இந்தப் பொடி வகைகளை விற்று ஓரளவு வருமானம் பெற விரும்புவோர் கடிதத் தொடர்பு கொள்ளவும்.

- எஸ். மஞ்சுளா,
பிளாட் 1, முதல் மெயின் ரோடு,
பானுநகர், அம்பத்தூர்,
சென்னை - 600 053.

●● சிவில் சர்வீஸ் பரீட்சைக்குத் தயார் செய்கிறேன். சிவில் சர்வீஸ் குரோனிக்கிள் என்ற ஆங்கில மாத இதழின் செப்டம்பர், அக்டோபர் மாதப் பிரதிகள் கிடைக்கவில்லை. இதை வைத்திருப்பவர்கள் இரவல் தந்து உதவினால் நன்றியுடையவனாவேன்.

- ஜி. சுப்பிரமணியம்,
அஞ்சல் இல்லம், மண்டபம் போஸ்ட்,
இராமநாதபுரம் (மா.வ) - 623 518.

●● யூனிவர்சல் பார்வையற்றோர் அமைப்பு எனும் எமது அமைப்பில் உள்ள பார்வையற்ற உறுப்பினர்களுக்குப் புத்தகங்கள் மற்றும் கடிதங்கள் படித்துக் காட்டுதல், எழுதிக் கொடுத்தல் போன்ற உதவிகள் தேவை. இவ்வுதவிகளைத் தங்கள் வீட்டிலிருந்தபடியே செய்து தர விரும்பினாலும் அவர்கள் வீட்டுக்கு உறுப்பினர்கள் வருவார்கள்.

- எம். ராஜா, தலைவர்,
யூனிவர்சல் பார்வையற்றோர் சேவை
மையம், 43, சிங்கார தெரு,
கரையான்சாவடி, பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.

●● சுருக்கெழுத்து - தமிழ் - படிக்கிறேன். சீனிவாசராவ் முறை புத்தகம் தேவைப்படுகிறது. இலவசமாகவோ, விலை கொடுத்தோ பெற்றுக் கொள்கிறேன்.

- கே.எஸ். சுரேஷ்,
55-A, பிள்ளையார் கோயில் தெரு,
காமாட்சியம்மன் பேட்டை,
குடியாத்தம் - 632 602.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது.)

PENSIONERS' PET DEPOSIT SCHEME

Period	1 year	2 years	3 years
Interest	20%	20.5%	21%

Minimum Deposit Amount Rs. 12,500/-

SAVINGS DEPOSIT SCHEME

Highest ever 12 % interest

Interest calculated on the minimum balance maintained between 6th & 25th, and credited once in six months. Account can be operated between 9.00 a.m. to 5.30 p.m.

FIXED DEPOSIT SCHEME

Period	46 Days	12 Months	24 Months	36 Months	48 Months	60 Months
Rate of Interest	13%	17.5 %	18 %	19 %	19.5%	20 %

DOUBLE BENEFIT DEPOSIT SCHEME

YOUR MONEY DOUBLES IN JUST 42 MONTHS

NATRAJ BOND

Avail interest plus attractive bonus

21%

Minimum Amount: **Rs. 50,000/-** Period: **60 Months**

We offer gold jewel loans

(Interest will be calculated on actual-day basis)

We also offer mortgage loans against completed flats and other properties.

ABF LIMITED

Alwarpet Benefit Fund Limited

(A Govt. of India approved **Nidhi** Company)

Alwarpet: H.O: 43-B, C.P. Ramaswamy Road, *(Opp. State Bank of Mysore)*, Madras – 600 018. Ph: 450809


Besant Nagar: 8 A, I Floor, N.D.P. Complex, *(Opp. fish market)*, Madras – 600 090.

Nanganallur: 19, 4th Main Road, *(6th Main Road Corner)*, Madras – 600 061.

Ashok Nagar: 13-E, 10th Avenue, Pillar Apartments, Madras – 600 083.

Anna Nagar: AA-147, III Avenue, (Near Round Tana), Madras - 600 040.

Transaction with members only.



இவ்விரு குழந்தைகளும் ஆதரவற்ற நிலையில் சிவானந்த குருகுலத்தில் சேர்க்கப்பட்டு அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெற்று அமைதியான சூழ்நிலையில் வளர்கின்றனர்.

செல்வி அம்மு என்று அழைக்கப்படும் குழந்தை திருவள்ளூர் இரயில் நிலையத்தில் மூன்று மாதங்கள் நிர்க்கதியாக விடப்பட்டு பின்பு சிவானந்தா ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்தது.

அஞ்சலி என்று நாங்கள் பெயரிட்டு அழைக்கப்படும் மற்றொரு குழந்தை கிழக்குத் தாம்பரம் பூங்காவில் ஆதரவற்ற நிலையில் எங்களிடம் வந்து சேர்ந்து வளர்ந்து வருகிறது.

இப்படிப்பட்ட எண்ணற்ற சிறார்களுக்கு மனமகிழ்ச்சி தருவது தங்களுடைய அன்பும், ஆசியும், பொருளுதவியும்.

அவர்களுடைய தேவையான உடையும், உணவும் நாம் எவ்வளவுதான் அளித்தாலும் பெற்றோர்கள் தங்களுக்கு இல்லையே என்ற ஏக்கம் நெஞ்சில் இருக்கத்தான் செய்யும். அதனை போக்கத்தான் நாங்களும் அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொண்டு வருகிறோம்.

பண்டிகைகளும், விழாக்களும் மனித வாழ்வில் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தி உற்றார் உறவினருடன் பாசத்தினை பகிர்ந்து வாழ வழிவகை செய்கிறது. இப்படிப்பட்ட குழந்தைகளுக்கும், நிர்க்கதியாக நிற்கும் முதியோர்களுக்கும் தாங்கள் தானே உற்றார் உறவினர்! ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி திருநாளை இச் சிறார்களுக்கு இப் பத்திரிகை மூலமாக வாசகர்களின் உதவியுடன் கொடுக்கப்படும் நிதியிலிருந்து இரண்டு ஜோடி புத்தாடைகளும், பட்டாசுகளும், இனிப்புகளும் வழங்கப்பட்டு தாழ்வு மனப்பான்மையினை போக்கி சிறப்பாக கொண்டாடுகிறோம்.

சிவானந்த ஆசிரமத்திலுள்ள சுமார் 250 ஆதரவற்ற குழந்தைகளும், மற்றும் முதியோர்களும் இந்த தீபாவளி திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறோம். இதனைப் படிக்கும் தாங்கள் தங்களுடைய காணிக்கையாக ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் தலா ஒரு ரூபாய் இவ்வறப்பணிக்கு அர்ப்பணம் செய்தால், இத் திருப்பணி தங்கள் ஆசியுடன் பரிபூர்ணமாக நிறைவேறும் என்பதல்லாமல் இந் நாட்டில் உள்ள அனைத்து ஆதரவற்றோருக்கும் பயன் பெறும்.

பொதுமக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கு சான்றிதழ் அளிக்கப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக,

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059. தொலைபேசி எண்கள் : 401078, 40235
என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



அதிசயங்கள் புரிந்தவர்!



புயலெனக் கிளம்பி...

இந்தியா

இன்பத்தில் மிதக்கிறதாமே!

●● ஹரியானா மாநிலத்தில் ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களும் கள்ளச் சாராய போதைக்கு ஆளாகும் அவலத்தை எதிர்த்து, புயலெனக் கிளம்பியிருக்கிறார் சுவாமி அக்னிவேஷ். ஆண், பெண்களென ஆயிரக்கணக்கான தொண்டர்களைத் திரட்டி, ஊர் ஊராகச் சென்று மதுவுக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகிறார். காந்தி ஜெயந்தியன்று ஹிஸ்ஸார் என்னும் ஊரில் சாராயம் காய்ச்சும் தொழிற்சாலை எதிரே மறியல் செய்வதாக இருந்த சுவாமி அக்னிவேஷைக் கைது செய்து, குர்காம் சிறையில் அடைத்தது ஹரியானா அரசு! காரணம், சுவாமிகள் மறியல் செய்யவிருந்த சாராயத் தொழிற்சாலை, முதலமைச்சர் பஜன் லாலின் மாப்பிள்ளை அனுப் பிஷ்னாய்க்குச் சொந்தமானது! முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் இவரைச் சந்தித்து, இவருக்காக சுப்ரீம் கோர்ட்டில் வாதாட முயற்சி செய்ததில்தான், சுவாமிகள் விடுதலை செய்யப்பட்டார். அதுவும் ஜாமீனில்! ''எங்களைச் சிறையில் மிக மோசமாக நடத்தினார்கள். இருப்பினும், தொடர்ந்து போராடுவேன்'' என்கிறார் சுவாமி அக்னிவேஷ்.

•

●● டில்லியில் கடந்த 15 நாட்களில் 15 கொலைகள் நடந்தன! இவற்றில் பல, வேலைக்கமர்த்தப்பட்ட வேலைக்காரர்களாலேயே செய்யப்பட்டன. கடந்த ஆண்டு மட்டும் இந் நகரில் 508 கொலைகள், 268 கற்பழிப்புச் சம்பவங்கள், 511 கொலைக்கான முயற்சிகள், 283 திருட்டுகள், 32 வழிப்பறிகள் என நடந்துள்ளன. ஒவ்வோர் ஆண்டும் குற்றங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது! மிக பயங்கரமான குற்றங்களுக்காகக் கைதாகின்ற குற்றவாளியும் மிக எளிதில் ஜாமீனில் வெளிவந்து மேலும் பல குற்றங்கள் புரிவது இங்கு சகஜம். தேர்தல்கள் நடக்கவிருக்கும் இச்சமயத்தில், குற்றங்கள் மேலும் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. போலீஸின் பாரபட்சமின்மைக்கும், அரசியல் குறுக்கீடு வராத நிலைமைக்கும், வரும் தேர்தலில் உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறது ஒரு குடிமக்கள் அமைப்பு. நடக்கிற காரியமா என்ன!

●● காங்கிரஸ் கட்சி, ஐந்து மாநிலங்களில் வரும் தேர்தலுக்காக 50 கோடி ரூபாய் செலவிடுவதாக இருக்கிறது. இதற்காக விளம்பர நிறுவனங்களிடையே பலத்த போட்டி! 15 பேர் கொண்ட காங்கிரஸின் பப்ளிஸிடி கமிட்டி, இப்போதிலிருந்தே இரட்டிப்பு நேரம் உழைக்கிறது. வட இந்தியாவில் மட்டும் தேர்தல் என்பதால் ஹிந்தி, உருது மொழிகளில் கொடுக்கப்படும் 'slogan'களுக்கே மதிப்பு அதிகம். பரிசீலிக்கப்பட்டு வரும் ஒரு ஸ்லோகன் இதோ :

'நரசிம்மராவ், தும்னே கர்தியா கமால்!
மெஹங்காய் ஹுயீ கம், தேஷ் ஹுவா குஷால்!'

இதன் பொருள் : நரசிம்மராவ், நீங்கள் அதிசயங்கள் புரிந்து விட்டீர்கள்! இன்று பணவீக்கம் குறைந்தது. நாடு இன்பத்தில் மிதக்கிறது.

அடேயப்பா! எப்படியெல்லாம் பூச்சுற்றப் பார்க்கிறார்கள்!

புது டில்லியிலிருந்து :
ராஜீவி நரசிம்மன்

13. பஜனை

அக்கிரகாரத்தின் மேலண்டைப் புறத்தில், பெரிய தெருவையும் சின்னத் தெருவையும் சேர்க்கும் பாதை ஒன்று இருந்தது. அந்தப் பாதைக்கு மேற்கே விசாலமான படித்துறைக்குளம் காணப்பட்டது. குளத்தின் வடகரையில் பாதையையொட்டிப் பஜனை மடம் இருந்தது.

இந்தப் பஜனை மடத்தில் அன்று இரவு ஏழு மணிக்கு ஜனங்கள் வந்து கூட ஆரம்பித்தார்கள். சங்கரநாராயண தீக்ஷிதர், சாமா ஐயர், ரமணி ஐயர், ராமய்யா வாத்தியார், முத்துசாமி ஐயர் எல்லாரும் வந்தார்கள். குழந்தைகளும், ஸ்திரீகளும் கூடச் சிலர் வந்து சேர்ந்தார்கள்.


சங்கர தீக்ஷிதர் வந்ததும், கையில் ஓர் ஓட்டை விசிறியுடன் சம்பு சாஸ்திரியிடம் வந்து, "ஏங்காணும், சாஸ்திரி! ரொம்ப இறுக்கமாயிருக்கே! வேர்க்கிறதோ இல்லையோ?" என்று கிறுதக்காகச் சொல்லிக் கொண்டு, சாஸ்திரியின் மேல் விசிறினார். இந்த மாதிரி விளையாட்டுக்கெல்லாம் சாஸ்திரியின் பதில் புன்னகைதான். அந்தப் பதிலையே இப்போதும் அளித்தார். உடனே தீக்ஷிதர், "ஓய், இன்னிக்குத் திவ்யநாம சங்கீர்த்தனம் எல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம். சீக்கிரமாய் உட்கார்ந்தபடியே நாலு பாட்டுச் சொல்லிப் பஜனையை முடிச்சுடும். மழை பலமாய்ப் பிடிக்கக்கறதுக்கு முன்னாலே, அவாவாள் வீட்டுக்குப் போய்ச் சேரலாம்" என்றார்.


"அப்படித்தான் உத்தேசம் பண்ணியிருக்கேன். இந்த மழையிலே நீங்கள்ளாம் வந்தேளே, அதுவே பெரிய காரியம்!" என்றார் சாஸ்திரியார்.

ஆனால், சங்கர தீக்ஷிதரின் எண்ணம் பலிக்காமற் போவதற்கேதானோ என்னவோ, பஜனை ஆரம்பித்த சற்று நேரத்துக்கெல்லாம் மறுபடியும் மழை பலமாய்ப் பிடித்துக் கொண்டது.

பஜனை மடத்தில் சுவர்களின் மீதும் கதவுகளின் மீதும் மழையும் புயலும் தாக்கிய போது உண்டான சப்தம் பஜனையின் சப்தத்தையும் மூழ்க அடிப்பதாயிருந்தது. இடையிடையே கதவுகள் படீர் படீர் என்ற சப்தத்துடன் திறப்பதும் மூடுவதுமாயிருந்தன.

அதே சமயத்தில் சம்பு சாஸ்திரியின் வீடும் அல்





அமரர் கல்கி

ே ல ா ல க ல்
லோலப்பட்டுக் கொண்டிருந்தது. அடிக்கடி திறந்து கொண்ட ஜன்னல் கதவுகளின் வழியாகக் காற்றும் மழையும் புகுந்து அடித்தன. அந்த வருஷம், கல்யாணச் சந்தடி காரணமாக, சாஸ்திரியாரின் வீடு ஓடு மாற்றப்படவில்லை. இதனால் சில இடங்களில் ஏற்கெனவே, சொட்டுச் சொட்டென்று சொட்டிக் கொண்டிருந்தது. இப்போது அடித்த பெருங் காற்றிலும் மழையிலும் ஓடுகள் இடம் பெயர்ந்தபடியால், சில இடங்களில் தண்ணீர் தாரையாகக் கொட்டிற்று.

பாவம்! சாவித்திரி, கண்டல் எடுத்துக் கொண்டு போவதற்காக வந்தவள், வீட்டுச் சாமான்கள் நனையாமல் காப்பாற்றுவதற்குப் பெருமுயற்சி செய்தாள். முகத்தில் வந்து அடித்த மழையைப் பொருட்படுத்தாமல், ஜன்னல் கதவுகளைச் சாத்தினாள். அப்பாவின் புஸ்தகங்கள், கணக்கு நோட்டுகள் முதலியவற்றை எடுத்துப் பத்திரப்படுத்தினாள். ஜலம் தாரையாகக் கொட்டிய இடங்களில் அண்டா, தவலை முதலிய பெரிய பாத்திரங்களைக் கொண்டு வைத்தாள். தரையில் தேங்கியிருந்த ஜலத்தை விளக்குமாற்றால் பெருக்கித் தள்ள முயன்றாள்.

அந்தச் சமயத்தில் அவளுடைய மனம், 'தீவாளிக்கு இவாள் வர்ற போது இப்படியே மழை கொட்டிண்டிருந்தா என்ன பண்றது? இந்த வீட்டைப் பார்த்துட்டுப் பரிகாசம் பண்ணுவாளோ? அதற்குள்ளே மழை நின்னு போகணுமே, ஸ்வாமி!' என்று வேண்டிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயம், மங்களம் சமையலறையிலிருந்து கையில் ஒரு பெரிசல் குடையுடன் வந்து, ''ஏண்டி, சாவித்திரி! உங்க அப்பா கிட்டச் சொல்லி இந்தக் குடையை ரிப்பேர் பண்ணி வைக்கறதுக்குக் கூட விதியில்லையா? பாக்கிக்கெல்லாம் மட்டும் வாய் கிழியறதே!'' என்று சொல்லிக் குடையைத் தொப்பென்று கீழே எறிந்தாள்.

பகவானுடைய பக்தியில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய குடும்ப காரியங்களைச் சரியாகக் கவனிப்பதில்லையென்பது நமது நாட்டில் தொன்றுதொட்டே சம்பிர

தாயமாயிருந்து வந்திருக்கிறது. அந்தப் பரம்பரையில் வந்த சம்பு சாஸ்திரி மட்டும் இந்த வழக்கத்துக்கு விரோதமாயிருக்க முடியுமா? ஆகவே, மங்களம் அவர்மேல் எரிந்து விழுவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை.

ஆனாலும், சாவித்திரி விட்டுக் கொடுக்காமல், ''அப்பாகிட்டச் சொன்னேன், அவருக்கு ஞாபகம் இல்லை போல் இருக்கு. நாளைக்கே ரிப்பேர் பண்ணி விடலாம், சித்தி!'' என்றாள். பிறகு, அந்தப் பேச்சு வராமல் இருக்கும் பொருட்டு, ''பஜனை முடியற சமயம் ஆச்சே, சித்தி! விநியோகத்துக்கு எல்லாரும் காத்திண்டிருப்பாளே! கண்டலை எடுத்துண்டு போவமா?'' என்று கேட்டாள்.

மங்களம், ''உனக்கும் வேலையில்லை, உங்க அப்பாவுக்கும் வேலையில்லை. மழையிலேயும் இடியிலேயும் பஜனை என்ன வேண்டியிருக்கு, பஜனை! நான் வல்லை, கண்டலை எடுத்துண்டு நீயே தொலைஞ்சுட்டு வா!'' என்றாள். இப்படிச் சொல்லிக் கொண்டே, உள்ளே போய், கண்டல் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்து, தரையில் 'நக்'கென்று வைத்தாள்.

அதே சமயத்தில் வானத்தில் ஒரு பேரிடி உண்டாகி, நாலு திசையும் குமுறும்படி இடித்தது.

சாவித்திரி, அப்பா சொல்லிக் கொடுத்திருந்தபடி, ''அர்ச்சுனப் பல்குனப் பார்த்தனக் கிரீடி....'' என்ற மந்திரத்தை மனத்தில் ஜபித்த வண்ணம் கண்டல் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, அந்த ஓட்டைக் குடையைப் பிரித்துக் கொண்டு பஜனை மடத்துக்குக் கிளம்பினாள்.

பஜனை மடத்தில் சம்பு சாஸ்திரி கலைந்து போன தம்புராவைச் சுருதி கூட்டிக் கொண்டிருந்தார். பஜனையிலிருந்து எழுந்து வந்து மடத்தின் தாழ்வாரத்தில் சங்கர தீக்ஷிதரும் இன்னும் நாலைந்து பேரும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

சில வருஷங்களுக்கு முன்னால், சம்பு சாஸ்திரி பஜனை ஆரம்பித்த புதிதில், ஊரில் எல்லாரும் அதில் சிரத்தையுடன் ஈடுபட்டார்கள். நாளடைவில் சாஸ்திரியாரைத் தவிர மற்றவர்களுக்குப் பஜனையில் சிரத்தை குறைந்து வந்தது. இப்போதெல்லாம் பெரும்பாலும் பொழுதுபோக்குக்காகவும், கண்டல், வடை விநியோகத்தை உத்தேசித்துமே பஜனைக்கு வந்தார்கள் என்று சொல்லலாம். இப்போதைக்குக் குழந்தைகளுக்குத்தான் பஜனையில் அதிக சிரத்தையிருந்தது. பெரியவர்களோ ஒரு பக்கம் பஜனை நடந்து கொண்டிருக்கும் போது தாங்கள் பாட்டுக்கு வம்பு வளர்த்துக் கொண்டிருப்பார்கள்.

அதிலும் இன்று மழையும் காற்றும் பிரமாதமாக அடித்துக் கொண்டிருந்தபடியால், யாருக்குமே பஜனையில் மனம் செல்லவில்லை. இன்னும் ஏன் கண்டல் வரவில்லையென்றுதான் எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தீக்ஷிதர், பொடி டப்பியைத் தட்டி, பொடி எடுத்து உறிஞ்சி விட்டு, ''என்னடா இது? இந்தச் சம்பு சாஸ்திரி இலேசிலே பஜனையை நிறுத்தாது போல் இருக்கே! சட்டுப்புட்டுனு முடிச்சா, கண்டலை வாங்கித் தின்னுட்டுப் போகலாம்னு பார்த்தா...'' என்று இழுத்தார்.

சாமாவய்யர், அப்போது அங்கே வந்த வைத்தியைப் பார்த்து, ''அடே வைத்தி! உங்க அத்திம்பேர்கிட்டச் சொல்லிச் சீக்கிரம் பஜனையை நிறுத்தச் சொல்லேண்டா! இந்த மழையிலேயும் இடியிலேயும் பஜனை என்னடா, வேண்டியிருக்கு?'' என்றார்.

''நான்தானே? வந்து நாலு நாள்தான் ஆச்சு!'' என்றான் வைத்தி.

தீக்ஷிதர், ''நாசமாப் போச்சு! அவனுக்குச் சாதாரண நாளிலேயே காது கேக்காது. இந்த மழையிலும் இடியிலும் காது கேட்டாப்பலேதான்!'' என்றார்.

''ஏண்டா வைத்தி! வாசலிலே இடி இடிக்கிறதே! உன் காதிலே விழறதா?'' என்று ராமய்யா வாத்தியார் உரத்த குரலில் கத்தினார்.

அதற்கு வைத்தி, ''பிரஸாதந்தானே? கண்டலும் வடையுந்தான். எனக்குத் தெரியாதா, என்ன? எங்க அக்காதானே பண்ணினாள்?'' என்றான். எல்லாரும் சிரித்தார்கள்.

முத்துசாமி ஐயர், ''ஏன், ஸ்வாமி? குடமுருட்டியிலே பிரமாத வெள்ளம் வந்திருக்காம். உடப்பு எடுத்துக்கும் போலிருக்காமே, வாஸ்தவமா? யாருக்காவது தெரியுமா?'' என்று கேட்டார்.

''குடமுருட்டிதான் உடைச்சுக்கட்டும், மானமே இடிஞ்சு விழட்டும். இந்த சம்பு சாஸ்திரி மட்டும் பஜனையை நிறுத்தாது போலிருக்கு'' என்றார் தீக்ஷிதர்.

இந்தச் சமயத்தில் சாவித்திரி, கண்டல் பாத்திரத்துடன் உள்ளே வரவே, ''சரி, சரி, பிரஸாதம் வந்துடுத்து; பஜனையை முடிக்கச் சொல்லலாம்'' என்று கூறிக் கொண்டு, எல்லாரும் அவரவர் இடத்துக்குப் போனார்கள்.

14. உடைப்பு

இரவு சுமார் எட்டு மணிக்கு, நல்லான் தன்னுடைய வீட்டில் கோரைப் பாயை விரித்து அதில் படுத்துக் கொண்டான். தூக்கம் என்னவோ வரவில்லை. பஜனை மடத்துக்குப் போய்ப் பஜனை கேட்கலாமென்று ஒருகணம் நினைத்தான். அப்புறம், 'இந்த மழையிலே யார் போறது?' என்று எண்ணினான். இரவு பூராவும் இப்படியே மழை பெய்தால், வயல்களில் எல்லாம் ரொம்ப ஜலம் கட்டி நிற்கும். அதிகாலையில் எழுந்து போய் வடிய விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். ஆனால், வாய்க்கால்களில் ஜலம் ததும்பப் போய்க் கொண்டிருந்

''தீயணைக்கும் படை அவ்வளவு வேகமா சீக்கிரமா வந்தும் தீயை அணைக்க முடியாம போச்சுங்க!''

''தீ அவ்வளவு வேகமாப் பரவிடுச்சா...?''

''ஊஹூம். தெரு ஜனங்க வேக வேகமா வந்து தண்ணியைப் பிடிச்சுக்கிட்டுப் போயிட்டதாலதாங்க!''

- எஸ். கோவிந்தன்



தால், எப்படி வடிய விடுகிறது என்று யோசனை உண்டாயிற்று. விராட பர்வம் படித்தால் மழை வரும் என்பது போல், மழையை நிறுத்துவதற்கும் ஏதாவது வழி இருக்கிறதா என்று சாஸ்திரியாரைக் கேட்க வேண்டுமென எண்ணினான்.

அப்போது நல்லானுடைய பாம்புச் செவியில் மழையின் 'சோ' என்ற சப்தத்தையும், காற்றின் 'விர்' என்ற சப்தத்தையும் தவிர, வேறு ஏதோ ஒரு சப்தம் கேட்டது.

அது, ஜலம் கரையை உடைத்துக் கொண்டு பாயும் சப்தம் என்று அவனுக்கு தெரிந்து போயிற்று. உடனே, குடமுருட்டியின் குத்தல் ஞாபகம் வந்தது. அவ்வளவு தான்; போர்த்திக் கொண்டிருந்த துப்பட்டியை எடுத்து விசிறி விட்டு, அவசரமாக எழுந்தான். ஓலைக் குடலையை எடுத்துத் தலையில் மாட்டிக் கொண்டு அந்தக் கொட்டுகிற மழையில், மின்னல் வெளிச்சத்தின் உதவியினால் சேரியை நோக்கி விரைந்து சென்றான்.

நல்லான் தட்டுத் தடுமாறி, இரண்டு மூன்று இடத்தில் தடுக்கி விழுந்து எழுந்திருந்து கடைசியாகச் சேரியை அடைந்த போது, சேரி அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. காலையில் மண்ணை வெட்டி வரப்புப் போட்டுக் கொண்டிருந்தார்களல்லவா? அந்த வரப்பெல்லாம் போய் விட்டது. ஒரே வெள்ளமாக ஜலம் சேரியில் புகுந்து கொண்டிருந்தது. மழை, காற்று, பாய்கின்ற ஜலம் இவற்றின் 'ஹோ' என்ற இரைச்சலுக்கு இடையிடையே, ''ஐயோ! கொழந்தையைக் காணமே!'' ''ஏ குட்டி! எங்கடி போய்ட்டே!'' ''ஆயா! ஆயா! ஐயோ! ஆயா போய்ட்டாளே!'', ''அடே கருப்பா! மாட்டை அவிழ்த்து விடுறா!'' ''ஐயோ! என் ஆடு போயிடுச்சே!'' என்று இந்த மாதிரி பரிதாபமான அலறும் குரல்கள் தீன ஸ்வரத்தில் கேட்டன.

மின்னல் வெளிச்சத்தில் நல்லானைப் பார்த்ததும், சேரி ஜனங்கள் வந்து, அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ''ஐயோ! சாமி! குடிமுழுகிப் போச்சுங்களே! குடமுருட்டி உடைப்பு எடுத்துக்கிட்டதே! நாங்க என்ன செய்வோம்? எப்படிப் பிழைப்போம்?'' என்று கத்தினார்கள்.

நல்லான் உரத்த குரலில், ''அடே! நீங்கள் எல்லாரும் ஆம்புளைகள்தானாடா! உடைப்பு எடுத்தா, ஓடிப் போய் மண்ணைக் கின்னைக் கொட்டி அடைக்கிறதுக்குப் பாக்காமே, பொம்புளை மாதிரி அழுதுகிட்டு நிக்கறீங்களேடா?'' என்றான்.

''உடைப்பையாவது, அடைக்கவாவது துங்க! கிட்ட ஆள் அண்ட முடியாதுங்க. அவ்வளவு பெரிய உடைப்பு, சாமி!'' என்றான் தலையாரி வீரன்.

''குடிசையெல்லாம் விழுந்து எல்லாம் பாழாய்ப் போச்சுங்க. இனிமே உடைப்பை அடைச்சுத்தான் என்ன பிரயோசனம்? புள்ளை குட்டிங்களைக் காப்பாத்தறதுக்கு ஒரு வழி சொல்லுங்க!'' என்றான் இன்னொருவன்.

''புள்ளை குட்டி போனாலும் பரவாயில்லை. ஆடுமாடெல்லாம் இருந்த இடந் தெரியலைங்களே!'' என்றான் மூன்றாவது ஆள்.

அப்போது இடி முழக்கத்துடன் பளீரென்று மின்னிய மின்னலின் வெளிச்சத்தில் நல்லானுக்கு முன்னால் ஒரு கணப்பொழுது தோன்றிய காட்சி அவனுடைய நெஞ்சைப் பிளப்பதாயிருந்தது. கொஞ்ச தூரத்தில், குடமுருட்டியின் கரை உடைத்துக் கொண்டு, ஜலம் ஒரே நுரைமயமாகப் பாய்ந்து கொண்டிருப்பதையும், சேரியெல்லாம் ஜலம் புகுந்திருப்பதையும், குடிசைகள் இடிந்து விழுந்து கொண்டிருப்பதையும், பெண் பிள்ளைகளும் பிள்ளை குட்டிகளும் அலறுவதையும் அவன் அந்த ஒரு க்ஷண நேரக் காட்சியில் கண்டான்.

உடனே, அவன் ஆவேசம் வந்தவனைப் போல், ''அடபாவிகளா! தடிப்பசங்கள் மாதிரி கம்மா நிக்கறீங்களேடா? இன்னும் கொஞ்ச நாழி போனா அத்தனை பேரும் வெள்ளத்திலே போயிடுவாங்களே! ஓடுங்க! ஓடுங்க! பொம்புளைகளையெல்லாம் சேர்த்து, பிள்ளை குட்டிகளோடு அக்கிரகாரத்துக்கு ஓடச் சொல்லுங்க!'' என்றான்.

''என்ன, சாமி குருட்டு யோசனை சொல்றீங்க? அக்கிரகாரத்துக்கு நாம் போனா, அய்யமாரு விடுவாங்களா?'' என்றான் தலையாரி வீரன்.

''குருட்டு யோசனை ஒண்ணும் இல்லேடா! ஓடிப் போய் சாஸ்திரி ஐயா காலிலே விழுந்தா, ஏதாவது வழி சொல்லிக் காப்பாத்துவாரு. அநேகமா, பசனை மடத்திலே தான் இப்ப இருப்பாரு. பசனை மடத்துக்கு ஓடச் சொல்லுங்க பொம்புளைகளை. ஆம்புளைகளெல்லாம் ஆடு மாடைக் காப்பாத்தறதுக்கு வழி பாருங்க!'' என்றான் நல்லான்.

''பட்டிக்கார ஐயாவே சொல்லச்சே நமக்கு என்ன வந்தது? ஓடுங்க எல்லாரும் பசனை மடத்துக்கு!'' என்றான் தலையாரி வீரன்.

பிறகு, நல்லானும் சாம்பானும் குடமுருட்டியில் உடைப்பு எடுத்துக் கொண்ட இடத்தைப் பார்க்கப் போனார்கள்.

(தொடரும்)

வேதவல்லி

வண்டி தயாராகி விட்டது. குளிர். இருள் வெளுக்காத பகல். போர்வையை மேலே சுற்றிக் கொண்டு வேதவல்லி வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். ஜமுக்காள விரிப்பு விலகிற்று! 'அம்மாடி' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே கூட்டு வண்டித் தடுப்பில் சாய்ந்தாள். அவளுடைய பளுவில் வண்டி அசைந்து கொடுத்தது. வண்டிக்காரன் வேதவல்லியின் முகத்தைப் பார்த்தான். 'ம்' என்று ஒரு குரல். வண்டி கிளம்பிற்று! ஊர் முழுவதும் உறக்கத்தில் இருந்தது. வண்டி மட்டும் மண்ணை அரைத்துக் கொண்டு சென்றது! ஊரைத் தாண்டி ஒற்றை வாய்க்கால் மேடு ஏறி வண்டி வேகமெடுத்தது! வண்டிக்காரன் கழுத்தைப் பக்கவாட்டில் சாய்த்து வேதவல்லியைப் பார்த்தான். இப்பத்தான் அவளைச் சற்று விவரமாகப் பார்க்க முடிகிறது. நிலாத் தெறிப்பில் அந்த முகம்! யப்பா! இவசரி அவளைப் பார்க்கத் தான் செய்கிறான். அவன் மனத்திற்கும் பார்வைக்கும் எட்டாத எவ்வளவோ விஷயங்கள் அந்த முகத்தில் புதைந்து கிடப்பது போல் ஓர் எண்ணம். அந்த முகத்தை ஒரு கணம் - ஒரே கணம் நிதானமாய்ப் பார்த்தால் எதையோ தட்டி எழுப்பி விழிக்கப் பண்ணி விடும். அவனுக்கு அது போல் எல்லாம் பார்த்துப் பழக்கமில்லை. ஏதோ வேடிக்கை மாதிரிதான் பார்ப்பான்.

வண்டியின் வேகத்திற்கு ஏற்ப பாதை நீண்டு கொண்டேதான் இருந்தது. பக்கவாட்டில் இரு கரையிலும் கோடு மாதிரி தென்னை நீண்டு வளைந்து - காற்றில் மிதந்து கொண்டிருந்தன. வளைந்து தெளிந்த வைகையின் நீர் விளிம்பு, நிலா வெளிச்சத்தை வாங்கித் தகதகத்துக் கொண்டிருந்தன. கிட்டுக் கிட்டாய்த் தோப்புகள். தோப்புகளுக்கிடையே அங்கங்கே வீடுகளின் கூரைகள், ஓலை முடைகள், இன்னொரு பக்கம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தொடுவானத்தில் புலிக் கோடுகள். முக்கால் இருளுக்குள்ளிருந்து மாட்டின் கழுத்து மணி ஓசை.

''அம்மா தூங்கியாச்சா?''

''என்ன வேணும்?''

''தூங்கிட்டீங்களான்னு பார்த்தேன்.''

''நிரந்தரமா ஒரு தூக்கம் வரணும்.''

''ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?''

''நான் இருக்கேனா?''

அவனுக்கு அந்தப் பீடிகை புரியவில்லை.

''உடம்புக்கு முடியலையாம்மா?''

''செத்துட்டாத் தேவலை மாயாண்டி!''

''ஏம்மா இப்படி...''


''உயிரோட இருக்கது போதும்னு தான்.''

''அர்த்தமில்லாம ஏதாவது பேசாதீங்க...''

''எல்லாம் அர்த்தத்தோடயா நடக்குது...''

மாயாண்டி கண்ணை மூடிக் கொண்டான். இடதுகாலை மாட்டின் பின்புறம் விட்டுத் தூண்டினான். மாடுகள் துள்ளின! வண்டியின் வேகம் கூடிற்று! மாயாண்டிக்கு வேதவல்லியை இருபது வருஷமாய்த் தெரியும். தெரியும் என்றால் முகம் கொடுத்துப் பார்த்தது கிடையாது. எதிரும் புதிருமாய் நின்று ஒரு வார்த்தை பேசியது கிடையாது. 'வேதவல்லி' என்று மட்டும் தெரியும்! சோழவந்தான் முழுக்கத் தெரியும். தென்கரை, பேட்டை, திருவேடகம் என்று சூறாவளியாய்ச் சுழன்ற பேச்சுத்தானே வேதவல்லி!

மாயாண்டி மலைச்சாமித் தேவர் வீட்டில் ஆள்காரன். ஐயாவின் குரலுக்கு ஓடி வருகின்ற ஆள்காரன். தேவருக்கு மண் ஆசை. கிழக்கு, மேற்கு, வடக்கு என்று ஊர் முழுக்க வளைத்துப் போட்டுக் கொண்டிருந்தார். எது வேண்டும், எது வேண்டாம் என்று கூட யோசிக்காமல் சகலமும் வேண்டும் என்று வாரிப் போட்டுக் கொண்டிருந்தார். காலையிலும் மாலையிலும் ஒரு ரவுண்ட் வருவார். வில் வண்டி. வெளுப்பு உடுத்தி, நெஞ்சை உயர்த்தி ஓர் உலா! இன்னும் எதை வளைத்துப் போடலாம் என்ற பார்வை! எல்லாம் மிரண்டு ஒதுங்கும். ஊர்ப் புழுதி, தென்னை மட்டை, தேங்காய், என்று



மட்டுமே பார்த்து வந்த மலைச்சாமித் தேவர், ஒருநாள் மாரியம்மன் கோவிலில் ஓர் அற்புதத்தைப் பார்த்தார்.

மகமாயிக்கு அபிஷேகம் முடியவில்லை. முடிந்த பிறகு அலங்காரம் செய்து விட்டுத்தான் சந்நிதியைத் திறப்பார்கள். இன்னும் அரை மணி நேரமாவது ஆகும். வந்த கூட்டம் பேசிப் பேசி பொழுது போக்கிக் கொண்டிருந்தது. மகிழ மரத்திற்குக் கீழேதான் அந்த அற்புதம். வேதவல்லி! காலை மடக்கி உக்கார்ந்திருந்தாள். பக்கத்தில் பூஜைக் கூடை. பக்கத்து மேடையில் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் விருத்தத்தில் அம்பாளைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தார். மலைச்சாமித் தேவருக்கு ஒன்றும் காதில் விழவில்லை. கண்ணிலும் படவில்லை. அவர் மனசு வேதவல்லிக்கு முன்னால் கிடந்தது. மனத்தில் ஏதோ ஒன்று பாய்ந்து, பிடுங்கி எறிய முடியாமல் அப்படியே விழுந்து விட்டார். அதன்பின் எப்படியோ அடி மேல் அடி வைத்து வேதவல்லியைத் தொட்டு விட்டார்.

வேதவல்லியின் குடும்பமும் சொல்லிக் கொள்ளும்படி ஒன்றுமில்லை. அப்பா சின்ன வயசிலேயே போய் விட்டார். அம்மாவின் ஆணிவேரை ஆஸ்துமா நோய் ஆட்டிக் கொண்டிருந்தது. வேதவல்லிக்குத் தேவரின் மகள் வயசு! தேவரின் சம்சாரம் முறுக்கிக் கொண்டு நின்றாலும் வெளியே மூச்சுக் காட்டவில்லை. காட்டி விட முடியுமா?

பிற்பாடு, தேவர் தோட்டத்துத் தென்னையும், வாழையும் வளையல், நெக்லக்ஸ், காஞ்சிப் பட்டு என்று மாறி வேதவல்லிக்குப் போயிற்று! தேவரின் 'வில்' வண்டி நிரந்தரமாய் வேதவல்லி வீட்டு வாசல் நிழலிலேயே கிடந்தது!

வேதவல்லி வெளியே தலைகாட்டுவதே கிடையாது. எப்போதாவது அம்மன் தேர் தெருவில் வந்தால் மட்டும் மாடி ஜன்னல் திறக்கும். ஆற்றில் அழகர் இறங்குகிற தினத்தில் ஊர் ஒடுங்கிய பின் ஆற்றுக்கு வந்து நீரை அள்ளித் தலையில் தெளித்துக் கொண்டு போவாள். 'ஊர் முழுசும் இப்படி மாஞ்சு மாஞ்சு போகுதே எப்படியாவது அந்த

பாரதிபாலன்

அம்மாவை ஒரு தடவை பார்த்து விட வேண்டும்' என்ற ஆவல் மாயாண்டிக்கு! முடியவில்லை. தேவர் அந்த ஊரில் இருக்கும் வரை அது முடியவில்லை.

தேவர் பிள்ளைகள் எல்லாம் வளர்ந்து ஆளானார்கள். தேவருக்குத் தளர்வு கண்டது. நிலத்தை விற்றுப் பணமாக்க அது பட்டணத்துத் தெருக்களில் பஞ்சாலையாய் - பங்களாவாய் மாறிற்று! மதுரையில் வீடு. பேருக்குக் கொஞ்சம் விவசாயம் மட்டும் சோழவந்தானில் இருந்தது. மற்றபடி எல்லாம் வேரோடு மதுரைக்குப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள். தேவரும் மதுரைக்கு மாறி விட்டார்.

வேதவல்லி மட்டும் சோழவந்தானில் பெரிய தெருவில் இருந்தாள். பழைய காலத்து வீடு. கலர் மங்கி, காரை பெயர்ந்து இருக்கும். ஆரம்பத்தில் தேவர் கொஞ்ச நாள் வந்து போய்க் கொண்டிருந்தார். பிற்பாடு முடியவில்லை. வேதவல்லியை மதுரைக்கு வரச் சொல்லி விட்டார். அவர் மனசுப்படி ஒரு நாளோ இரண்டு நாளோ தேவரோடு இருந்து விட்டுத் திரும்ப வேண்டும். மாயாண்டிக்கு இதுதான் வேலை. கூட்டு வண்டி, இரண்டு மச்சக் காளைகள், வேதவல்லி - இதுகளை மேற்பார்வை செய்ய வேண்டும். வேதவல்லிக்கு உதவியாய் இருக்க வேண்டும். தேவர் தகவல் சொல்லி அனுப்பினால் வண்டியைப் பூட்டி விட வேண்டும். ஆர்ப்பாட்டமில்லாது நடுச்சாமங் கழிந்தவுடன் வண்டி கிளம்பி விட வேண்டும்.

''மாயாண்டி...''

'அம்மா...'

''எதுக்கு இவ்வளவு வேகம்?''

''பொழுது வெளுத்திட்டு வருதே!''


''வண்டியை நிறுத்து மாயாண்டி...''

''எதுக்கும்மா!''

''உங்க பையனுக்கு மனநிலை சரியில்லைன்னு டாக்டர்கிட்டே அழைச்சுக்கிட்டுப் போனீங்களே, என்ன சொன்னார்?''

''வீட்ல உள்ள டி. வி.யை வித்துடச் சொன்னார்!''

- 'காரை அருண்'



''வேண்டாம். மதுரைக்குப் போக வேண்டாம்.''

''அம்மா.''

''இப்படியே இந்த ஆத்துத் தண்ணியிலே என்னை எறக்கி விட்டுடுப்பா, நான் போய்ச் சேர்ந்திடுறேன்...''

''எதுக்கு இப்படியெல்லாம் பேசணும்.''

'தேவர்தான்.'

''அவர் தெய்வம்மா!''

அவள் மூச்சடங்கிப் போனது. எதுவும் பேசவில்லை. வண்டி நகர்ந்தது. வெகு நேரம் வரையிலும் எந்தப் பேச்சுமில்லை. மாயாண்டி மெல்லத் திரும்பிப் பார்த்தான். முழங்காலைக் கட்டிக் கொண்டு உக்கார்ந்திருந்தாள். கண்ணைக் கசக்கிக் கொண்ட முகவாடல். போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். உலகமே இது தானே! காரணமே தேவையில்லை. காசு, பணத்தைக் கண்ணில் காட்டி விட்டாலே அவன் கடவுள். மலைச்சாமித் தேவர் கடவுள் என்று யார் சொன்னது! உன் கண்ணுக்குப் பட்டவரை, மனசு அறிந்த வரை மலைச்சாமித் தேவர் கடவுள். இதயம் திறந்து சொல்கிறேன் தேவர் கடவுள் இல்லை. அவருக்கு ஒண்ணே ஒண்ணுதான் குறி. எப்படியேனும் ஜெயிக்க வேணும். எதையேனும் ஜெயித்து விட வேண்டும். குறுக்கு வழி என்ன? ஒரே வெறி! அது மனுஷ வெறியே அல்ல!

வேதவல்லி நெஞ்சில் வேதனையைச் சுமந்தாள். மாயாண்டி தன் கன்னத்தைத் தடவிக் கொண்டான். அடுத்த ஊரின் எல்லை வந்தது. வயலோரம். உச்சந் தலைக்கு நேரே நிலாவின் வெளிச்சம் தெறித்தது! தற்செயலாக வேதவல்லியின் பக்கம் திரும்பினான். இருட்டில் முகபாவங்கள் தெரியவில்லை. ஆனாலும் இந்தப் பயணத்தில் அவள் மனசு அலுங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது!

''மாயாண்டி?''

திரும்பினான்.

''பலி கொடுக்கவா போறே?''

''எதை?''

''என்னை. உன் தெய்வத்திற்கு - தேவரைத்தான் சொல்கிறேன்.''

அவனுக்கு மூச்சு வாங்கிற்று!

''தேவருக்கு வெற்றிக் கிறுக்கு, மாயாண்டி..''

''அப்படியா?''

''எல்லாம் ஜெயிச்சாக்கணு தலையிலெ வந்து ஏறிக்கிடுச்சு...''

''கொஞ்சம் கோபப்படுவார்.''


''கொஞ்சமா? மூக்கு வழியே ஆவி பறக்கிற கோபம். அப்படியே மேலே விழுந்து பாம்பு, பூச்சியாய்ப் பிடுங்கி எடுத்து விடுவார்.''

படம் பார்க்க வந்தவர் : என்ன சார்... 'அடிதடிச் சண்டைக் காட்சிகள் நிறைந்தது'ன்னு போட்டிருந்தீங்க... ஆனா, ஒரு சண்டைக் காட்சியைக் கூடக் காணோம்...?''

தியேட்டர் மானேஜர் : டிக்கெட் எடுக்கும் போது கவுண்டரில் பார்த்திருப்பீங்களே...!

தஞ்சைத் தரணியன்





''ஆஸ்திரேலியாவில் தயாரான கார், ஒரு லட்சத்துக்குக் குறைஞ்ச தரமாட்டேன்னு சொல்லிக்கிட்டிருந்திங்களே, எங்கே அது?''

''ஹி... ஹி... அதை அப்புறம் சொல்றேன். இந்தாங்க பேரீச்சம்பழம், எடுத்துக்கங்க!''

– வேதபுரி எஸ். ரமேஷ்

''கடவுளே!''

''இது மட்டும்னா தாங்கிடலாம். இது போல எவ்வளவோ பூட்டி வெச்சிருக்கேன் தெரியுமா?''

மாயாண்டிக்கு நா எழவில்லை.

வண்டியின் வேகம் குறைந்தது. மாயாண்டிக்கும் சொல்ல எவ்வளவோ இருக்கிறது! அதையெல்லாம் சொல்லவா முடியும்? மூன்று வேளையும் உப்புப் போட்டுச் சோறு போடுகிறார் தேவர். வாலை ஆட்டிக் கொண்டு வாசலில் நிற்க வேண்டியதுதான். கூப்பிட்ட குரலுக்கு அவர் முன் போய்க் குனிந்து நிமிர்ந்து நிற்க வேண்டியதுதான். மாயாண்டியின் சம்சாரம் கோபித்துக் கொண்டு போனதற்கு இதுதான் காரணம். 'உனக்கு தேவர் வீட்டு வாசலே போதிமரம் என்றால் நான் எத்தனை நாளைக்கு உத்திரம் பார்த்துக் கொண்டு உக்கார்ந்திருப்பது? அடுப்பில் உலை ஏற வேண்டாமா? உன் பசி அடங்கினால் போதுமா? எனக்கும், பிள்ளைக்கும் பசி வயிற்றை அறுக்கிறதே!'

அவள் கைக்குழந்தையுடன் படியிறங்கி விட்டாள். அப்பன் வீட்டில் ஆண்டிப்பட்டியில் களை வெட்டி, கழனி பார்த்து வயிற்றை நிரப்பிக் கொண்டிருப்பதாகத் தகவல். நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நாள். ஆவல் தாங்காதுதான் தேவரிடம் கேட்டான். 'அவளைப் போய் கூட்டியாந்திரட்டுங்களாய்யா!' அவருக்கு முன் நெற்றிப் புருவம் இணைந்து, மூக்குச் சிவந்து விட்டது. 'அவதான் ஓடுகாலி... ஓடிட்டாளே! போன முண்டையை எதுக்குக் கூப்பிடணுங்கிறே! உனக்கு நான் சோறு போடலையா?' அந்தக் குரலில் ஆவல் அத்தனையும் அடங்கிப் போயிற்று! அதற்குப் பிற்பாடு அந்தப் பேச்சே எழவில்லை. அவளும் வரவில்லை. அவளுடைய நினைப்பும் கரைந்து போய்த் தேவர்தான் தெரிகிறார் - தெய்வமாய்த் தெரிகிறார்.

''மாயாண்டி வண்டியை நிறுத்து!''

வண்டி நின்றது!

''என்னை விட்டுடு.''

''என்னம்மா சொல்றீங்க!''

''உறவுன்னு ஒண்ணு வேணும், மாயாண்டி. அது உயிர் உள்ள உறவா இருக்கணும். அப்பத்தான் வீடு களை கட்டும். வீடுன்னா என்னன்னு புரியும். நாள் கிழமை, பண்டிகை, அர்த்தமாகும். காலை, மாலை, இரவுங்கிறது சாப்பிடுறதுக்கு மட்டும் தான்னு இல்லை. நீயும் நானும் அப்படித் தான் இருக்கோம்.''


''கடவுளே!''

''இந்தா மாயாண்டி, என் நகை நட்டு எல்லாம் இந்தப் பையிலே இருக்கு. நாற்பது பவுன்கிட்ட இருக்கும். எல்லாம் வாரிச் சுருட்டி எடுத்து வெச்சிருக்கேன். கொண்டு போ. குடும்பம் குட்டினு இரு. என்னை இந்த ஆற்றில் இறக்கி விட்டிரு.''

அவள் கையில் நகைப் பை. மாயாண்டிக்கு வாயடைத்துப் போனது. ஆடி மாத வைகை கரை புரண்டு கொண்டிருந்தது. உடலெல்லாம் வெடவெடவென்று ஆடியது. அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். அவள் கண்ணீர் மாலை மாலையாய் உதிர்ந்து கொண்டிருந்தது. அவன் மனமும் அன்றிரவில்தான் விழித்திருக்கிறது!

திடுமென வண்டி குலுங்கியது. வேதவல்லி கீழே இறங்கி விட்டாள். மாயாண்டியின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தது. பதற்றத்தில் ''அம்மா... அம்மா...'' என்று கூவினான்.

சரக்கென்று சாலையைத் தாண்டி இடது பக்க வயல் காட்டு வரப்பில் நடந்து ஆற்றுக்கு ஓடினாள். பின்னாடியே மாயாண்டி பதைபதைப்பாய் ஓடினான். தாழம்பூ புதருக்குள் நுழைந்து ஆற்றில் இறங்கி விட்டாள். ஆற்றில் தண்ணீர் திமிறிக் கொண்டு ஓடிற்று! கால் வைத்தவளைப் பளார் என்று உள்ளே இழுத்துக் கொண்டது. டப் டப் என்று கை உதறிய சப்தம் மட்டும் கேட்டது. மாயாண்டி அடித் தொண்டையிலிருந்து ஒரு


பக்தி
மார்க்கத்துக்குப்
பண்டரிபுரம்...
உல்லாசத்துக்கு
லக்ஷத் தீவுகள்!
இன்னும்....
கல்கி
தீபாவளி
மலர்-93

பண்டரிபுரம் வண்ணப்படம் : யோகா

அலறல் மட்டும் வெளிப்பட்டது. வெளிச்சம் சரியாக இல்லை. அவனால் ஒன்றும் பண்ண முடியவில்லை. சிறிது தூரம் வரப்பு வழியே ஆற்றைப் பார்த்துக் கொண்டு ஓடினான். பின்பு திரும்பி விட்டான்.


இனி தேவர் கேட்டால் என்ன சொல்லுவது? தேவர் உலுக்கி எடுத்து விடுவார். மாயாண்டிக்கு மனக பிடுங்கி எடுத்தது. இனி என் திசை எது? பேசாமல் நாமும் ஆற்றில் இறங்கி விடலாமா? எனக்கு எதுவுமே தெரியாது என்று கண்ணை மூடி ஆற்றில் இறங்கி விடலாமா? கங்கா தேவியே என்னை ஏற்றுக் கொள் என்று பணிந்து விடலாமா? இல்லை வண்டியைத் திசை திருப்பி ஓட்டிச் செல்லலாமா? எங்காவது தூரதேசமாய்ப் போய் விடலாமா? தேவருக்குத் துப்புக் கிடைத்து விடும். எப்படியாவது தேடிப் பிடித்து விடுவார். அது மிகவும் அசிங்கமாகி விடும். ஊர் கூடி, உறவுச் சனங்கள் தலைகுனிய, சந்தி சிரிக்கப் போயிடும். வேண்டாம் அப்படிப் போக வேண்டாம். கடவுள் மீது பாரத்தைப் போட்டு வண்டியை மதுரைக்கே ஓட்டிச் செல்லலாம். தேவரின் முறுக்கு மீசையும், புலிக் கண்ணும் - படபடக்கிற பாய்ச்சல் உடம்பும் பயம் காட்டிற்று! தேவருக்கு என்ன பதில் சொல்லப் போகிறோம். இப்பவே உதடு ஈரம் உலர்ந்து ஒட்டிக் கொண்டது. 'நகை இவ்வளவுதான் கொடுத்தாளா? மீதி எங்கே? அவள் ஆற்றில் இறங்குறது வரை என்னடா பண்ணின? வேடிக்கையா பார்த்துக் கொண்டிருந்தே! இல்லை நகைக்கு ஆசைப்பட்டு, நீயே கழுத்தை முறித்துச் சுழலில் தள்ளி விட்டுட்டியா?' எத்தனை சாட்டையடி விழப் போகிறதோ! உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மாயாண்டி வண்டியைக் கிளப்பினான்.

மதுரைக்குள் நுழைவதற்கும் பளபள வென்று விடிந்து, வெள்ளை நரையாய் வெயில் விழுவதற்கும் சரியாக இருந்தது. முதல் தெருவிற்குள் நுழைந்து, பிள்ளையார் கோவில் வளைவில் திரும்பி, தேவர் வீடு உள்ள தெருவில் திரும்ப, ஒரே கூட்டம். வண்டி உள்ளே நுழைய முடியவில்லை. இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாய்க் கூட்டம் ஓடிக் கொண்டிருந்தது. மாயாண்டி வண்டியை ஓர் ஓரமாய் நிறுத்தினான். கீழே இறங்க முடியவில்லை. உடல் உதறலெடுத்தது! இடக் காளையை விலக்கி, மாட்டின் முதுகில் கையூன்றி மெல்லக் கீழே குதித்தான்.

''என்னங்கையா கூட்டம்?''

''மலைச் சாமித் தேவர் போயிட்டார். நேத்து ராத்திரியிலெ நெஞ்சு வலின்னாராம். மாரடைப்புத்தான். டாக்டரைக் கூட்டியாரத்துக்குள்ள உசிரு பிரிஞ்சிடுச்சாம்...''

பெறுவீர் சான்மேக் கி:ப்ட் கார்டு.



5வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி
சான்மேக் சிட்ஸ் அளிக்கும் சிறப்புச்சலுகை

சான்மேக் சிட்ஸ் கடந்த 5 ஆண்டுகளாக அதன் வாடிக்கையாளர்களுக்கு உறுதிப்பாட்டுடன்கூடிய சேவையை அளித்து வருகிறது.

இனி வரும் ஆண்டுகளிலும் இது போன்ற சேவை தொடரும் என்பதை குறிக்கும் வகையில் சான்மேக் சிட்ஸ் அளிக்கும் இணையற்ற சலுகை

சான்மேக் கிஃப்ட் கார்டு.

செப்டம்பர் 15ம் தேதி முதல் நவம்பர் 15ம் தேதி, 1993 வரை எந்தவொரு சீட்டு குரூப்பிலும், சேரும் ஒவ்வொரு சந்தாதாரரும் பெறும் சிறப்புரிமை!

சான்மேக் கிஃப்ட் கார்டு. இந்த கிஃப்ட் கார்டு பெறுவதைத் தொடர்ந்து நீங்கள் மகிழ்வூட்டும் பல பயன்களைப் பெறுவீர்கள். சான்மேக் சிட்ஸிலிருந்து மட்டுமின்றி மற்ற சான்மேக் குரூப் நிறுவனங்களிடமிருந்தும் பலப்பல பயன்களை நீங்கள் பெறலாம்.

எனவே, வாடிக்கையாளர்களுக்குச் சேவையளிப்பதில் 5 ஆண்டு வெற்றிகரமாக நிறைவு பெறுவதை சான்மேக் சிட்ஸ் மகிழ்ச்சியோடு கொண்டாடும் இவ்வேளையில், நீங்களும் ஒரு 'கிஃப்ட் கார்டு' பெற்று மகிழ்வடையுங்கள்.

அதன்மூலம் ஒரு நம்பகமான, ஸ்திரமான சீட்டு நிறுவனத்தில் உறுப்பினராக இருப்பதனால் பெறக்கூடிய எல்லா சிறப்புரிமைகளையும் அனுபவியுங்கள்.

முக்கிய அம்சங்கள் :

- 5 ஆண்டுகளிலேயே ரூ. 22 கோடி சீட்டுப்பரிசுப் பணமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.
- 10,000 பேருக்கும் கூடுதலான சந்தாதாரர்கள்

சீட்டு குருப்புகள்	சீட்டுத் தொகை ரூ.	அனுமதி கட்டணம் ரூ.	பரிசுப் பொருட்கள்
ரூ. 400 × 25 மாதங்கள் ரூ. 500 × 20 மாதங்கள்	10,000	40	எவர்சில்வர் பேசின்
ரூ. 1,000 × 25 மாதங்கள் ரூ. 625 × 40 மாதங்கள்	25,000	75	எவர்சில்வர் சிற்றுண்டி செட்
ரூ. 500 × 60 மாதங்கள் ரூ. 1,500 × 20 மாதங்கள் ரூ. 750 × 40 மாதங்கள்	30,000	100	எவர்சில்வர் சாப்பாடு செட்
ரூ. 2,000 × 25 மாதங்கள் ரூ. 1,250 × 40 மாதங்கள் ரூ. 1,000 × 50 மாதங்கள்	50,000	125	எவர்சில்வர் பால் பாத்திரம்
ரூ. 1,250 × 60 மாதங்கள்	75,000	150	எவர்சில்வர் கடாய் (மூடி இல்லாமல்)
ரூ. 2,500 × 40 மாதங்கள் ரூ. 4,000 × 25 மாதங்கள்	1,00,000	250	சூட்கேஸ்
ரூ. 5,000 × 40 மாதங்கள்	2,00,000	500	வெள்ளி காமாட்சி விளக்கு
ரூ. 10,000 × 50 மாதங்கள்	5,00,000	800	தங்க காசு

எல்லா குருப்புகளுக்கும் உச்ச வரம்பு 30%.

அறிமுகம்

விசேஷ சீட்டு குருப்புகள் ரூ.10,000 முதல் ரூ.5 லட்சம் வரை.
ஒவ்வொரு சந்தாதாரருக்கும் பரிசு உண்டு.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

பதிவு & தலைமை அலுவலகம்
'ஜெம்ஸ் கோர்ட்', A-8, முதல்மாடி, 14, காதர் நவாஸ்கான் ரோடு,
சென்னை 600 006. போன்: 8250601/8251232.

BID FOR A BETTER LIFE


கிளை அலுவலகங்கள்: • **சென்னை:** 'மவுண்ட் சேம்பர்ஸ்', பிளாட் 'E' மூன்றாவது மாடி, 758, அண்ணா சாலை, போன்: 8277363 • 5, பாலாஜி அவென்யூ II சாலை, தி.நகர், போன்: 8278515/8258637 • 6, இரண்டாவது அவென்யூ, அசோக் நகர், போன்: 4824757 • பிளாட்-B, தேவ்கர் அபார்ட்மெண்ட்ஸ், 147, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், போன்: 4992488 • 'கபில் காம்ப்ளக்ஸ்', C-31, இரண்டாவது அவென்யூ, அண்ணா நகர் மேற்கு, போன்: 6214454 • 31, அய்யாசாமி வீதி, மேற்கு தாம்பரம் (நேஷனல் தியேட்டர் அருகில்) போன்: 401934 (PP) • பிளாட் 55, 'Bhaiya Complex', 286, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (டோவ்டன் கபே எதிரில்) சென்னை 600 007 • **மதுரை:** 'NCS பில்டிங்ஸ்', இரண்டாவது மாடி, 113-B, மேற்கு பெருமாள் மேஸ்ட்ரி வீதி, மதுரை-1. போன்: 23334 • **கோயம்புத்தூர்:** ஸ்ரீநிவாசா டிரேட் சென்டர், 160/27, D.B. சாலை, R.S. புரம் (கென்னடி தியேட்டர் அருகில்) கோயம்புத்தூர்-2. போன்: 46375 • **திருச்சி:** 21, முதல் மாடி, 'சித்ரா காம்ப்ளக்ஸ்', சிந்தாமணி, திருச்சி-2. போன்: 25324 • **திருவண்ணாமலை:** 'சஸ்வரி காம்ப்ளக்ஸ்', 23/12, கோபால் பிள்ளையார் கோயில் சாலை, திருவண்ணாமலை-1. போன்: 2579 (PP). • **கும்பகோணம்:** 41, நாகேஸ்வரன் சன்னதி வீதி, கும்பகோணம்-1 • **திருநெல்வேலி:** 25-B, S.N. நெடுஞ்சாலை, "SRC காம்ப்ளக்ஸ்', இரண்டாவது மாடி, திருநெல்வேலி-1. போன்: 322032.

Adwise/3426/93

அன்னபூரணி தந்த ஐடியா!

கதை: உதாதிபன்

படம்:




மருத்துவ மனையில் அன்ன பூரணியின் கணவர்...
இருதயத்துக்குப் போகும் ரத்தக் குழாயில, சின்ன அடைப்பு ஏற்பட்டிருக்கு. உடனடியா ஆபரேஷன் செஞ்சாகணும்...
செய்யுங்க டாக்டர்...
அதுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் செலவாகுமே!
ஐயோ! கடவுளே... அம்பதாயிரத்துக்கு நான் எங்கே போவேன்!...
சுமதியின் மாமியார், அன்னபூரணியைத் தேற்றுகிறாள். பிறகு சுமதியிடம்...
சுமதி! உன் நகைகளைக் குடேன். அடகு வெச்சுப் பணம் பரட்டலாம்...
ஐயோ! அதை லாக்கர்லே வெச்சுட்டேனே! பேங்க்கும் மூடியிருப்பாங்களே...
ரமேஷ்! இந்தா... அகல்யாவோட நகை... இதைக் கொண்டு போய் அடகு வெச்சுப் பணம் கொண்டு வா!
அம்மா! இது கல்யாணப் பொண்ணு நகை. விடிஞ்சா கல்யாணம். சம்பந்தி வீட்டார் என்ன சொல்லுவாங்களோ...
அவங்ககிட்டே பேசிட்டேன். கல்யாணப் பொண்ணுக்குக் குணம்தான் முக்கியம். நகைங்க இல்லேன்னு அவங்கதான் இந்த ஐடியாவையே கொடுத்தாங்க...
அன்னபூரணி மீண்டும் அழுதாள். ஆனால் - இது கணவனுக்கான அழுகை மட்டுமல்ல...

சக்கரவர்த்தித் திருமகன்

55. ஆபரணங்களைக் கண்டான்

சீதையை இழந்ததனால் ராமன் படும் துக்கத்தைப் பார்த்து சுக்ரீவன் அவனுக்குப் பலவிதமாகத் தைரியம் சொன்னான்.

''லக்ஷ்மணன் சொன்னதிலிருந்து எல்லாம் அறிந்தேன். நீ சிந்திக்க வேண்டாம். எப்படியாவது சீதை இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்போம். அவளை எங்கே மூடி வைத்திருந்தாலும் கண்டு பிடித்துத் தருவோம். நீ சந்தேகப்பட வேண்டாம். வெகு நாள் காத்திருக்க வேண்டியதுமில்லை. சீக்கிரமே இந்தக் காரியத்தை முடித்துத் தருவோம்.

''ஆகாய மார்க்கமாய் ஒரு ஸ்திரீயை அரக்கன் தூக்கிப் போனதை நானும் என் கூட இருந்தவர்களும் பார்த்தோம். அவள் துடிதுடித்து அழுது கொண்டும் 'ராமா! லக்ஷ்மணா' என்று கூக்குரலிட்டுக் கொண்டும் போனதைக் கண்டோம். எங்களை அவளும் கண்டாள். கண்டு தன் உத்தரீயத்தை எடுத்துத் தன் மேலிருந்த ஆபரணங்களைக் கழற்றி அதில் முடித்துக் கீழே போட்டாள். அதை எடுத்து வைத்திருக்கிறோம். நீ பார்த்து இது உன் மனைவி சீதையின் ஆபரணங்களா என்று பார்க்கலாம்'' என்றான்.

இதைக் கேட்டதும் ராமன் தாங்க முடியாது பரபரப்புடன், ''கொண்டு வா, கொண்டு வா!'' என்றான்.

குகையில் வைத்திருந்த அந்தத் துணி மூட்டையைக் கொண்டு வந்தார்கள். வஸ்திரத்தைப் பார்த்தவுடனே ராமனுடைய துக்கம் பொங்கி, பொறுக்க முடியாமல் போய் விட்டது. சிறு முடிப்பாகக் கட்டியிருந்த சீதையின் உத்தரீயத்தைப் பார்த்ததும் அரக்கன் கையில் சிக்கித் தவித்த சீதையின் சங்கட நிலை ராமன் கண்முன் நின்றது.

''லக்ஷ்மணா! இந்த மூட்டையை அவிழ்த்துப் பார், என்னால் பார்க்க முடியவில்லை'' என்று கண்களை மூடிக் கொண்டான்.

லக்ஷ்மணன் துணி முடிப்பை அவிழ்த்து, ''இவை சீதையின் நூபுரங்களே. சந்தேகமில்லை'' என்றான்.

கால்களுக்கு இட்ட ஆபரணங்களை முதலில் எடுத்து லக்ஷ்மணன் அடையாளம் கண்டதைப் பற்றி பக்தர்கள் ரொம்ப ரசித்து அதை எடுத்துக் கொண்டு உபந்நியாசம் செய்வது வழக்கம்.

பிறகு எல்லா ஆபரணங்களையும் எடுத்து ராமன் நன்றாக அடையாளம் கண்டு கண்ணுக்கு ஒத்திக் கொண்டான். ''புல்லில் விழுந்தபடியால் அப்படியே எல்லாம் கெடாமலிருக்கிறது பார், லக்ஷ்மணா!'' என்றான் ராமன்.

பிறகு துக்கத்துக்கு மேல் அடங்காத கோபம் மூண்டவனாக ராமன் ''சீதையைத் தூக்கிப் போன இந்த அரக்கனுக்காக யமன் வீட்டு வாயில் திறந்து கிடக்கிறது. அவனையும் அவன் குலம் முழுதையும் இப்போதே அழிப்பேன், நிச்சயம்'' என்றான்.

இப்படி ராமன் தன் மனைவியையிழந்த துக்கமும் அரக்கன்மேல் உண்டான கோபமும் வளர்ந்து, பொங்கி வந்ததை சுக்ரீவன் பார்த்துக் கொஞ்சம் கவலைப் பட்டான்.

பரஸ்பர சிநேகத்தைப் பற்றியும் சகாயத்தைப் பற்றியும் பிரதிக்ஞை அக்கினி சாக்ஷியாக எடுக்கப் பட்டிருந்த போதிலும் எந்தக் காரியம் முன் நடைபெறவேண்டும், எது பின்னால் நடைபெற வேண்டும் என்கிற பிரச்னை சுக்ரீவன் மனத்தில் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தது. ராமனுடைய கோபாவேசத்தையும் துக்கத்தையும் சுக்ரீவன் நன்றாக உணர்ந்தான். அவனோடு வாதம் செய்வதில் பயனில்லை. அப்படிச் செய்தால், ராமன் மனத்தில் தன்னைப் பற்றிச் சந்தேகங்கூட உண்டாகலாம், புதிதாக ஏற்பட்ட நட்பு சேதப்படும் என்று எண்ணினான். உடனே சீதையைத் தேடுவதிலும் ராவணனைத் தாக்கும் வேலையிலும் புகுந்து விட்டால் வாலி என்ன செய்வானோ? அண்ணன் வாலி வானர ராஜ்ய பதவியிலிருக்கும் போது சுக்ரீவனுடைய பலம்

ராஜாஜி

எந்த மட்டுக்குச் செல்லும்? ராம னுடைய காரியம் வெற்றியடைவது கூடச் சந்தேகமாகப் போகும் என்றெல் லாம் யோசித்தான். ஆனபடியால் முதல் வேலையாக வானர ராஜ்யத்தை மறுபடி தான் அடைந்து விட வேண்டும். இரு வருடைய காரிய சித்திக்கும் இது அவ சியம் என்ற முடிவுக்கு வந்தான். நீதி சாஸ்திரமும் ராமனுடைய மனோ நிலையையும் உணர்ந்து சமத்காரமாக நடந்து கொள்ளத் தீர்மானித்தான்.

"இந்த மகா பாபி அரக்கனுடைய பலபராக்கிரமமும் இருப்பிடமும் நான் நன்றாக அறியேன். அவன் சீதையை எங்கே கொண்டு போய் வைத்திருக் கிறான் என்பதும் தெரியாது. ஆயினும் நான் உனக்குச் சத்தியம் செய்து வாக் குறுதி கொடுக்கிறேன். சீதையை எங்கே வைத்திருந்தாலும் கண்டு பிடித்து, அவன் இருக்குமிடமும் கண்டு, அரக் கனை வதம் செய்யும் மார்க்கத்தையும் தேடி முடிக்கப் போகிறேன். உனக்குச் சந்தேகம் வேண்டாம். துக்கப்படாதே. தைரியம் அடையக் கடவாய். முயற்சிக் குத் தைரியம் இன்றியமையாத மனோ நிலை. அரக்கனைக் கண்டு பிடித்து அவனையும் அவன் குலத்தையும் வேரோடு அறுத்து அழிப்போம். உன் வீரம் வீண் போகாது. அரக்கனை வதம் செய்து, உன் பௌருஷத்தை நாட்டிப் புகழடைவாய். மனச் சோர்வு வேண் டாம்.

"என்னைப் பார். நானும் உன் னைப் போல் மனைவியை இழந்தும் ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டும் அவ மானப் பட்டு வருகிறேன். ஆயினும் துக் கத்தின் வேகத்தை அடக்கிக் கொண்டு தைரியத்தைக் காத்து வருகிறேன். நான் ஒரு வானரன், என்னால் தைரியமாக இருக்க முடியுமானால் உனக்கு இது ஒரு கஷ்டமா? கண்ணீர் விடாதே. பொங் கும் துக்கத்தைத் தடுத்துக் கொள். உன் னைப் போன்ற ஜிதேந்திரியர்கள் பயம், துக்கம் இவற்றால் உள்ளம் தளர்ந்து போகாமல் மனத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இல்லாவிட்டால் சோகத்தில் சிக்கிக் கொண்டு சமுத் திரத்து நடுவில் பெருங் காற்றால் அலைக்கடிக்கப்பட்ட ஓடத்தைப் போல் கவிழ்ந்து போவோம். சோகத் துக்கு இரையாகப் போனோமானால் ஒரு காரியமும் சாதிக்க முடியாது. ஆன படியால், நண்பனே, துக்கத்தை அடக்கி யாள்வாய். உன்னை நான் வருந்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். துக்கம் நம்மை இழுத்துக் கொண்டே போய்த் தோல்விப் பள்ளத்தில் நம்மைத் தள்ளி விடும். உள்ளத்தில் தைரியத்தை நிலை நிறுத்திக் கொள். நான் உனக்கு



உபதேசம் செய்யும் தகைமை பெற்றவனல்ல. நண்பன் என்கிற உரிமையில் எனக்கு எது உசிதம் என்று தோன்றுகிறதோ அதைச் சொல்லுகிறேன். உனக்குத் தெரிந்த விஷயத்தையே ஞாபகப்படுத்துகிறேன். அவ்வளவே.''

இப்படிச் சுக்ரீவன் மிகப் பிரியமாகச் சொன்னதெல்லாம் ராமன் உள்ளத்தில் பதிந்தது. கண்ணீர் நிறைந்து பெருகிய கண்களைத் துடைத்துக் கொண்டு சுக்ரீவனை ஆலிங்கனம் செய்து கொண்டான். சீதையின் மேல் வஸ்திரத்தையும் ஆபரணங்களையும் கண்டதினால் உண்டான மனக் கலக்கத்தை நிறுத்திக் கொண்டு தனக்குரிய மனோநிடத்தைத் திரும்ப அடைந்தான்.


''உன்னுடைய சிறந்த நட்பை அடைந்தேன், சுக்ரீவனே! உன் யோசனைப்படி நடப்பேன். சீதையைத் தேடும் காரியத்தைப் பற்றி நன்றாக யோசிப்பாய். உன் காரியத்தை என் காரியமாகவே நான் எண்ணி எல்லாம் செய்வேன். இது உறுதியென்று நம்புவாய். இது வரையில் நான் எப்போதும் பொய் சொன்னதில்லை. இனியும் சொல்லப் போவதில்லை. நம்முடைய நட்பு என்றைக்கும் பொய்யாகாது. சத்தியம் செய்கிறேன். உன் கஷ்டத்தைத் தீர்க்கும் வழியைக் கூசாமல் சொல்; நான் செய்து முடிப்பேன்'' என்றான் ராமன்.

ராமனுடைய சொற்களைக் கேட்ட சுக்ரீவனும் அவனுடைய மந்திரிகளும் எல்லை கடந்த மகிழ்ச்சியடைந்தார்கள். தங்களுடைய கஷ்டங்கள் முடிந்து மறுபடி சுக்ரீவன் வானர ராஜ்யம் பெறுவது நிச்சயம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

56. சுக்ரீவன் கதை

சுக்ரீவன் தன் சகோதரன் வாலிக்கும் தனக்கும் உண்டான விரோதத்தின் கதையை ராமனிடம் விவரமாகச் சொன்னான்.

''என் அண்ணன் வாலி வானர ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்று, கிஷ்கிந்தையில் அரசு புரிந்து வந்தான். மகா பராக்கிரமசாலி. அவனிடம் அன்பும் பக்தியும் குறைவின்றிச் செலுத்திக் கொண்டு நான் யுவராஜனாக இருந்து வந்தேன். வாலிக்கும் மாயாவி என்கிற



அசுரனுக்கும் பழைய விரோதம். ஒரு நாள் ராத்திரி அந்த அசுரன் கிஷ்கிந்தைக்கு வந்து வாலியைப் போருக்கு அழைத்தான்.

''அவன் இரவில் போட்ட கர்ஜனையைக் கேட்டுக் கோபங் கொண்டு தூங்கிக் கொண்டிருந்த வாலி எழுந்து அவனை உடனே எதிர்க்க வெளியேறினான். நானும் அவனுக்கு உதவியாகக் கூடவே சென்றேன். நிலா வெளிச்சத்தில் நாங்களிருவரும் வருவதைப் பார்த்து மாயாவியானவன் ஓடி ஒரு குகைக்குள் நுழைந்தான். வாலியும் அவனைத் துரத்திக் கொண்டு குகைக்குள் புகுந்தான். நானும் உள்ளே புகப் போனேன். வாலி என்னை வேண்டாம் என்று தடுத்து விட்டான். தான் ஒருவனாகவே அந்தத் துஷ்டனைக் கொல்ல வேண்டும் என்று சொல்லி, என்னை அந்தக் குகையின் வாயிலில் வெளியே நிற்கச் சொன்னான். சொல்லிவிட்டு அவன் உள்ளே புகுந்து சென்றான்.

''உள்ளே சென்றவன், பல நாட்களாகியும் திரும்பி வரவில்லை. அண்ணனுக்கு என்ன நேர்ந்ததோ என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் குகைக்குள் அசுரர்களுடைய பெருங்கூக்குரல் கேட்டது. அதன் கூடக் குகையிலிருந்து ரத்த வெள்ளம் பெருகி வந்தது. இதைக் கண்டதும், வாலியை மாயாவியும் பல அசுரர்களும் சூழ்ந்து கொன்று விட்டார்கள் என்று தீர்மானித்துக் கொண்டேன். அசுரர்கள் வந்து என்னையும் தாக்குவார்கள் என்று எண்ணி ஒரு பெரும் பாறாங்கல்லைக் குகை வாயிலில் வைத்து மூடி விட்டேன்.

''கிஷ்கிந்தைக்கு வருத்தத்தோடு திரும்பினேன். வாலி இறந்தான் என்று யாருக்கும் சொல்லாமலே ராஜ காரியங்களைப் பார்த்து வந்தேன். பிறகு வானரப் பிரஜைகள் நிர்ப்பந்தித்தார்கள். 'அரசனில்லாமல் போனால் ராஜ்யம் பாழாகப் போகும், வெகு நாளாகியும் வாலி திரும்பவில்லை; நீயே பட்டாபிஷேகம் செய்து கொண்டு அரசு புரிவாய்'' என்று வற்புறுத்தினார்கள். நானும் அதற்கு இணங்கினேன்.

''சில காலம் கழித்து மாயாவியையும் அவனுடைய துணையாட்களாக விருந்த அசுரர்களையும் கொன்று ஒழித்து விட்டு வாலி திரும்பினான். குகை அடைபட்டிருப்பதைப் பார்த்து, ''சுக்ரீவா! சுக்ரீவா!'' என்று உள்ளேயிருந்து கத்திப் பார்த்தான். நான் அவ்

விடமில்லையானபடியால் எனக்கு இது ஒன்றும் தெரியாது. அவன் என்மேல் மகா கோபங் கொண்டு கற்பாறையை உதைத்துத் தள்ளி விட்டுக் கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்தான்.

''நான் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து கொண்டு அரசு புரிவதைப் பார்த்ததும் அடங்கா சினம் மேலிட்டு என்னைப் பலவாறாகத் திட்டினான். நான் நடந்ததை நடந்தது போலச் சொன்னேன். 'அரக்கன் உன்னைக் கொன்று விட்டான் என்று எண்ணி இவ்விதம் செய்தேன். பிரஜைகளுடைய நிர்ப்பந்தத்துக்காக அபிஷேகம் பெற்றேன். இந்த ராஜ்யம் உன்னுடையது, திரும்பப் பெற்றுக் கொள். உன் அடிமையாக நான் முன்போல் இருப்பேன்' என்று சொல்லி அவன் காலில் விழுந்தேன். அவனோ நான் சொன்னதை லட்சியமே செய்யவில்லை. நான் துராசைப்பட்டுக் குகை வாயிலை அடைத்து விட்டு அக்கிரமமாகப் பட்டாபிஷேகம் செய்து கொண்டேன் என்றே அவன் நினைத்து, என்னை நகரத்திலிருந்து வெளியே துரத்தி விட்டான். 'திரும்பி இந்தப் பக்கம் வந்தால் உன்னைக் கொல்வேன்' என்று சொல்லி என்னைத் துரத்தி விட்டான். அப்போது நான் உடுத்தியிருந்த வஸ்திரத்துடன் வெளியே ஓடினேன். அதுமுதல் காடும் மலையுமாக மறைந்து திரிந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன். எல்லாம் இழந்து இந்த நிலையிலிருக்கிறேன். இந்த நான்கு வானரர்களே எனக்குத் துணையாக இருந்து வருகிறார்கள். கோபத்தால் உண்மையையறிய மாட்டாமல் என் அண்ணன் இம்மாதிரி அக்கிரமம் செய்து வருகிறான். மகா பராக்கிரம சாலியான அந்த வாலியை ஹதம் செய்து என்னைக் காப்பாற்றுவாய்'' என்றான் சுக்ரீவன்.

சுக்ரீவனுடைய பரிதாப நிலையை ராமன் கண்டு கருணைமேலிட்டு, ''உனக்கு நான் தந்த சபதம் உறுதி. பயப்படாதே. என் அம்பு வாலியின் உடலைத் துளைக்கும். உனக்குப் பகையாகி விட்ட சகோதரனைக் கொன்று உன் கவலையை நீக்குவேன்'' என்று மறுபடியும் பிரதிக்ஞை செய்தான்.

இந்த வாலி-சுக்ரீவன் நிகழ்ச்சியானது புராணங்களில் செய்யப்படும் உபதேசத்துக்கு நல்ல உதாரணம்.

வாலியின் நடவடிக்கையிலும் பெருங்குற்றமில்லை, சுக்ரீவனுடைய காரியங்களிலும் பெருங் குற்றம் சொல்வதற்கில்லை. கோபத்தால் புத்தி மழுங்கிப் போகும். கோபத்துக்கு வசப்பட்டு விட்டால் உண்மையைக் காணும் சக்தியை இழந்து விடுகிறோம். அதனின்று பிறகு நாசம் அடைவோம் என்பது சாஸ்திரம். இதற்கு வாலியின் கோபாவேசமும் முடிவும் உதாரணம் தருகின்றன. சுக்ரீவன் தான் செய்த காரியங்களை வணக்கமாகவும் உண்மையாகவும் சொல்லிப் பார்த்தான். ஆனாலும் அது வாலியின் புத்தியில் ஏறவில்லை. காரணம், வாலியின் அடங்காக் கோபம்.


சுக்ரீவனும் அவசரப்பட்டுத் தன் தமையன் மாண்டான் என்று தீர்மானித்து விட்டான். அசுரர்கள் வந்து தன்னையும் கொன்று விடுவார்கள் என்று பயந்து குகை வாயிலை அடைத்துப் போட்டு ஊர் திரும்பிவிட்டான். ராஜ்யாதிகாரம் பெற வேண்டும் என்று முதலில் ஆசைப்படவில்லை. ஆயினும் பிரஜைகள் நிர்ப்பந்தித்ததால் பிறகு உடன்பட்டு விட்டான். ஆசை வலையில் சிக்கினான். தீர ஆலோசியாமல், நடந்து கொண்டான். அதனால் கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டான். தீர ஆலோசிக்காமல் செய்யும் காரியங்கள் அனர்த்தத்தில் முடியும் என்பது சுக்ரீவனுடைய கதையினின்று அடைய வேண்டிய உபதேசம்.

பிறர் சொத்தை ஆசைப்படலாகாது. ஆசையை அடக்கியாள்வது மிகக் கடினம். இதில் முழு வெற்றியடைவதற்கு வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பரதனையும் பட்டம் கட்டிக்கொள் என்று மந்திரிகளும் பிரஜைகளும் அயோத்தியில் வற்புறுத்தினார்கள். ஆயினும் அவன் ஒப்புக் கொள்ளவில்லை. இது பரதனுடைய சிறப்பு. சுக்ரீவனோ ஒப்புக் கொண்டு விட்டான். அதனால் துன்பம் அடைந்தான். பரதன் வேண்டாம் என்று மறுத்துப் பெருங் கீர்த்தி அடைந்தான்.

இராமாயணத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் சாதாரண வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய தருமம் விளக்கப்படுகிறது. விளக்கம் சில இடங்களில் நேரான விளக்கமாக இருக்கும். சில இடங்களில் அப்படி நேராக எடுத்துக் காட்டாமல் குறிப்பாகக் கிடக்கும். பக்தியோடு சிந்தனை செய்தால் விளங்கும்.

(தொடரும்)

குமரி முனையில் குறளாசிரியர்!



குமரிமுனையில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை அடுத்து 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்து வருகின்றன.

இந்தச் சிலையை அமைப்பதற்காகக் கடலில் 30 அடி உயரமுள்ள பாறையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதன் சுற்றளவு 200 அடி. பாறையைச் சமனப்படுத்துவது அத்தனை சுலபமல்ல. வருடத்தில் ஆறு மாதங்கள் அதை நெருங்க முடியாதபடி கடல் கொந்தளிப்பு. ''இருப்பினும் தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்பரேஷன் இப்பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் பக்கத்தில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் எந்த வகையிலும் பாதிக்காதபடி செயல்பட முடியுமென்ற நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது'' என்கிறார் என்ஜினியர் சிவன்.

வள்ளுவர் சிலையை உருவாக்க 8000 டன் கிரானைட் உபயோகப்படுத்தப்படும். 3,678 துண்டுகளை இணைத்து சிலையையும் அதன் பீடத்தையும் உருவாக்கப் போகிறார்கள். ஒவ்வொரு கல் துண்டின் எடை சுமார் இரண்டு டன் இருக்குமாம்!

திருவள்ளுவர் சிலையின் உயரம் 95 அடி. பீடம் 38 அடி. ஆக மொத்தம் 133 அடி. திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களைக் குறிப்பிடும் வகையில் உயரம் கணக்கிடப்பட்டிருக்கிறது. குறளில் உள்ள அறம் - பொருள் - இன்பம் மூன்று பகுதிகளிலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட 38 அதிகாரங்களில் உள்ள குறள்கள் பீடப் பகுதியில் செதுக்கப்படும்.

இதை உருவாக்கித் தர, உலகப் புகழ் பெற்ற சிற்பக் கலைஞர் கணபதி ஸ்தபதி அமர்த்தப்பட்டிருக்கிறார். வள்ளுவரின் முகம் 10 அடி. ஒருபுறத்திலிருந்து மற்றொரு பக்கத் தோள்களின் நீளம் 30 அடி. அவர் கையில் உள்ள திருக்குறள் ஓலைச்சுவடியின் நீளம் 10 அடி எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். எல்லாத் திசைகளிலும் அவரது புகழ் பரவியிருக்கிறது என்பதை உணர்த்த, ஏழடி உயரத்தில் பத்து யானைச் சிற்பங்களை உருவாக்கி, வெவ்வேறு திக்கு நோக்கி இருக்குமாறு பீடத்தில் அமர்த்தப் போகிறார்கள்.

1976-77 ஆண்டுகளில் கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது 4.44 கோடி ரூபாய் செலவில் இந்தச் சிலையமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் அப்போது திட்டமிடப்பட்ட சிலையின் உயரம் 25 அடி தான். எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தவுடன், அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலையைப் போல் இதனை வெளிநாட்டுத் தொழில் நுட்பக் கலைஞர்கள் ஒத்துழைப்புடன் உருவாக்க வேண்டுமென்று கருதியதால், சிலையின் உயரம் 121 அடியாக அதிகரிக்கப்பட்டது. 1989 - ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சி ஏற்பட்டவுடன் சிலையின் உயரம் 133 அடியாயிற்று. தற்போது, ஜெயலலிதா இந்தத் திட்டத்தை இரண்டாண்டிற்குள் முடிக்கும்படியும், நிறைவேற்றுவதற்கான முழு ஒத்துழைப்பைத் தருவதாகவும் சொல்லியிருக்கிறார்.

சுதந்திர தேவி சிலை போலவே வள்ளுவர் சிலையும் பாதத்திலிருந்து தலை வரை உட்பகுதி வெற்றிடமாகத் தான் இருக்குமென்றும், 1330 ஆண்டுகள் ஆனாலும் சேதமடையாத வகையில் அமைத்துத் தருவேன் என்றும் கணபதி ஸ்தபதி உத்திரவாதம் அளிக்க முன்வந்திருக்கிறார்.

தகவல், படம் : டைம்ஸ் ஆஃப் இந்தியா

- அ. குமார்.

6 லட்சம் காரணங்கள் இன்றே சேர!



ஸ்ரீராம் விஜயதசமி விழா!

10

நாட்களிலும் பரிசுகள்!

அக்டோபர் 15-24, 1993.

காலங்கள் மாறலாம். பண்பாடுகள் மாறுவதில்லை.

காலங்கள் மாறலாம். ஆனால் ஒரு சில பண்பாடுகள் தலைமுறை தலைமுறையாக மாறுவதில்லை.

உதாரணமாக, ஸ்ரீராம் சிட்ஸில் சேமிப்பது.

ஸ்ரீராம் சிட்ஸ் — 6 லட்சத்துக்கும் கூடுதலான சந்தாதாரர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பாதுகாப்பைத் தேடித்தந்து உதவி வரும் ஒரு மகத்தான மக்கள் இயக்கம். நீங்களும் உங்கள் வாழ்க்கையில் ஒரு புதுமலர்ச்சியைப் பெற வேண்டாமா? ஸ்ரீராம் இயக்கத்தில் இன்றே உறுப்பினர் ஆகுங்கள்.

அது மட்டுமல்ல, ஒவ்வொரு புதிய சந்தாதாரருக்கும் ஓர் அழகிய பரிசும் உண்டு — எப்போதும் போல.

ரூ.75,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத்துறை அல்லது தனியார்துறை அல்லது அரசுப் பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மூன்று பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது.

வேலையில் இருக்கும் பெண்மணி ரூ.15,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுக்கும்போது அவரின் கணவருடைய உத்தரவாதமே போதுமானது.

அறிமுகப்படுத்துவோருக்கு ஸ்ரீராம் அளிப்பது ஆவலைத்தூண்டும் மந்திர எண் — அதில் மறைந்திருக்கும் பரிசு!

நீங்கள் ஒரு புதிய சந்தாதாரரை அறிமுகப்படுத்தினால் போதும். உங்களுக்காக எத்தனையோ பரிசுகள் காத்திருக்கின்றன.

ஒரு புதிய சந்தாதாரரை எந்தவொரு ஸ்ரீராம் கிளையிலும் அறிமுகப்படுத்துங்கள். ஸ்ரீராம் மேலாளர் முன்னிலையில் உங்கள் கூப்பனில் உள்ள வெள்ளிப் பூச்சைத் தேயுங்கள். உங்கள் எண் தெரிய வரும். அந்த எண்ணைக் கிளை மேலாளர் பரிசுப் பட்டியலுடன் ஒப்பிடுவார். அடுத்த சில நொடிகளில் உங்கள் பரிசை நீங்கள் பெற்றுச் செல்லலாம்.

அறிமுகப்படுத்துவோர் பரிசு
இப்போதுள்ள சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

குலுங்கும் வளையோசை!

பெண்மணிகளே! விஜயதசமி விழாவில் பங்குபெறுங்கள். ஒரு புதிய சந்தாதாரரை அறிமுகப்படுத்தி அல்லது ஒரு புதிய சீட்டில் சேர்ந்து வண்ண வண்ண வளையல்களைப் பெற்றுச் செல்லுங்கள்.

சந்தாதாரர் பரிசுகள்

சீட்டின் மதிப்பு* ரூ	சந்தாதாரர் பரிசு
1. 250 x 40 = 10,000	4 கிராம் வெள்ளிக் காசு
2. 500 x 30 = 15,000	ஸ்கல் கடாய்
3. 625 x 40 = 25,000	எச்.எம். குக் அண்ட் செர்வ் டிஷ்
4. 500 x 60 = 30,000	பட்டர்ஃப்ளை ஃப்ரை பான் (சி.பி.)
5. 1,000 x 50 = 50,000	காளி ஷாலோ பான் (சி.பி.)
6. 1,250 x 60 = 75,000	காளி ப்ரூ பாட் (சி.பி.)
7. 1,500 x 60 = 90,000	மூடியுடன் கூடிய
8. 2,500 x 40 = 1,00,000	காளி டட்ச் ஓவன் (சி.பி.)
9. 4,000 x 50 = 2,00,000	பட்டர்ஃப்ளை லைட் ஜுவல்ஸ் காஸரோல்
10. 5,000 x 60 = 3,00,000	2 கிராம் தங்கக் காசு
11. 10,000 x 50 = 5,00,000	4 கிராம் தங்கக் காசு
12. 20,000 x 50 = 10,00,000	8 கிராம் தங்கக் காசு

* நுழைவுக் கட்டணம் தனி



அறிமுகப்படுத்துவோர் பரிசு

செல்லோ பிரியா ஜார் முதல் ஃப்ரிட்ஜ் வரை



* அரசு அங்கீகாரம் பெறப்பட்டது.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS


ALL INDIA DEPOSIT MOBILISATION DRIVE IS ON

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.

நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்",
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8274451/8275536/8270400/8273932.

ஸ்ரீராம் சிட்ஸ் - மேலும் பலருக்கும் பலவகையிலும் பலன்.

ADWAVE/SCI/4514 TAM A



* நோயாளியை மையத்தில் படுக்க வைக்க வேண்டும்...

சிறுநீரகத்தில் கல்லா?

40 நிமிடத்தில் நிவாரணம்!

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் வாயில் கல் கடிபடும்போது, 'விழுங்காதே, துப்பிவிடு' என்பார்கள் வீட்டில் உள்ளவர்கள். 'அந்தக் கல்லு போய், சிறுநீர்ப் பையில் அடைச்சுக்கும்' என்பார்கள்.

சிறுநீரகத்தில் சேருகிற கல் இந்தக் கல் அல்ல.

சிறுநீரகத்தில் சேரும் ஒரு வகை உப்பு, சிறுநீர் வழியாகச் சாதாரணமாக வெளியேறி விடும். அப்படிப் போகாமல் பிடிவாதமாகத் தங்கிவிடும் உப்புத்தான் நாளடைவில் கல்லாக உருவாகிறது. சிறுநீரகத்தில் குடியிருந்துவிடுகிறது.

அப்புறம் என்ன?

விலாவின் இரு புறத்திலும் வலி தெரிய ஆரம்பிக்கும். பிறகு மெள்ளக் கீழ்ப்புறமாக வலி இறங்கும். ஓர் அசௌகரியமான உப்புசமாக இருக்கும். சிலருக்குச் சிறுநீருடன் சேர்ந்து ரத்தமும் வெளியேறும். இதுவே இன்ஃபெக்ஷன் ஆகிவிட்டால் கேட்கவே வேண்டாம். காய்ச்சல், பிறகு சிறுநீரகப் பணி பாதிக்கப்பட்டு, அது வேலை செய்யாமல் போக, பிரச்னை ஆரம்பமாகும். இதுதான் கொஞ்சம் சீரியஸ்.

எழுத்தில் படிக்கவே பயமாக இருக்கிறது. உண்மையில் அனுபவிக்க முடியுமா?

அந்தக் கல்லை உடைக்கவும் வேண்டும். ஆனால் ஆபரேஷனும் செய்து கொள்ளக் கூடாது. கல் போக வேண்டும். ஆனால் காசும் அதிகம் செலவாகக்கூடாது.

எப்படி முடியும்?

"**மு**டியும்!" என்கிறார் சிறுநீர் நோய்ச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சின்னசாமி. (இந்தத் துறையில் இவர் பெரிய சாமி!)

"பத்து வருடம் முன்னால் என்றால் அறுவை சிகிச்சை மூலம் சிறியதோ, பெரியதோ கல்லை எடுத்து விடுவார்கள். ஏழெட்டு வருடம் முன்பு கூட, சின்ன ஊசியை விலா வழியாகச் சிறுநீரகத்தில் செலுத்துவார்கள். அந்த ஊசி வழியாகச் சின்னச் சின்னக் குழாயை விட்டு, அந்தப்

பாதையை விரிவுபடுத்துவார்கள். எண்டோஸ்கோப் மூலமாக அந்த விஷமக்காரக் கற்களைப் பார்த்து, சிறியதாக இருந்தால் ஃபோர்செப்ஸ் போட்டு எடுத்து விடுவார்கள். பெரியதாக இருந்தால் உடைத்து விடுவார்கள். ட்யூபை இரண்டு நாள் கழித்து எடுத்துவிடுவார்கள். இன்றைக்கு இந்த அவஸ்தை எல்லாம் கூடப் பட வேண்டாம். இதோ பாருங்கள். மெடிஸ்டோன் - 300. இதற்குப் பெயர் லிதோட்ரிப்டர்.

''நோயாளியை மையத்தில் படுக்க வைக்க வேண்டும். 'பாயிண்ட்டர்' ஒன்றைச் செருகிய உடன், எதிரே கம்ப்யூட்டர் ஸ்க்ரீன் மாதிரி தெரிகிறதல்லவா? அதில் அவர் சரியானபடி படுத்திருக்கிறாரா என்பது தெரியும். வலப்புறம் ஒரு ரப்பர் பந்து இருக்கிறது. அதற்குள் நீரைச் செலுத்தி உப்ப வைத்துவிட வேண்டும்; அது விலாவைத் தொட்டபடி இருக்கும். இதற்கு உள்ளே ஸ்பார்க் பிளக் இருக்கிறது. இயந்திரம் இயக்கப்பட்ட உடன், ரப்பர் பந்துக்குள் இருந்து டப் டப் என்று விட்டு விட்டு, (கேப்



★ டாக்டர் சின்னசாமி

வெடிப்பது மாதிரி) சப்தம் வருகிறது, ஸ்பார்க் பிளக்கின் வெளிச்சத்துடன். அந்தச் சப்தம் உண்டாக்கும் அதிர்வு போதும், உள்ளே பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கும் கல் பட்பட்டென்று உடைந்து போக! சுமார் 40 நிமிடங்களுக்குப் பிறகு, நோயாளி எழுந்து சீட்டையை மாட்டிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்விடலாம் (பீஸ் கொடுத்துவிட்டுத்தான்)!''

மயக்க மருந்து, ஆபரேஷன் என்ற தொல்லைகளே இல்லை. இயந்திரத்தின் நன்மையைச் சொன்ன டாக்டர் சின்னசாமி, பாதகம் என்று குறிப்பிட்ட அம்சமும் உண்டு.

''இந்தக் கல் தூள் எல்லாம் சிறுநீரோடு கலந்துதான் வெளிவர வேண்டும். இரண்டு மாதம் வரை, கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கும். அப்போது சில வேளைகளில் வலி இருக்கும். ஆனால் மாத்திரைகளைச் சாப்பிட்டால் வலியைக் குறைத்து விடலாம்.''

முன்பு ஏறத்தாழ இதே போன்ற லிதோட்ரிப்ஸி, முறையில் முப்பதாயிரம் ரூபாய் வரையில் செலவு ஆனது. ஆனால் இந்தப் புதிய லிதோட்ரிப்டர் முறையில் மொத்தச் செலவு எட்டு அல்லது ஒன்பதாயிரத்துக்குள் முடிந்து விடுகிறது என்பது மிகப் பெரிய ப்ளஸ் பாயிண்ட்.



★ ரப்பர் பந்து விலாவைத் தொட்டபடி இருக்க...

சில வருஷங்கள் முன்பு அமெரிக்கா போயிருந்த போது, இதை ஒரு மருத்துவமனையில் பார்த்தார் டாக்டர் சின்னசாமி. நம் நாட்டில் இதைக் கொண்டு வந்தால் எத்தனையோ பேருக்கு உதவியாக இருக்குமே என்று யோசித்தார். போரூரில் உள்ள பிரபல மருத்துவமனைக்குச் சிபாரிசு கூடச் செய்தார். அதற்குப் பலன் கிடைக்கவில்லை. பார்த்தார் டாக்டர். தமது துறையிலேயே உள்ள இன்னும் சில மருத்துவ நண்பர்களோடு சேர்ந்து கொண்டு, தாமே இயந்திரத்தை இறக்குமதி செய்து விட்டார்.

இஸ்ரேலிய - அமெரிக்கக் கூட்டு ஆராய்ச்சியின் பயன்தான் மெடிஸ்டோன் - 300.

– சாருகேசி

புகைப்படங்கள் : கோபிநாத்

41. தனஞ்செயன் தூது

கிருஷ்ண பட்சத்து நிலவு இன்னும் வானில் வரத் தயங்கிக் கொண்டிருந்ததால், வானில் கொட்டமடித்துக் கொண்டிருந்த விண்மீன்கள், ஜெயந்தன் கூறிய செய்தியைக் கேட்டதாலோ என்னவோ, மேன் மாடத்திலிருந்த மூவரையும் விழித்து விழித்துப் பார்த்தன. தூண்களில் சுற்றிக் கிடந்த கொடிகளிலிருந்த மலர்களும் அகன்ற விழிகள் போன்று மூவரையும் உற்று நோக்கின.

பாண்டிய அமைச்சரை சமுத்திரபந்தன் சிறை செய்ததாகத் தெரிவித்த ஜெயந்தனை, இரு இளவரசிகளும் திகைத்துப் பார்த்தபடி சிலைகளாக நின்றிருந்தனர்.

சற்றுக் கழித்து திகைப்பிலிருந்து மீண்ட அம்மங்கை, ''அமைச்சரை ஏன் சிறையில் தள்ள வேண்டும்?'' என்று வினவினாள்.

ஜெயந்தன் முகத்தில் இன்னும் விஷமம் சொட்டியது. நிதானமாக விளக்க ஆரம்பித்தான் அவன். ''இளவரசி, சமுத்திரபந்தனைத் தங்களைச் சேர்ந்தவன் என்று கருதி, அவனது போலியான ஓலையை நம்பிச் சேரலாதர் அனுப்பிய படை, மலைக்கணவாயில் தாக்கி அழிக்கப்பட்டது. கொற்கையில் இதே மனிதரால் குழப்பம் ஏற்பட்டு, சமநாட்டு இளவலுக்கும் மாறவர்மருக்கும் உட்பகை தோன்றி விட்டது. மாறவர்மனது மெய்க்காவலனை யாரோ கொன்று விட்டார்களாம். பாவம், அந்தப் பழியும் சமுத்திரபந்தன் மீது விழுந்திருக்கிறது. எனவே சமுத்திரபந்தனைப் பற்றி விசாரித்து, மாறவர்மன் அமைச்சருக்கு ரகசிய ஓலை அனுப்பியிருக்கிறான். உங்களுடன் வந்த ரதசாரதிதான் சமுத்திரபந்தன் என்பதை அறிந்த அமைச்சர், மாறவர்மனுக்கு அந்தரங்க மறு ஓலை அனுப்ப முயன்றார். ஆனால் அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்த சமுத்திரபந்தன், அவரைச் சிறையில் தள்ளி விட்டார்.''

ஜெயந்தனது நீண்ட விளக்கத்தில் ஒன்று மட்டும் அம்மங்கைக்குத் தெளிவாகப் புரிந்தது. சமுத்திரபந்தன் என்ற புனைபெயருடன் சென்ற அரையன் மதுராந்தகனால் பாண்டியரது பலம் வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பதுதான். ரதசாரதியைப் பற்றிய விசாரணையைத் தொடர்ந்தவள் மெல்ல வினவினாள் : ''ஜெயந்தா...''

''என்ன இளவரசி?''

''இந்த உண்மையான சமுத்திரபந்தன் இப்போது எங்கே? அவர் எந்த அதிகாரத்தில் அமைச்சரைச் சிறை செய்தார்?''

''சோழ மன்னரின் பேரால் சிறைசெய்ததாக அறிந்தேன், இளவரசி!''

விஷ்வக்சேனன்

''சரி. அவர் இப்போது எங்கே?''

''எதற்கு இளவரசி?''

''அவரிடம் என் தந்தையின் இருப்பிடம் பற்றி விசாரிக்க வேண்டும்'' - அம்மங்கை வார்த்தையை முடிக்குமுன் ஜெயந்தன் இடிஇடியென்று பலமாக நகைத்தான். என்றைக்கும் தன் முன் வாய்விட்டு நகைக்காத ஜெயந்தன், அப்படி பெரிதாக நகைத்ததைக் கண்ட அம்மங்கையின் முகம் சிவந்தது.

''எதற்காக நகைக்கிறாய் ஜெயந்தா?'' - அம்மங்கையின் குரலிலும் உஷ்ணம் பூரணமாகத் தொனித்தது.

அவள் கடுமையையோ, கோபத்தையோ லட்சியம் செய்யாது, கண்களில் நீர் ததும்பச் சிரித்த ஜெயந்தன், கீழ்த்தளத்தில் எழுந்த ஒலிகளைக் கவனித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''அவரிடம் உங்கள் தந்தையைப் பற்றி விசாரிக்க முடியாது இளவரசி'' என்றும் நகைப்பினூடே பதிலளித்தான்.

''ஏன் விசாரிக்க முடியாது, ஜெயந்தா?''

ஜெயந்தன் சற்று நிதானித்து விட்டுக் கூறினான் : ''அவரிடம் அவரைப் பற்றியே விசாரிப்பது சிரமம் இளவரசி!''

ஜெயந்தனது வார்த்தைகளின் உட்பொருள் புரிய இரு வினாடிகள் ஆயின இரு இளவரசிகளுக்கும்.

விழிகள் வியப்பில் மலர, திறந்த வாய் திறந்தபடியிருக்க தாங்கள் கேட்ட சொற்களை நம்ப இயலாமல் திகைத்து நின்றனர் இருவரும்.

''அப்படியானால் எங்களுக்குச் சாரதியாக வந்தது...?'' அம்மங்கையின் குரல் குழறி ஒலித்தது.

''உங்கள் தந்தை, விருதராச பயங்கரர், உலகுய்யவந்தார், இராஜகேசரி, சமுத்திர பந்தர், மாமன்னர் குலோத்துங்க சோழ தேவர்...'' ஜெயந்தன் கட்டியக்காரனைப் போல் கூறிமுடிக்கவும், மேன்மாடவாயிலில் காலடியோசை கேட்டது.

தலை திருப்பிய இளவரசிகள் இருவரும் பிரமிக்க, ஜெயந்தன் தலைதாழ்த்தி வணங்க, அரசனுக்குரிய உடையில், இடையில் தரித்த அதே நீண்ட வாளுடன் புன்னகையுடன் வந்து நின்றான் சோழ குலோத்துங்கன்.

விக்கிரமன் தன்னை விடப் பெரும் காவலொன்று உடன்வருவதாகக் கூறிய வார்த்தைகளுக்கும், வழியெங்கும் படைத்தலைவர்கள் காட்டிய அபரிமிதமான மரியாதைக்கும் விளக்கம், இரு இளவரசிகளுக்கும் இப்போது கிடைத்து விட்டது.

முதலில் சுயநினைவு வரப் பெற்ற கார்குழலி, ஓடிச் சென்று மன்னனை வணங்க முற்பட்டாள். வலிய இரு கரங்கள் அவளை



பாண்டியன் மகள்

எழுப்பி நிறுத்தின. ''என் இருப்பிடத்தை அறிய சோழ இளவரசி மிகுந்த பிரயத்தனப்பட்டதாகத் தெரிகிறது'' - அம்மங்கையைப் பார்த்துக் கூறியபடியே உள்ளே நுழைந்தான் குலோத்துங்கன்.

ஓடிச் சென்று அவன் பரந்த மார்பில் தஞ்சம் புகுந்து முகத்தைப் புதைத்துக் கொண்ட அம்மங்கையிடமிருந்து விம்மல் ஒன்று வெடித்துக் கிளம்பியது. ''அப்பா'' என்ற ஒற்றைச் சொல்லுக்கு மேல் ஏதும் சொற்கள் வெளிவர மறுத்தன.

மெல்ல சகஜநிலைக்கு மீண்ட இருவரையும் நடத்திச் சென்று பஞ்சணையில் அமர்த்திய மன்னன், எதிரே இருக்கையிலமர்ந்தான். அருகில் வந்து கைகளைக் கட்டியபடி நின்ற ஜெயந்தன் முகத்தில் முதன்முறையாகப் பணிவு தெரிந்தது.

மன்னனது கூரிய விழிகள் அம்மங்கையின் உள்ளத்தை ஊடுருவின. ''இளவரசி

அறிய முயன்றது உண்மையில் என் இருப்பிடத்தையா அல்லது மதுராந்தகனின் இருப்பிடத்தையா?'' - விசாரித்தான் மன்னன்.

நாட்டில் இல்லாத போதும் சகலவற்றையும் மன்னன் அறிந்திருக்கிறான் என்பதை அவன் கேள்வி உணர்த்தியதால் இரு இளவரசிகளும் முகம் சிவக்கத் தலைகுனிந்திருந்தனர்.

''மதுராந்தகனைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம் அம்மங்கை. அவனுக்கிணையான வாள் வீரன், விக்கிரமன் ஒருவன்தான் என்று உன் தமையன் ராஜராஜனே என்னிடம் கூறியிருக்கிறான்'' - என்றான் மன்னன்.

அம்மங்கையின் முகம் வியப்பும் வெட்கமும் கலந்து ஜொலித்தது. ''என்ன? அண்ணன் ராஜராஜனை இவர் சந்தித்தாரா?'' - அவள் கேள்வியில் தமையனின் நினைவு அமுதத்தைப் பூசியிருந்தது.

''ஆம் அம்மங்கை. சாளுக்கிய ஜெயதுங்கனிடம் சிக்கிய ராஜராஜனை மீட்டவன் மதுராந்தகன்தான்'' என்ற மன்னன், சுருக்கமாக அரையன் சாளுக்கிய எல்லைக்கு வந்தது முதல் நடந்தவற்றை விவரித்தான். பின்னர், ''மகளே, அடுத்த போர் நெருங்கி விட்டது. நாளை நான் சேர நாடு நோக்கிப் பயணப்பட வேண்டும். நான் திரும்பும் வரை ஜெயந்தன் உங்களுக்குத் துணையாக இருப்பான்'' என்று முடித்தான்.

மறுநாள் பொழுது மிக இனிமையாக விடிந்தது, சோழ இளவரசிக்கு. காலைத் தென்றலும் பரிதியும் அவள் மலர்ச்சியையும், மந்தகாசத்தையும் கண்டு வியந்தன. அவள் உற்சாகக் குரலைக் கேட்டு கூண்டுக் கிள்ளைகள் மயங்கின. கார்குழலியின் பரிகாசப் பேச்சு அவளை வெட்கத்தில் ஆழ்த்தியது. நாணிச் சிவந்த அவள் முகத்தைக் கண்டு நந்தவனத் தாமரை பொறாமையுற்றது.

விடிந்த ஆறாவது நாழிகையில் ஜெயந்தனுடன் உள்ளே நுழைந்த மன்னன், எச்சரிக்கையுடனிருக்குமாறு கூறி விடைபெற்றான். ஐம்பதே வீரர்களுடன் கிளம்பிய அவனது படை பொதிகையை அடையும் போது, மிகப் பெரிதாக வளர்ந்திருந்தது.

விடிவதற்கு ஒரு ஜாமம் முன்னதாகவே எழுந்து விட்ட வெள்ளி, கோட்டாற்றங்கரையில் பயிற்சிகளை அத்தனை அதிகாலையில் முடித்து, வியர்க்க விறுவிறுக்க நின்ற மோகூர்பழையனைக் கண்டு அஞ்சியதாலோ என்னவோ, கண்களைச் சிமிட்ட மறந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது. போர்ப் புரவிகளைப் பழக்குவதில் தமிழகத்தில் இணையற்ற வாசி வாரியன் என்று பெயர் பெற்றிருந்த கொங்குப் பாண்டியரின் படைத்தலைவன் நடுத்தர வயதைக் கடந்திருந்தாலும் வைரம் பாய்ந்த உடலும் உரமான கரங்களும் அவற்றில் தெரிந்த வாள் வடுக்களும் அவனது இடைவிடாத பயிற்சியையும் சதா அவன் போரைப் பற்றிய சிந்தனையிலிருப்பதையும் காட்டின.

பயிற்சிகளை முடித்துக் கொண்டு காலார நடக்கத் தொடங்கியவன், தூரத்தில் தெரிந்த மணல் மேட்டை நோக்கி மூச்சை நன்றாக இழுத்தபடி நெருங்கினான். அந்த மணல் மேட்டை அடைந்து, அதன் உச்சியில் நின்ற பழையன், தான் ஏதும் கனவு காண்கிறோமா அல்லது எதிரே தெரிவது ஏதேனும் மனப்பிரமையா என்று புரியாமல் சற்று விழித்தான்.

முன்தினம் வெறும் மணல்வெளியாகப் பரந்திருந்த அந்த இடத்தில் அரைவிருளில் கூடாரங்கள் பல தெரிந்தன. அதன் முகப்பில் பறந்தது பெரும் புலிக்கொடியென்பதை அறிந்து கொள்ள அதிக நேரம் ஆகவில்லை அவனுக்கு. தூரத்தில் தெரிந்த தோப்பையும் ஊடுருவி அந்தப் படை சென்றிருப்பது தெரிந்தது. குறைந்தது ஐயாயிரம் வீரர்களாவது இருக்க வேண்டும் என்று கணித்தவன், அதற்கு மேல் சரிவர ஒன்றும் தெரியாததால் விறுவிறுவென்று திரும்பித் தனது இருப்பிடத்தை நோக்கி விரைந்தான். கூடாரத்தை அடைந்ததும் மாறவர்மனுக்கும் மார்த்தாண்டனுக்கும் செய்தி தெரிவிக்க வீரர்களை அனுப்பினான் பழையன்.

அடுத்த அரைநாழிகையில் அவசரமாகப் பழையனின் கூடாரத்தை இருவரும் நெருங்கிய போது, உள்ளே வரிசையாக நிற்க வைத்திருந்த பாண்டிய ஒற்றர்களை விசாரித்துக் கொண்டிருந்தான் மோகூர்ப் பழையன்.

அருள்வாக்கு

சித்தம் ஓடிக் கொண்டே இருப்பதால் தான் இன்ப துன்ப அநுபவங்கள் ஏற்படுகின்றன. சித்தம் சஞ்சலிக்காமல் நிறுத்தி விட்டால் இவை இல்லை. ஒரே முனையை விட்டு அகலாமல் - ஏகாக்ரம் என்று சொல்வார்கள் - இருக்கச் சித்தத்தைப் பழக்குவதே சித்தசுத்தி. யோக வித்தைக்கு இதுவே உபாயம். பொதுவாக நாம் 'யோகிகள்' என்று சொல்கிறவர்களைப் போல் எல்லோரும் ஆரம்பத்திலேயே சுவாசபந்தம் செய்து கொண்டு உட்காருவதற்கில்லை. ஏதாவது ஒரு நல்ல விஷயத்திலே நாம் பூரணமாக ஈடுபடப் பழகினால் அப்போது சித்தம் கூடிய மட்டும் அமுக்குப்படாமல் இருக்கும். சித்தத்தை நேராக அடக்க முயன்றால் அது திமிறிக் கொண்டு நாலா திசையும் பாயத்தான் செய்யும். எனவே சித்தத்தில் கவனம் வைக்காமல் ஏதாவது ஒரு நல்ல காரியத்தில் ஈடுபட்டு விட்டால் அப்போது சித்தத்துக்குச் சஞ்சலிக்க இடம் குறைந்து போகும்.



பழைய நாளில் அரிகண்டம் என்று போட்டுக் கொள்ளுவார்கள். படுக்காமலே நியமமாக இருக்க வேண்டும் என்பதற்காகக் கழுத்திலே பெரிய கம்பி வளையம் போட்டுக் கொள்வார்கள். அதற்கு அரிகண்டம் என்று பெயர். ஒருத்தர் இதைப் போட்டுக் கொண்ட பின் இஷ்டப்பட்டால் கூடப் படுக்க முடியாது. அந்த மாதிரி, நம் சித்தத்தை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போகாதபடி செய்வதற்கு அரிகண்டம் மாதிரி, சத்காரியங்களில் பூரணமாகத் தலையைக் கொடுக்க வேண்டும்.

அநேக நியமங்களோடு பெரிய யக்ஞம் செய்வது, விரதம் இருப்பது, பிரம்மாண்டமான கோயில் கோபுரங்களைப் பார்த்துப் பார்த்துக் கட்டுவது, குளம் வெட்டுவது என்றிப்படியெல்லாம் முன்னே பல காரியங்களைச் செய்து வந்தார்களே, இவையெல்லாம் அந்தந்த இலட்சியத்தோடு நின்று விடவில்லை. இவற்றின் முக்கியமான இலட்சியம் சித்தத்தை ஒருமுகப்படுத்திச் சுத்தமாக்கப் பழக்குவதேயாகும். இந்த சத்காரியங்களின் நடுவிலும் அநேக கஷ்டம், அநேக அவமானம் எல்லாம் வரத்தான் செய்யும். ஆனாலும் காரியத்தை முடித்தாக வேண்டும் என்பதால் அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு மேலே மேலே எடுத்துக் கொண்ட வேலையில் போய்க் கொண்டேயிருப்பார்கள். இதுவே சித்த சுத்திக்கு நல்ல உபாயமாகும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

இரவோடிரவாக எதிர்க்கரையில் வந்து பாசறை அமைத்து விட்ட சோழர் படையைப் பற்றிக் கேட்டறிந்த பின், சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்து விட்ட மார்த்தாண்டன், மீண்டும் பேசத் தொடங்கிய போது அவன் குரல் திட்டவட்டமாக ஒலித்தது :

''பழையரே, இனி சோழப் படைகள் எப்படி வந்தன என்று ஆராய்வதில் பயனில்லை. உமது புரவிப் படையை முன்னணியில் நிற்க வைத்து விடுங்கள். ஈழத்துப் படையும் மற்ற பிரிவுகளும் ஏற்கெனவே திட்டமிட்டபடி அணிவகுக்கட்டும். இன்னும் ஒரு நாழிகைக்குள் எல்லா உபதலைவர்களையும் என் கூடாரத்திற்கு வரச் சொல்லுங்கள்'' என்றவன் திரும்பி வெளியே நடந்தான். அனைத்துப் பிரிவுகளுக்கும் ஆணைகள் பறந்தன.

கதிரவன் வானில் கிளம்புவதற்கும் அனைத்து உபதலைவர்களும் மாறவர்மன் கூடாரத்தில் வந்து சேர்வதற்கும் சரியாயிருந்தது.

படைகளை நிறுத்துமிடங்களையும் தாக்கும் முறைகளையும் ஒவ்வொரு கட்டமாக உபதலைவர்களுக்கு விவரித்த மார்த்தாண்டன், மாறவர்மனைப் பழையனின் புரவிப் படைக்கு அடுத்தாற்போல் நிற்கப் பணித்தான். தனது பிரிவை இடது கோடியிலும் ஈழத்துப் பிரிவை மாறவர்மனுக்குப் பக்கவாட்டிலும் நிற்கச் செய்வதெனத் தீர்மானித்துப் போர் முறையை அவன் விளக்கிக் கொண்டிருக்கும் போதே, வாயிலில் நின்ற வீரனொருவன் வந்து வணங்கினான்.

''இளவரசே, சோழ தூதன் ஒருவன் வந்திருக்கிறான்.''

திடீரென அவையில் நிசப்தம் நிலவியது.

மார்த்தாண்டன் குரல் இரும்பாக ஒலித்தது. ''வரச் சொல்.''

சோழர் தூதனாகச் சற்று நேரத்தில் உள்ளே நுழைந்தவனை மார்த்தாண்டனும் பழையனும் ஏற்கெனவே அறிந்திருந்தனர். உறையூரின் கோட்டைத் தலைவனாக இருந்தவனும், ராஜேந்திரன் காலத்திலேயே ஈழத்துப் போர்களில் கலந்து பெரும் சாகசங்களைப் புரிந்தவனும், வேலெறிவதில் இணையற்றவனுமான தனஞ்செயன், தன் பெரும் மீசையைத் தடவியபடி ஏதோ அந்தப் பாசறையை விலைக்கு வாங்க வந்தவன் போல் அலட்சிய நடையுடன் உள்ளே நுழைந்தான்.

நிதானமாக அந்த அவையை ஒருமுறை கண்களால் அளந்த தனஞ்செயன், அலட்சியமாக ஒருமுறை வணங்கினான். அவன் வார்த்தைகள் தெளிவாக அந்த அவையில் ஒலித்தன.

''பாண்டிய இளவலுக்கு வணக்கம். நான் கூறப் போவது சோழர் குலதிலகம் இளவரசர் விக்கிரமச் சோழரின் வார்த்தைகள்'' என்றவன், சற்று நிதானித்தான்.

அவையில் ஊசி விழுந்தாலும் கேட்கக் கூடிய அமைதி நிலவியது.

''மாறவர்மா, சோழ இளவரசியை நீ கடத்திய போதும், மேலைமங்கலத்தில் எதிர்த்த போதும் உன்னை மன்னித்தேன். ஈழநாட்டவனுடன் சேர்ந்து இரண்டாவது முறையும் கள்ளழகர் ஆலயத்தில் சிறையெடுக்க முயன்றாய். அந்தக் குற்றத்துக்கே உன்னைக் கொல்லலாம். ஈழத்து உதவியும் சேரலாதன் உதவியும் இருப்பதாக மனப்

பால் குடிக்காதே. ஈழத்து உதவி உன்னை மன்னனாக்குவதற்கு வரவில்லை. அதன் ஆதிக்கத்தைத் தமிழகத்தில் பரப்பத்தான் வந்திருக்கிறது. சேரலாதனுக்கும் எச்சரிக்கை அனுப்பியிருக்கிறேன். உனக்கு உதவ வந்ததன் பலனை விரைவில் அவனும் அனுபவிப்பான். ஜடாவர்ம பாண்டியரைக் கொன்று, நாட்டைப் பங்கு போட்டுக் கொண்ட நீங்கள் உடனடியாக நாட்டைப் பாண்டியர் மகளிடம் ஒப்படைத்தால் உயிர் பிழைக்கலாம். உனக்குச் சிந்திக்க இன்னும் ஒருநாள் அவகாசம் தருகிறேன். மறுப்பதானால் நாளை உன் பதிலை வாள் முனையில் தெரிவிக்கலாம்'' என்றான் தனஞ்செயன்.

அவையில் மெலிதாக சலசலப்பு எழுந்தது. மார்த்தாண்டவர்மன் சிந்தனை நிரம்பிய விழிகளைத் தனஞ்செயன் மீது திருப்பினான்.

''தூதனே, பாண்டியர் மகள் என்று நீங்கள் கூறும் பெண்தான் உண்மையான வாரிசு என்பதற்கு என்ன அத்தாட்சி?''

தூதன் மெலிதாக நகைத்தான்.

''நீங்கள் நாட்டை ஒப்படைக்கத் தயாராயிருப்பதானால் அத்தாட்சிகளை உங்களுக்கும் பாண்டிய மக்கள் மன்றத்திலும் காட்டச் சித்தமாக இருக்கிறோம்'' என்றான் தனஞ்செயன்.

''உங்கள் அத்தாட்சிகளையோ, பாண்டியருக்கு மகளிருப்பதாகக் கூறுவதையோ நாங்கள் ஏற்பதாக இல்லை. நாளை உதயத்தில் எமது பதிலை வாள் முனையிலேயே கூறுகிறோம். முடிந்தால் சோழ நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளும்படி உங்கள் இளவரசரிடம் கூறு. நீ போகலாம்.''

மார்த்தாண்டன் அளித்த பதிலைப் பெற்றுக் கொண்ட தனஞ்செயன் ''நன்றி பாண்டியரே, நாளை களத்தில் சந்திப்போம்'' என்றபடி திரும்பி அதே நிதான நடையுடன் வெளியேறினான்.

கிடைத்த அவகாசத்தைப் படைகளை ஊக்குவிக்கவும் அணிவகுப்பை இன்னும் பலமாக்கவும் முழுதுமாகப் பயன்படுத்திக் கொண்டான் மார்த்தாண்டன்.

அதே நேரத்தில் பராக்கிரமபாகுவின் வீரன் ஒருவன் கொற்கையை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். அன்று மாலை மயங்கிய நேரத்தில் கொற்கையை அடைந்த வீரன், அங்கு குலசேகரன் இல்லாததைக் கண்டு திகைத்தான்.

குலசேகரன், ஈழத்து மரக்கலத்தில் குறுக்கிட யாருமற்ற தைரியத்தில் அஞ்சனாதேவியுடன் இருந்தான். ஆனால் குறுக்கீடு ஒன்றும் வந்து கொண்டிருந்தது! சில காத தூரத்தில் சோழ நாட்டுப் போர்க்கலங்கள் கொற்கையை நோக்கி நிதானமாக நகர்ந்து கொண்டிருந்தன.

(தொடரும்)

Surya Estate Finance

ACCEPTS FIXED DEPOSITS

(I) NARBHAVEE DEPOSITS SCHEME

24% Per Annum

* Amount of Deposit Rs. 1,000/- and above.
* Interest payable: Monthly/Quarterly/Half yearly/Yearly

(II) CHOLAN REINVESTMENT SCHEME

Amount	Gross Amount Repayable on Maturity				
	1 Year	2 Years	3 Years	4 Years	5 Years
1000	1240	1540	1910	2370	2940
2000	2480	3080	3820	4740	5880
3000	3720	4620	5730	7110	8820
5000	6200	7700	9550	11850	13700
10000	12400	15400	19100	23700	27400

YOUR INVESTMENT BECOMES DOUBLE IN JUST 38 MONTHS

(III) CHITTUKKURUVVI
RECURRING DEPOSIT SCHEME

Maturity value at the end of

Per Month	12 Months	24 Months	36 Months	48 Months
250	3400	7500	12330	17880
500	6800	15000	24660	35760
750	10200	22500	36990	53640
1000	13600	30000	49320	71520

* Pensioners will get 1% Extra Interest.
* Post dated cheques will be issued at the time of deposit for interest as well as Principal amount.

ATTRACTIVE GIFTS FOR DEPOSITS OF Rs. 5000/- AND ABOVE

SEF

For further details, contact:

Surya Estate Finance

No. 12, Venkatesan Street, T.Nagar,
Madras – 600 017. Phone: 446954

JOHN



போட்டிக்கதை - 9

கதை கேசட்

குரங்காற்றில் தண்ணீர் போகிறது. பாறை உள்ள இடங்களில் ஹோ.... என எழும்பி விழுந்து, மறுபடியும் எழும்பிச் செல்கிறது. பாறையற்ற இடங்களில் சலசல வென ஓடும் ஓடை போலும் பார்ப்பதற்கே அழகாக இருக்கிறது. பொன்சாமி, பொன் னையா, சுப்ரமணி இன்னும் நிறையப் பேர் நிற்கிறார்கள். ஆற்றின் அந்தக்கரையிலும் நின்று நிறையப் பேர் வேடிக்கை பார்க்கி றார்கள்.

''நான் சின்னப் புள்ளையா இருக்கும் போது ஆத்துல தண்ணீர் வந்திச்சு. அதுக்குப் பின்னாடி தண்ணி வந்து நான் பார்த்த தில்லை...'' யாரோ பெரியவர் சொன்னது கனவு போல் ஞாபகம் வந்தது.

ஆற்றின் கரையில் சிறுவர்கள் ஒருவர் மேல் ஒருவர் தண்ணீர் இறைத்து விளை யாடுகிறார்கள். யாரோ பெரியவர் அதில் ஒருவனைத் தூக்கி ஆற்றுக்குள் வீசுவது போல் பயங்காட்டி அனைவரையும் விரட்டுகிறார். அவர்கள் உடனே ஓடி விட்டு, பெரியவர் நகர்ந்ததும் மீண்டும் வந்து விளையாட, மீண்டும் பெரியவர் விரட்ட அங்கு அது தொடர்கதையாகிறது.

வேடிக்கை பார்த்தவர்கள் சலிப் படைந்து நகர, வேறு சிலர் வேடிக்கை பார்க்க வருகிறார்கள். ஆட்கள் மாறுகிறார் கள் எனினும் கூட்டம் குறையவில்லை. ஆற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற் கும் போதே....

''அழகா இருக்குல்ல!'' என்ற குரல் கேட்டுத் திரும்ப, சங்கீதா இளம் புன்னகை யுடன் நின்று கொண்டிருந்தாள்.

''டேய் எந்திரிடா'' யாருடைய குரலோ எங்கோ கிணற்றின் ஆழத்தில் இருந்து வரு வது போல் இருந்தது.

இக்குரல் கேட்டதும் குரங்காறும், அதில் ஹோ... என எழும்பும் தண்ணீரும், சங்கீதாவும் மறைந்து, கண்ணைக் கட்டி விட்டாற் போல் குத்து இருட்டாக இருந் தது.

''டேய் எந்திரிடா, மணி ஆறு ஆயிடுச் சில்ல...'' இது அம்மாவின் குரல். மணி ஆறு ஆயிடுச்சா. அப்படின்னா குரங்காறும், சங்கீதாவும் கனவா? காலையில் கனவு கண்டால் பலிக்கும் என்பார்களே...

கே. தளவாய் சுந்தரம்

''இந்தா பல் தேய்ச்சிட்டு வா''.... பிரஷ்ஷில் பேஸ்ட் வைத்துக் கையில் திணித்து விட்டு அம்மா சென்றுவிட்டாள். அம்மாவின் காலடிச் சப்தம் குறைந்து கொண்டே வந்து நின்றது. எவர்சில்வர் பாத்திரங்கள் ஒன்றோடு ஒன்று மோதும் சங்கீத சப்தம் கேட்டது. அம்மா அடுக்களையில் வேலையாய் இருக்கிறாள் போலும்.

வாசலில் இருந்து சைக்கிள் பெல்லின் ஓசையும் தொடர்ந்து பேப்பர் காற்றில் பறக்கும் சப்தமும் தரையில் உராய்ந்து ஓடும் ஒலியும் கேட்டது. பேப்பர்காரன் பேப்பர் போட்டு விட்டுப் போகிறான்.

''மணியே மணிக்குயிலே....'' தெருமுனை டீக்கடையிலிருந்து வந்த பாட்டு காற்றில் பரவிக் காதுக்குள் நுழைந்தது. இது ரஜினி நடித்த படத்தில் உள்ள பாட்டு இல்லை. குமார் இன்னும் கடைக்கு வரலை போல் இருக்கு. ரஜினின்னா குமாருக்கு உசிரு. குமார் கடையில் இருந்தான்னா ரஜினி பாட்டுத்தான் போடுவான்.

கட்டிலை விட்டு எழுந்து, வீட்டின் முன்னால் இருந்த தொட்டியின் அருகில் இருந்த பக்கெட்டில் தண்ணீர் மொண்டு பக்கத்தில் இருந்த தென்னைமரத்தின் மூட்டில் அமர்ந்து பல் தேய்க்கத் தொடங்கினான்.

வீட்டிற்குள்ளும் இந்தத் தெருவிலும் நடமாட உதவி தேவையில்லை. இவைகளைத் தாண்டி வெளியே போக உதவி தேவைப்பட்டது. யாருமே உதவி செய்ய முன்வராததால் தெருவும் வீடுமாகத் தன்னைச் சுருக்கிக் கொண்டான்.

டேப்ரிக்கார்டரில் பாட்டு கேட்டது, தெருமுனை டீக்கடையில் அரசியல் பேசுபவர்களுடன் தன்னையும் இணைத்துக் கொள்ளுவது, சங்கீதாவுடன் இலக்கியம் பற்றி விவாதிப்பது, கட்டிலில் படுத்துக் கொண்டே மனசுக்குள் எதையாவது அசை போடுவது. இவைதான் இவனின் பொழுது போக்குகள். சங்கீதா இருந்தாளெனில் பத்திரிகைச் செய்தி படிப்பாள், கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவளுடைய குரல் வளம் அப்படி!

பொம்பளை படிச்சி என்ன பிரயோசனம் என்று பத்தாவதோடு அவள் படிப்பை நிறுத்தி விட்டார்கள். பாளையங்கோட்டையில் இருக்கும் அவள் மாமன் வீட்டிற்குப் போயிருக்கிறாள். இருபது நாள் இருந்து விட்டுத்தான் வருவேன் என்று சொல்லி விட்டுத்தான் போனாள். அனேகமாக இன்னும் இரண்டு நாட்களில் வரலாம்.

பல் தேய்த்து முடித்து விட்டு, அம்மா கொடுத்த காப்பியை வாங்கிக் குடித்து விட்டு வீட்டின் வாசலில் அமர்ந்தான். அப்பா பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். அவர் பக்கங்களை மாற்றும் போது பேப்பர்களின் உராய்வுச் சப்தம் துல்லியமாகவே கேட்டது. தெருவில் யாரோ இருவர் என்னவோ பேசிக் கொண்டே சென்றார்கள். உற்று கவனித்தும் என்ன பேசிக் கொள்கிறார்கள் எனக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர்களின் குரலை கணித்தால் தெருவில் உள்ளவர்கள் போல் தெரியவில்லை. குரலை வைத்தே இவர் இன்னாரென்று கண்டு பிடித்துவிடுவான். சிலர் குரலை மாற்றிப் பேசி, இவனைத் திணறடித்ததுண்டு. அவர்களின் கையைப்



[redacted]

(அறிமுக எழுத்தாளர்)

பற்றி கையின் மிருதுத்தன்மை, ரோமங்களின் அடர்த்தி ஆகியவற்றை வைத்தும் இன்னாரென்று கண்டு பிடித்து விட முடியும்.

தெருவில் உள்ள அனைவரையும் விட பக்கத்து வீட்டு சங்கீதாதான் நன்றாகப் பழகி னாள். ''ஐயோ கண் தெரியாதே!'' என்னும் இரக்கம் கூட காரணமாய் இருக்கலாம்.

அவள் படித்து அற்புதம் என்று தோன்றிய கதைகளை இவனுக்கும் படித்துக் காண்பிப்பாள். ஊருக்குச் செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் ''பச்சைக் கனவு'' என்று ஒரு கதை படித்தாள். லா.ச.ரா எழுதியது. இவனைப் போலவே இடையில் கண்தெரியாமல் போய்விட்டது கதாநாயக னுக்கு. அவன் கடைசியாய்க் கண்ட நிறம் பச்சை. எனவே எதனையும் பச்சையுடன் ஒப்பிடுவதில் அவனுக்குச் சந்தோஷம். அந்தக் கதை இவனுக்கும் பிடித்துப் போயிற்று.

யோசித்துப் பார்க்க, தான் கடைசி யாய்க் கண்ட நிறம் ஞாபகத்தில் வரவே இல்லை. பச்சையா? சிவப்பா? வெள் ளையா? கறுப்பா? கறுப்பு மட்டும் நினை வில் இருக்கிறது. எப்பொழுதும் எத்திசை யிலும் கறுப்பே காண்கிறான். எனவே, குத்து இருட்டாய் இருக்கும் கறுப்பு மட்டும் மறக்கவே இல்லை. மற்ற நிறங்கள் எப்படி இருக்கும் என்பதே மறந்து போயிற்று.

எல்லாருக்கும் தூங்கும் போதுதான் கண் இமை மூடி குத்து இருட்டாய் கறுப்பே மிஞ்சும். இவனுக்கு நேர் மாறாய் இருந்தது. தூங்கும் பொழுதுதான் கண்தெரிந்தது. யாரையாவது, எதனையாவது காண முடிந் தது. கனவு அதனைச் சாத்தியமாக்கிற்று.

''கனவுதான் காண முடிகிறதே, அப் போது நிறங்களையும் காணலாமே!'' என்று சங்கீதா கேள்வி எழுப்ப, இவனும் முயற்சி செய்திருக்கிறான்.

எனினும் அதுவும் தோல்வியே ஆனது. காலையில் எழுந்ததும் இரவில் வந்த கனவை ஞாபகத்தில் கொண்டு வந்து, என்ன நிறங்கள் கனவில் வந்தன என எண்ணிப் பார்க்க, கண்ணுக்குள் கறுப்பே தெரிந்தது. கனவு காணும் போது கலர்கள் தெரிந்தது போல் எண்ண ஓட்டங்கள் இருக் கும். கனவு முடிந்ததும் மறந்து போகும். கனவுக்கு நிறங்கள் உண்டா? இல்லை நமக் குத்தான் ஞாபக சக்தி குறைவா?

''தள்ளுடா'' பின்னால் இருந்து அப்பா குரல் கேட்க, நினைவு கலைந்து, தள்ளி உட்கார்ந்தான். அப்பா கடந்து போகும் போது பவுடர் வாசனையும் கடந்து போயிற்று. அப்பா ஸ்கூட்டர் ஸ்டார்ட் செய்து கிளம்பிப் போய்ச் சிறிது நேரம் வரை எரிந்த பெட்ரோல் வாசனை காற்றில் இருந்தது.

யாரோ நெருங்கிவரும் காலடி சப்தம் கேட்டது.

''என்ன சௌக்கியமா?'' நம்பவே முடியவில்லை; சங்கீதாவுக்குச் சொந்தமான குரல் அது.

''எப்ப வந்தே!''

''நேற்று நைட்டே வந்துட்டோம். வரும் போது உங்க வீட்டுல எல்லாரும் தூங்கியிருந்தீங்க.''

சிறிது நேர மௌனம் நிலவியது. பின்பு சங்கீதாவே தொடர்ந்தாள்.

''ஒரு சின்னப் பரிசு கொண்டாந்துருக் கேன், இந்தாங்க.''

பெற்றுக் கொண்டு தடவிப் பார்க்க, ஆடியோ கேசட் என்பது புரிந்தது.

''சினிமா பாட்டா. எங்க வீட்டுலதான் இருக்கே.''

அதுதான் இல்லை, ஜெயகாந்தன், தி. ஜானகிராமன், லா.ச.ரா. இவுங்க எழுதிய நல்ல கதைகளை நானே படிச்சு ரெக்கார்ட் பண்ணியிருக்கேன்.''

''நீங்க யாரோட உதவியும் இல்லாம இனிமே கதை படிக்கலாம். சாரி கதை கேட்கலாம்.''

''ரொம்பச் சிரமமா இருந்திருக்கும்.''

''மாமா வீட்டுல டைம் பாஸே ஆகலை. இப்படிச் செஞ்சா என்னன்னு ஒரு ஐடியா தோணுச்சு. பண்ணிட்டேன். கதைப் புத்தகம் போல இது கதை கேசட்.''

உடனே வீட்டுக்குள் நுழைந்து நேற்றுக் கேட்டுவிட்டுப் பாதியில் நிறுத்திய சினிமா பாட்டு கேசட்டை டேப் ரிக்கார்டில் இருந்து எடுத்து, சங்கீதா கொடுத்த கேசட்டை போட.

''பச்சைக்கனவு - லா.ச.ரா. முதுகு பச்சையாய்க் கன்றிப்போக, காயும் வெயில் முற்றத்தில் உட்கார்ந்து...''

மிகவும் பிடித்த கதையைச் சங்கீதாவின் சங்கீதக் குரல் அழகாய்ப் படித்துக் கொண்டே போக, மெய் மறந்து கேட்டுக் கொண்டேயிருந்தான்.



''நீங்க தப்பா ஆபரேஷன் செய்தீதால்தானே நோயாளி செத்துப் போனார்....?''

''சத்தியமா இல்லீங்க. அப்பவே அவர் செத் திருந்தா, போஸ்ட்மார்ட்டம் செய்யும் போது முனகி யிருக்க மாட்டாரு...!''

– கரடிகுளம் ஜெயாபாரதிப்பிரியா.

வட்டமேஜை

◆ செவ்வனே கடமையாற்றும் எண்ணம் பழுதுபட்டதற்கு, உச்சி முதல் உள்ளங்கால் வரை அரசியல் ஆதாரமாக மாறி விட்டதே காரணம் என்று தலையங்கம் சாடியிருப்பது, வாக்காளர்களுக்குத்தான் உறைக்க வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து பீறிட்ட சோகத்தை வார்த்தைகளால் வடித்து, சேவை மனப்பான்மையுடன் துயர் துடைக்க தமிழர்படை, மகாராஷ்டிரா செல்ல வேண்டும் என்று வேண்டியிருப்பது நடைபெறுமானால், இன்று பல காரணங்களினால் தாழ்ந்து கிடக்கும் தமிழகத்தின் பெயர், அகில இந்திய அளவில் பாராட்டும் புகழும் பெறும் என்பதில் ஐயமில்லை.

திருச்சி - 9, கண்ணம்மா இராமசாமி.

◆ 'வானம் தொட்டு விடும் தூரம் தான்' எனும் வைர வரிகளைக் கொண்ட கல்கியின் கவர் ஸ்டோரி கண்டேன், இதயம் கனத்துப் போனேன். போலி முகங்களுடன் மனித வேடமிட்டு உலாவிக் கொண்டிருப்பவர்களின் மத்தியில் உமாவைப் போன்ற சேவை மனப்பான்மையாளர்களின் செயல் திறன் நெஞ்சை அரவணைக்கிறது!

சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

◆ உமா, சாணக்யா, சேகர் தத்தாத்ரி ஆகியோரின் வரிசையில் இந்திய இளைய சமுதாயம் அணி திரண்டால் இந்தியாவின் முன்னேற்றமும் தொட்டுவிடும் தூரம்தான்!

மதுரை, வி. பரமசிவம்.

◆ 'கோபம் என்பது ஹீரோவா, வில்லனா?' கட்டுரை, சாலமன் பாப்பையாவின் பட்டிமன்றம் போல் சுவையானதாக, பயன்மிக்கதாக இருந்தது!

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

◆ டாக்டர் சந்திரசேகர் கூறிய கருத்துக்கள் அருமை! மனோதத்துவ ரீதியாக, வாசகர்களைப் புரிந்து கொண்டு செயல்படும் கல்கி, தரமான கட்டுரைகள் தருவதில் தம்பர் ஒன் என்பதை வாரா வாரம் நிரூபித்து வருகிறது.

தொழுகிரிப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

◆ 'இதுதாண்டா சாதனை' துணுக்கு படித்து மனம் நெகிழ்ந்தேன். எவ்வளவோ பெரிய சாதனைகள் புரிந்தும், மிக மிக உயர்வான இடத்தில் இருந்தும், தனக்காக உதவி செய்த அந்த 'அணில்' போன்றவர்களை மறக்காமல் தக்க நேரத்தில் காப்பாற்றி, வாழ வழி செய்த திரு. டி.ஆர். ராவின் பெருந்தன்மை வியக்க வைத்தது.

மருங்கூர், பாலா. கிருஷ்ணமூர்த்தி.

இந்தியாவின் முன்னேற்றம், தொட்டுவிடும் தூரம்தான்!

◆ கல்வித் துறையின் அதிரடித் திட்டம் மாநகர் பகுதிகளில் மட்டுமே செயலாக்கப்படலாம். கிராமப் பகுதிகளில் மாணவ மாணவியர் பள்ளிக்கு வந்து சேர்ந்திடவே காலை பதினோரு மணியாகி விடும். அடுத்து, பெரும்பான்மையான பள்ளிகளில் கரும்பலகை, இருக்கைகள் கட்டட வசதிகளோ கிடையாது. இந்த நிலையில் அதிரடித் திட்டம், கோப்புகள் வாயிலாக மட்டுமே செயல்படும். அன்ன நடையைக் கற்றுக்கப் போயி சொந்த நடை போன கதைதான்!

மாப்பிள்ளைக்குப்பம், கி. முருகன்.

◆ அரசின் புதிய கல்வித் திட்டத்தை ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மாணவ, மாணவிகள் வரவேற்றிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. கல்வித் துறையில் மாற்றம், புதிய நெறிமுறைகள் போன்றவை நம் கல்வித் திட்டத்தை உயர்த்துமானால், நம் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் கல்வித் துறையின் இம் முயற்சிகளை மலர்க்கரம் விரித்து வரவேற்பார்கள் என்பது உறுதி!

மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

◆ 'லாரி ஸ்ட்ரைக் எதற்காக' கட்டுரையில், 'காவிரிக் கோர்ட் தீர்ப்பு வழங்கியும் கொடுமை தொடர்கிறது' என்ற வாசகம் கவனத்திற்குரியது. நீதிமன்றம் அவமதிக்கப்படுவது தொடருமானால் சமுதாயம் சீரழியும், துப்பாக்கிக் கலாசாரம் தலை தூக்கும். இன்றைய ஆட்சியாளர்கள் தமது சொந்த நலன்களின் மேன்மைக்காக, ஜனநாயகத்தைக் கேலிக்குரியதாக்கிக் கொண்டே இருந்தால் நாடு கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பதை எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டும்.

கோவை - 25, இ. ரங்கசாமி.

◆ இரா. முருகனின் ''நேர்த்திக்கடன்'' இதயத்தை கனக்கச் செய்தது. கடவுளுக்கான நேர்த்திக்கடன் என்றால், இதுதான்! சாவன்னா ஒரு மறக்க முடியாத மனிதர்.

மேட்டுமகாதானபுரம், எம். சந்திரசேகர்.

◆ 'புரிதல்' சிறுகதையில், கதாசிரியர் என்ன கருத்து சொல்ல வருகிறார் என்பதைப் பலமுறை படித்தும் என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை!

பவித்திர மாணிக்கம், ஆர். பாஸ்கரன்.

◆ புடவைச் சண்டையில் தொடங்கி, பால்கோவா முத்தத்தில் முடிந்த அந்த அன்பான குடும்பத்தின் அற்புதமான ஊடலையும் கூடலையும் படிக்கும் போது இப்படி ஒரு மனைவி நமக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் எனக்குள் வந்தது உண்மை. புரிதல் கதை ஒரு அற்புதப் படைப்பு.

கும்பகோணம், கே. ராஜ்குமார்.

◆ அப்பா கடை சிறுகதை நெஞ்சை உருக்குவதாக இருந்தது. 'ஒருவன் சுயமாக முன்னேறுவதைப் பார்த்துப் பொறுக்காதவர்கள் நாலுவிதமாகப் பேசுவார்கள். இதற்கெல்லாம் துவண்டு போனால் பிழைக்க முடியுமா?' என்ற வரிகளை ஊக்கமும் நம்பிக்கையும் தருவதாக அமைந்துள்ளது.

கடையம், அன்பின் செபா.

மடிமீது தலை

13

ராஜா அண்ணாமலை மன்றம் அருகே வெளியூர் பஸ்-ஸ்டாண்டின் வாசலில் ஆட்டோவிலிருந்து கஸ்தூரிரங்கன் இறங்கிய போது கொஞ்சம் கூட எச்சரிக்கை எதுவுமின்றி மழை பெய்யத் தொடங்கியது.

கஸ்தூரிரங்கன் மழையில் மிக லேசாய் நனைந்து ஷெல்டர் தேடினான். ஒரு பஸ் ஸ்டாண்ட் நிழற்குடை யாருடைய உபயத்திலோ நின்றிருக்க, அதன் கீழ் இரண்டு பசுமாடுகள். பழக்கூடைகள். பூக் கூடை. எண்ணெய் காணா பரட்டைத் தலையுடன் பெண்கள். ஒரு மூலையில் இடம் இருந்தது. ஒண்டிக் கொண்டான். மணி பார்த்தான். பதினொன்று ஆகவில்லை.

பதினோரு மணிக்கு கஸ்தூரா வருவதாகச் சொல்லியிருந்தாள். ராஜா அண்ணாமலை மன்றம் வாசலில் சந்திப்பதாகப் பேச்சு. ஒரு வேளை அவனுக்கு முன்பே அவள் வந்து விட்டுப் போய்விட்டாளா? பாழாய்ப் போன மழை வேறு.

கஸ்தூரிரங்கனுக்கு லேசாய்ச் சிரிப்பு வந்தது. காதலிக்க ஆரம்பித்தாலே பித்துப் பிடித்து விடுமோ என்னவோ! இதற்கு முன் எத்தனையோ இளம் பெண்களால் சலனமடையாத மனம், இப்போது கஸ்தூராவிற்காக ஏங்கத் தொடங்கி விட்டதை நினைத்தால் ஆச்சரியமாக இருந்தது. நீதானா ரங்கா? நீயா இப்படி மாறிவிட்டாய்?

கேள்வி கேட்ட மனதை 'அ' என்று அலட்சியமாக ஒதுக்கினான். சுற்றிலும் பார்த்தான். ஷெல்டரின் கூரையில் இருந்து குப்பையுடன் மழை நீர் தகடாகச் சரிந்தது. நேர் எதிரே திருவள்ளுவர் பஸ் நிலையம். வாசலில் பல்லவன்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து நின்றன. கஸ்தூரி ரங்கனின் பார்வையில், பஸ்ஸிலிருந்து இறங்குபவர்களின் கால்கள் தெரிந்தன.

கஸ்தூரா என்ன புடைவை கட்டியிருப்பாள்? என்ன செருப்பு போட்டிருப்பாள்? வருவாளா? வரப்போவதில்லையா? மழையே நில்லேன்.

மழை நின்றது. அவன் சந்தோஷப்படுவதற்குள் வலுத்தது. எதிரில் பஸ் நிறுத்தத்திலிருந்து தள்ளி ஒரு பஸ் நின்றது. செங்கல்பட்டில் இருந்து வரும் பஸ். கஸ்தூரா பஸ்ஸில் தான் வரப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறாள். இந்த பஸ்ஸில்தான் அவள் வரப் போகிறாள்.

பஸ்ஸில் இருந்து இறங்கியவை எல்லாம் பாண்ட் கால்கள். ஒரு வேஷ்டிக்கால். புடைவையுடன் இறங்கிய கால்கள் நிச்சயம் கஸ்தூராவுடையவை அல்ல. அந்தக் கறுப்பும், நடுவிரல் தடிமனுக்கு வெள்ளித் தண்டையும் கஸ்தூராவுக்குச் சொந்தமானவை அல்ல.

கஸ்தூரிரங்கன் ஏமாற்றமாக வேறு பக்கம் திரும்பினான். உடன், குப்பென்று உடலில் சந்தோஷ அலைகள்.

கஸ்தூரா நின்றிருந்தாள். கஸ்தூரிரங்கன் கையைத் தூக்க நினைத்து, சுற்றியுள்ள மனிதர்கள் பார்வையைத் தவிர்க்க நினைத்து, பிளாட்ஃபாரத்திலிருந்து சாலைக்குத் தாவினான். உடல் முழுக்க மழை நீர். பரவாயில்லை. நனைந்தால்தான் என்ன? காதலுக்கும், காதலிக்கும் நனைந்தால் அப்படி ஒன்றும் உடலில் காளான் முளைக்காது.

கஸ்தூரா அவனைக் கவனித்துவிட்டாள். பளிச்சென்று சிரித்தாள். சாலையில் லட்சம், லட்சம் மழை அம்புகள் சாரம் உதைத்து இறங்கிக் கொண்டிருக்க, கஸ்தூரா அவனை நோக்கி நடந்து வந்தாள்.

கஸ்தூரிரங்கன் அவளை நெருங்கினான். அவளின் விரல்களைப் பற்றினான். உடல் முழுக்க ஒரு சிலிர்ப்பு ஓடியது. அவள் விரல்களை மென்மையாகப் பற்றியபடி சாலையைக் கடந்தான். மழை இன்னும் இறங்கிக் கொண்டிருந்தது.

சாலையைக் கடந்தவுடன் கஸ்தூரா கையை மெல்ல இழுத்துக் கொண்டாள்.

''எங்க போறோம் கஸ்தூரா?''

''நான் எங்க கூப்ட்டாலும் வரேன்னு சொன்னீங்களே.''

''ம். அதனால எங்க போறோம்னு தெரிஞ்சிக்கக் கூடாதா?''

''ம்ஹ¬ஹ¬ம். காதலி எங்க கூப்ட்டாலும் கூடச் சுத்தணும்! நரகத்துக்குக் கூப்பிட்டாக் கூட.''

''நரகத்துக்குத்தான் கூட்டிட்டு வந்திருக்கே கஸ்தூரா'' என்றான் கஸ்தூரிரங்கன், வெளியூர் பஸ்-ஸ்டாண்டைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டு.

மேடுகள், பள்ளங்கள், சத்தக் சத்தக் என்று சேற்றை வாரியிறைத்து நகர்ந்த பஸ்கள். சாக்கடை நீரில் கப்பல் விடப் பார்த்த நிர்வாணக் குழந்தைகள். பூக்குப்பைகள். பழத் தோல்கள், ஏற, இறங்கக் காத்திருந்த என்னென்னவோ மூட்டைகள். ஓயாத சப்தம். குடிகாரக் கணவனுக்காகச் சண்டை போட்டுக் கொண்டிருந்த பெண்.

கஸ்தூரா சுற்றிலும் பார்த்து, 'மாமல்ல

புரம்' என்று போர்டு மாட்டியிருந்த பஸ்ஸைக் கை நீட்டிக் காட்டினாள்.

தா ற வி ஹா டே ட நடந்து, ஏறினார்கள்.

''ரெண்டு முதலைப் பண்ணை'' என்றாள் சுகிதா.



பஸ் அந்த பஸ்-ஸ்டாண்டில் இருந்து ஏறக்குறைய நீந்திக் கொண்டு வெளிப்பட்டு வேகம் பிடித்தது.

ஜ ன் ன லு க் கு வெளியே துல்லியமான நீல வானம். அங்கங்கே புகை மேகங்கள் அலைந்தன. மிகத் தேய்ந்த மழைச்சாரல் சுகிதாவின் முகத்தை வருடியது. உடல் சிலிர்த்துக் கொண்டாள். கஸ்தூரிரங்கனின் மனத்தில் சொல்ல வொணாத கிளுகிளுப்பு.

பஸ் திடீரென்று எதிர்பாராமல் ஒரு கூரான திருப்பத்தில் திரும்ப, சுகிதா கிட்டத் தட்ட அவன் மேல் முழுமையாய்ப் பட்டு விலகினாள்.

வைத்து

அந்தத் தங்கத் தருணத்தை எப்படிச் சொல்வது? பல்லக்கின் புஷ்பக்குவியலில் பயணம் போகும் சுகம். வாய் முழுக்கப் பால்வாசனையுடன் இருக்கும் குழந்தையை முத்தமிடும் சுகம். மேகக்குவியல்களின் மேலே அந்தரத்தில் அமர்ந்து மிதக்கும் சுகம். ச்சே.

கஸ்தூரிரங்கனுக்கு வாழ்க்கை அந்த பஸ் பயணத்திலேயே முடிந்து விடாதா என்று தோன்றியது. இந்த ஸ்பரிசம் வாழ் நாள் முழுக்க, வாழ்நாள் முழுக்க நெஞ்சை வருடிக் கொடுக்கப் போகிறது என்று நினைத்தபோது உலகிலேயே மாபெரும் அதிர்ஷ்டசாலியாக அவன் தன்னை நினைத்துக் கொண்டான்.

முதலைப் பண்ணை. கண்டக்டர் பஸ்ஸை நிறுத்திவிட்டு இருமுறை 'முதலைப்பண்ணை, முதலைப்பண்ணை' என்று கத்திய பின்னர்தான் அவர்கள் இருவருக்குமே தாங்கள் வந்து கொண்டிருப்பது பஸ் என்பதும், அது நிற்கும் இடம் முதலைப்பண்ணை என்பதும் தெரிந்தது.

இறங்கினார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சிரிப்பு வந்தது. வெள்ளரிப் பிஞ்சின் கீற்றுகள். மாங்காய் பத்தைகள். இளநீர். கிணி கிணி என்று ஒப்பனரால் ஓசை எழுப்பப்பட்டு கூல் ட்ரிங்க்ஸ்.

அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

அவர்கள் உள்ளே நுழைந்த அடுத்த வினாடி முதலைப் பண்ணையின் வாசலில் ஒரு மோட்டார் பைக் வந்து நின்றது. மோட்டார் சைக்கிளின் மீது இருவர் உட்கார்ந்திருந்தார்கள். மைக்கேல் ஜாக்ஸனின் பாதிப்புடன் காணப்பட்ட இளைஞர்கள். பின்னால் பிடரிமுடி. காதில் கடுக்கன்.

சுபா

அடுத்த இதழ்...

வாசகர்களே தயாரிக்கும்

கரூர் நகரச் சிறப்பிதழ்!

- அரசியல் கொடிகள் நுழைய முடியாத கிராமம்!
- தொழில் அமைச்சர் சின்னசாமி பேட்டி...
- ஏற்றுமதி நகரம் கரூர்!

இன்னும் ஏராளச் செய்திகள்...

தொளதொளவென்று, பளபளவென்று சட்டை அணிந்திருந்தார்கள். அனாடமி பாடத்திற்கு மாடலிங் செய்ய வந்தார்கள் போல் மிக டைட்டாக பாண்ட்டும் பாயின்டட் ஷூக்களும் அணிந்திருந்தார்கள். பின்னால் உட்கார்ந்திருந்தவன் சொன்னான்,

"நான் பாத்தேன் ஜோ. அவன்தான். ஹோட்டல் வரைக்கும் போக வேண்டிய தேயில்லை."

"இல்லப்பா. ஒரு பொண்ணு இருந்தா. அவனுக்குப் பொம்பளை இன்ட்ரெஸ்ட் கெடையாது. எனக்குத் தெரியும்."

"அதென்னவோ. பொண்ணு இருந்தா. அழகான, அம்சமான ஜூட்டம். ஆனா கூட இருந்தது அவன்தான்."

"உள்ள போய்ப் பாத்துடுவோமே."

"ஓ யெஸ், ஜாக்கிரதை! அவனைத் தனியா...."

"ஓ.கே. ஓ.கே."

அவர்கள் இருவரும் நுழைவு டிக்கெட் பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள்.

கஸ்தூரிரங்கன் அவளோடு தோளோடு தோளாய் உரசிக் கொண்டு நடந்தான். முதலைப் பண்ணையில் என்ன இருந்துவிடப் போகிறது? ஆப்பிரிக்க முதலை, அமெரிக்க முதலை, அர்ஜென்டைனா முதலை, இந்திய முதலை. தடி தடியாய்த் தோல். ரம்பமாய்ப் பற்கள். எந்நேரமும் பசியால் தவிப்பது போல் பிளந்த வாய்கள். எந்நேரமும் தூக்கத்தில் இருப்பது போல் நீர் பெருகும் கண்கள். நாற்றம்.

பள்ளிக் குழந்தைகளுக்கு முதலைகள் ஆச்சரியமாய், பயமாய், அதிசயமாய் இருந்தன. சுகிதாவிற்கு இல்லை. கஸ்தூரிரங்கனுக்கும் இல்லை. ஆனால் உலகைப் பற்றிய கவலை எதுவுமின்றி நெருக்கமாய் உலவிவர ஓர் இடம். அங்கங்கே வெயில். அங்கங்கே நிழல். நடுவில் ஓரிடத்தில் மூங்கில் நிட்டு. இடுப்பு வரை கட்டப்பட்டிருந்த ஒவ்வொரு கைப்பிடிச் சுவர் அருகேயும் அவர்கள் நடந்து சென்று உலகின் அதிசயங்களை வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாய்ப் பார்ப்பது போல் பார்த்தார்கள் - வெறும் முதலைகளை.

கஸ்தூரிரங்கனுக்கு சுகிதாவின் உரசல் பிடித்திருந்தது. அவளிடமிருந்து எழுந்த பிரத்யேக வாசனை பிடித்திருந்தது. ஒவ்வொரு முதலைக்கும் அவள் கண்கள் விரிவதும், உதடுகள் குவிவதும், கையை நீட்டி விரலால் சுட்டிக் காட்டும் போது நீட்டிய விரல் நகத்தில் சூரிய ஒளி பட்டுத் தெறிப்பதும் பிடித்திருந்தது. வழ வழவென்ற செழுமையான கை. அவளருகே மிக நெருக்கமாக நின்றிருந்தான். லேசான ஸ்பரிசத்தில் அவன் நாக்கு உலர்ந்து போனது. தொண்டையில் ஏதோ ஒரு தேன் பந்து அடைத்தது போல் இருந்தது.

"ஏய்..." என்றான் லேசாகக் கரகரத்த குரலில்.

"ம்."

"எனக்கு... எனக்கு...."

"என்ன?"

"உன் இடுப்பைப் பாத்தா அப்படியே கிள்ளணும் போல இருக்கு!"

"இருக்கும்.... இருக்கும்."

"அது ரொம்ப அழகா, வழவழன்னு சரியுதா... அதனாலே...."

"போதும்... இங்கல்லாம் விரல் படக்கூடாது."

"ஏன்?"

"எல்லாம் கல்யாணத்துக்குப் பின்னாலேதான்."

"ஒரே ஒரு தடவை தொடறேனே..."

"நத்திங் டூயிங்."

"ஏய் ப்ளீஸ்..." என்று அவளிடம் கஸ்தூரிரங்கன் இறைஞ்சிக் கொண்டிருந்த நேரத்தில் அவனது பாண்ட்டின் பின் பக்கம் லேசாய்த் தட்டப்பட்டது போல் உணர்ந்தான்.

சுகிதாதான் என்று ஒரு கணம் நினைத்து மகிழ்ச்சியின் உச்சிக்குப் போனான். அடுத்த வினாடி அவள் அவ்வளவு தூரம் தைரியம் பெற்றுச் செய்யமாட்டாள் என்று நினைத்துக் கொண்டு தட்டப்பட்ட இடத்தைப் பார்த்தான்.

பாண்ட்டின் பின்புறமுள்ள பாக்கெட்டின் மேல் ஒரு பேப்பர் ஒட்டியிருந்தது. அதுவும் கடித்து மெல்லப்பட்ட சுவிங்கம் வைத்து ஒட்டப்பட்டிருந்தது.

அவன் திரும்பிய வேகம், சுகீதாவை அவளுடைய காதல் உணர்வுகளில் இருந்து மீட்டு வந்தது. அவளும் திரும்பி அவனுடைய பேன்ட்டில் ஒட்டப்பட்டிருந்த பேப்பரைப் பார்த்தாள்.

''என்ன அது?'' என்று கேட்டாள்.

''ஏதோ சின்னப் பசங்க விளையாட்டு போல'' என்று கஸ்தூரிரங்கன் அந்த பேப்பரைப் பிய்த்து எடுக்க, சுகீதா சுற்றிலும் பார்த்தாள்.

அவளுடைய பார்வையில் அவசர அவசரமாய் விலகிச் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்கள் தென்பட்டார்கள்.

''அங்க பாருங்க ரங்கா. அந்தத் தடிப் பசங்களை உங்களுக்குத் தெரியுமான்னு பாருங்க.''

கஸ்தூரிரங்கன் அவள் காட்டிய திசையில் பார்த்தான். ம்ஹூம். யாருமில்லை.

''எங்க சுகீதா?''

''வாசப்பக்கம். கம் ஆன். பாத்துருவோம்.''

''எதுக்கு? ஏதோ பேப்பரை ஒட்டவச்சுருக்கா... சின்னப் பசங்க யாராவது விளையாடி இருப்பாங்க. விடு சுகீதா'' என்று பேப்பரைப் பார்த்தான் கஸ்தூரிரங்கன்.

அந்தப் பேப்பரில் பேனாவால் ஒரு சதுரம் வரையப்பட்டு, நடுவே ஓர் முக்கோணம் வரையப்பட்டிருந்தது. உள்ளங்கை அகல பேப்பரில் இரண்டு இன்ச் சதுரம்.

''என்ன இது?'' என்று கேட்டாள் சுகீதா, அவன் முகத்தைப் பார்த்தபடி. கஸ்தூரிரங்கனின் முகம் ஒளியிழந்திருந்தது. சுகீதாவிற்கு அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே சந்தேகம் வந்து விட்டது.


சந்தேகம் என்பது ஒரு தொத்து நோய். அதனால் ஏற்படும் துன்பம் மூளையைக் கலங்கடித்து விடும். இதயத்தை அரித்து விடும். குடும்பத்தைப் போர்க்களமாக்கி விடும். திராவகம் பட்ட உடல் போல் உருக்குலைத்து விடும் இல்லறவாழ்வை. சந்தேகம் என்பது படுத்து உறங்கும் குழந்தையைக் கூடக் கொல்லத் தூண்டும்.

''தெரியலை சுகீதா'' என்றான் கஸ்தூரிரங்கன்.

''இல்ல. நீங்க எங்கிட்ட எதையோ மறைக்கறீங்க. சொல்லிடுங்க. என்ன இது ரங்கா?'' என்று படபடப்பாகக் கேட்டாள் சுகீதா.

(தொடரும்)


சட்டம், சத்தியம், ஆயுதம்
இவைகளுக் கிடையே வாழும்
ஒரு லட்சியவாதியின் கதை...
சந்தமாமா விஜயா
கம்பைன்ஸ்
சென்னை
பேபி ஆல்பட் A/c
அனுராகா A/c
சந்திரன் A/c
மற்றும் தமிழ்நாடெங்கும்
கருப்பு வெள்ளை
வண்ணத்தில்
அர்த்தமுள்ள
குடும்பச் சித்திரம்
மனோபாலா தேவா B.வெங்கட்ராமரெட்டி



''அப்பா! நேத்திக்குக் கனவுல நீங்க எனக்கு ரெண்டு செட் டிரெஸ் எடுத்துக் கொடுத்ததா வந்துச்சு!''

''அப்புறம் என்ன! ஒண்ணு தீபாவளிக்கும், இன்னொண்ணு பொங்கலுக்கும் வைச்சுக்க. இனிமே என்னை டிரெஸ் கேட்டுத் தொந்தரவு பண்ணாதே!''

- ஹரிஹரன்

''நாடு ரொம்பத்தான் முன்னேறிடுச்சு போங்க!''

''எப்படிச் சொல்றீங்க?''

''அந்தக் கட்சியில பூகம்பமாம்... உடனே அதைச் சொல்லி நிதி திரட்ட வந்துட்டாங்க!''

- சீர்காழி வி. ரேவதி





''ஹீரோ மீன் பிடிக்கிறவராக நடிக்கிறார். இந்தப் படத்துக்கு மாடர்னா ஒரு பேர் சொல்லுங்கள்?''


''தூண்டில்மேன்!''

- சி. ரஜினி அருள்

''தலைவரை வரவேற்று போஸ்டர் ஒட்டினதுக்காகவா தலைவர், அவர் மேல கோபமா இருக்கார்?''

''ஆமா, 'நடமாடும் கட்-அவுட்டே வருக'ன்னு போஸ்டர் ஒட்டினா கோபம் வராதா?''

- க. நமசிவாயம்



கற்பகம் வந்தாச்சு



ரொம்ப நாளைக்கு முந்தின கோமல் சுவாமிநாதனின் நாடகம், சினிமாவாகி இருக்கிறது. கதை, வசனம் அவரே. முழு நீள சிரியஸ் எழுத்தாளரான கோமல், தன்னைத் தானே கிச்சுகிச்சு மூட்டிக் கொண்டு, ஏனையோரையும் கிச்சுகிச்சு மூட்டும் முயற்சியில் வெகு வெற்றி பெற்றிருக்கிறார். தியேட்டர் நிறைய சிரிப்பு.

தமாஷ் படம் என்றாலே ஆள் மாறாட்டம், டின்பாஜி பார்ட்டிகளின் கோலோச்சல் என்பதாக எந்தச் சித்தர் குறிப்பு சொல்கிறதோ தெரியவில்லை; இதிலும் அதே.

மருமகள்களின் கொட்டத்தை அடக்க எஸ்.எஸ். சந்திரன், தனது டெல்லி மனைவியாகக் கூட்டி வரும் கூடைக்காரி. (ஹோல்டான் - மிகச் சரியாக மூன்று வாரம் முந்தைய விமர்சனத்தில் இதே ரீதியில், ஒரு கதை படித்த ஞாபகம் வருபவர்கள் - தற்சமயம் அதை மறக்கக் கடவார்கள்.) கூடைக்காரியின் கையில் சிக்கிக் கொண்டு, மெஷினில் இட்ட கரும்பாய்ப் பிழியப்படும் மருமகள்கள்.

அப்புறமென்ன? வழக்கம் போல் ஹஹஹா. ஹிஹிஹி. கபம்.

கதை கிடக்கிறது, டெல்லி மாமியார் ராதிகாவை விரட்ட மருமகள்களும் அவர்தம் பிறந்த வீட்டுக் கு ழா த் தி ன ரு ம் போடுகிற பிளான்கள் இருக்கிறதே... அடடா! ஒவ்வொரு தரமும் மன்மோகன் சிங் கணக்கில் அவர்கள் தீட்டுகிற திட்டமெல்லாம் சுப்பிரமணியம் சுவாமி ஆருடங்கள் மாதிரி பணாலாகிப் போகிற இடங்களில், அவசியம் தேவை - ஜெலூஸில். உதாரணமாக அந்த வெங்காய வெடி சீன்.

'A' வசனங்கள் இல்லாத வெ.ஆ. மூர்த்தி ஒரு ஆறுதல். சார்லியுடன் சேர்ந்து அவர் அடிக்கிற 'சித்தர் கஷாய' ஓட்டிக்கு அமர்க்களமான விசில் வருகல்.


ராதிகாவைச் சொல்ல வேண்டும். பிராவோ போட்ட நடிப்பு. மாமியார்த் தனம் வெகு இயல்பாக வருகிறது அவருக்கு. என்ன, ஈடுகொடுக்க ஒரு தலை இல்லை படத்தில். அர்ஜுன் இருக்கிறார். ஜென்டில்மேனுக்கு முந்தைய அர்ஜுன். எந்த நூற்றாண்டில் ஆரம்பித்தார்களோ படத்தை, பல இடங்களில் 'ஜோ' மழை.

ஏராள பாடல்கள். காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிக் கொண்டு கேட்கலாம்.

ஓர் உன்னதமான மேடை நாடகம், சாதாரண சினிமாவாகியிருக்கிறது. சும்மா போய் சிரித்து விட்டு வரலாம்!

– ஆர்.பி.ஆர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, எக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.





No more
WAIST!
Introducing
Sunline
Super - refined Sunflower Oil
புதிய சன்லைன் - சூரியகாந்தியின் அனைத்து
சிறப்புகளும் நிரம்பப்பெற்ற சமையல் எண்ணெய்.
ஊட்டச்சத்துக்கள் நிறைந்த, இதயத்திற்கு இதமான
சன்லைன்-உங்கள் எடை கூடாமலும் ஆரோக்கியத்தில்
சிறந்து விளங்கவும் முதன்மை பெற்றது.
சன்லைன், மெழுகுதன்மை, நீக்கப்பட்டதால் லேசாகவும்
தெளிவாகவும், மேலும் உடலில் சேரும் கொலஸ்ட்ராலை எதிர்க்கும்
தனித்தன்மை பெற்றது சன்லைன் சூரியகாந்தி எண்ணெய்.
DE-WAXED
ANTI-CHOLESTEROL
The taste that wins hearts!
Sunline
A quality product from S.S.D. Oil Mills Co. Ltd., Madras - 600 056
ARTIG/1283